விலை: 30 பக்கங்கள்: 28

# உதயன்

மக்கள் மனம் நிறைந்த தமிழ் நாளிதழ்

24 மணி நேரமும் உடனுக்குடன் செய்திகளை அறிந்துகொள்ள
NEWUTHAYAN.COM

சுடர் 33 கதிர் 281 ஆவணி 18ஆம் நாள் திங்கட்கிழமை 03 செப்ரெம்பர் 2018 வள்ளுவர் ஆண்டு 2049

## மூன்றாம் தவணை இன்று ஆரம்பம்

யாழ்ப்பாணம், செப்.3
அனைத்து அரச பாடசாலைகளும் மூன்றாம் தவணைக் கற்றல் நடவடிக்கைகளுக்காக இன்று திங்கட்கிழமை ஆரம்பமாகின்றன என்று கல்வி அமைச்சு அறிவித்துள்ளது.

அதேவேளை க.பொ.த. உயர்தரப் பரீட்சையின் முதலாம் கட்ட மதிப்பீட்டு நிலையங்களாக உபயோகிக்கப்படும் 37 பாடசாலைகள் மாத்திரம் அவற்றின் மூன்றாம் தவணைக் கல்வி நடவடிக்கைகளுக்காக செப்ரெம்பர் 6ஆம் திகதி ஆரம்பிக்கப்படும் என்றும் அறிவிக்கப்பட்டுள்ளது.

யாழ்ப்பாணம் இந்துக் கல்லூரியின் 3ஆம் தவணைக்கான கல்வி நடவடிக்கைகள் இன்று ஆரம்பமாகும் என்றும், க.பொ.த. உயர்த கணித, விஞ்ஞானப் பிரிவுகள் மாத்திரம் எதிர்வரும் 7ஆம் திகதி ஆரம்பமாகும் என்றும் பாடசாலை நிர்வாகத்தினர் அறிவித்துள்ளனர். (ந.159)

## திருமணம் வாழ்வில் ஒரு தடவை நடக்கும் சபைக் கூட்டமோ மாதாந்தம் நடக்கும்

### தனது செயலை நியாயப்படுத்துகிறார் விக்கி

யாழ்ப்பாணம், செப். 3
மாகாணசபைக் கூட்டத்தை விட திருமணம்தான் முக்கியமானது என்று வடக்கு மாகாண முதலமைச்சர் சி.வி.விக்னேஸ்வரன் தெரிவித்துள்ளார். » 25

## தீர்வுக்குப் பின்னரே அபிவிருத்தி எனில் போட்டியிருக்க மாட்டோம்

### சுமந்திரன் எம்.பி. தெரிவிப்பு

தென்மராட்சி, செப்.3
அரசியல் தீர்வுக்குப் பின்னரே அபிவிருத்தி என்று நாம் நினைத்திருந்தால் தேர்தலில் போட்டியிட்டிருக்க மாட்டோம் என்று தெரிவித்தார் தமிழ்த் தேசியக் கூட்டமைப்பின் பேச்சாளரும், நாடாளுமன்ற உறுப்பினருமான எம்.ஏ.சுமந்திரன்.
சாவகச்சேரியில் நேற்றுமுன்தினம் அபிவிருத்தித் திட்டம் » 24



## துரோகிகள் என்று சொல்லப்பட்டோரின் பாதையிலே இன்றைய தமிழ்த் தலைவர்களும் பயணம்

### இப்படிச் சொல்கிறார் விக்கி

யாழ்ப்பாணம், செப். 3
அரசு தருவதை ஏற்று எங்கள் இடங்களை நாங்கள் அபிவிருத்தி செய்யவேண்டும் என்று சில தமிழ்க் கட்சித் தலைவர்கள் கூறிய போது அதனை எதிர்த்தவர்கள் எமது கட்சியினர்தான். அவர்களைத் துரோகிகள் என்று அழைத்தவர்களும் அவர்கள்தான். பொருளாதாரவிருத்தியே எமக்குத் தற்போது வேண்டும் என்ற கருத்திருந்திருந்தால் நாங்கள் மற்றவர்கள் » 24

### பளைக் காற்றாலையால்

## கிடைத்தது கொடையே நிதியிழப்பு ஏதுமில்லை

### என்கிறார் முதலமைச்சர்

யாழ்ப்பாணம், செப். 3
பளையில் காற்றாலை அமைக்க வடக்கு மாகாண சபை அனுமதி வழங்கியதன் ஊடாக நிதியிழப்பு ஏற்படவில்லை என்று தெரிவித்திருக்கும் முதலமைச்சர் சி.வி.விக்னேஸ்வரன், கிடைத்த நிதி கொடை என்று குறிப்பிட்டுள்ளார்.
பளையில் காற்றாலை அமைப்பதற்கு வடக்கு மாகாண சபை முதலமைச்சர் அனுமதி » 25

# வடக்கு அமைச்சரவை கூடாததால் நெருக்கடி

### அனுமதிக்காக காத்திருக்கும் 27 முக்கிய விடயங்கள்

யாழ்ப்பாணம், செப்ரெம்பர் 3
வடக்கு மாகாண அமைச்சரவை மூன்று மாதங்களாகக் கூடவில்லை. அமைச்சரவையின் அனுமதியின்றி செயற்படுத்த முடியாத விடயங்கள் தேக்கமடைந்துள்ளன. குறிப்பாக, அமைச்சரவையின் அனுமதிக்காக சமர்பிக்கப்பட்ட முக்கிய 27 விடயங்களைச் செயற்படுத்த முடியாத நிலமை அதிகாரிகளுக்கு ஏற்பட்டுள்ளது. » 25

## கோதுமை மாவின் விலை குறைக்கப்பட வேண்டும்

### நுகர்வோர் பாதுகாப்புக்கான தேசிய இயக்கம் தெரிவிப்பு

கொழும்பு, செப்.3
கோதுமை மாவின் விலையைக் குறைக்காவிட்டால் நுகர்வோர் அபிவிருத்தி அதிகார சபையின் தலைவருக்கு எதிராகச் சட்ட நடவடிக்கை எடுக்கப்படும் என்று நுகர்வோர் உரிமைகள் பாதுகாப்புக்கான தேசிய இயக்கம் தெரிவித்துள்ளது.
வரி திருத்தம் மற்றும் ரூபாவின் விலை வீழ்ச்சி என்பவற்றை கருத்தில் கொண்டு கோதுமை மாவின் விலையை ப்ரீமா » 25

## டில்லியில் முகாமிடும் அரசியல் தலைவர்கள்

கொழும்பு, செப்.3
முன்னாள் அரச தலைவர் மகிந்த ராஜபக்ச புதுடில்லி செல்லவுள்ள அதே காலப் பகுதியில் இந்திய அரசின் அழைப்பின் பேரில், இரா. சம்பந்தன், டக்ளஸ் தேவானந்தா, மனோ கணேசன் உள்ளிட்ட கட்சித் தலைவர்களும் அங்கு பயணம் மேற்கொள்ளவுள்ளனர்.
இரு தரப்பு விவகாரங்கள் குறித்து கலந்துரையாடுவதற்காக பலகட்சிகள் குழுவை புதுடில்லிக்கு வருமாறு இந்திய அரசு அழைப்பு விடுத்துள்ளது.
எதிர்வரும் 9ஆம் திகதி தொடக்கம் 14ஆம் திகதி வரை, 10பேர் கொண்ட இலங்கையின் பல கட்சி நாடாளுமன்ற » 25

## கொக்காவிலில் விபத்து எட்டுப் பேர் படுகாயம்

### ஒருவரின் நிலமை மோசம்

கிளிநொச்சி, செப்.3
யாழ்ப்பாணம் - கண்டி வீதியில் கொக்காவில் பகுதியில் நேற்று அதிகாலை 3 மணிக்கு இடம்பெற்ற விபத்தில் 8பேர் படுகாயமடைந்துள்ளனர். அவர்களில் ஒருவரின் நிலமை » 25



### இ.போ.ச. ஊழியர்கள்

## பணிப் புறக்கணிப்பு வடக்கில் நிறுத்தம்

யாழ்ப்பாணம், செப். 3
சம்பளப் பிரச்சினை உள்பட்ப் பல்வேறு கோரிக்கைகளை முன்வைத்து இ.போ.ச. பேருந்து ஊழியர்கள் பணிப்புறக்கணிப்பில் ஈடுபடவுள்ளதாக நேற்றுக் காலை தெரிவிக்கப்பட்டிருந்தது. இந்தப் பணிப்புறக்கணிப்புப் போராட் » 25

### யாழ்ப்பாணத்தில்

## எதிர்வரும் வியாழன்று சில இடங்கள் விடுவிப்பு

யாழ்ப்பாணம், செப்.3
மயிலிட்டிக் கலைமகள் வித்தியாலயம், ஆனைக்கோட்டை கூழா முறிப்பில் இராணுவ முகாம் அமைக்கப்பட்டுள்ள காணி உள்பட சில பிரதேசங்கள் எதிர்வரும் வியாழக்கிழமை மீளக் கையளிக்கப்படவுள்ளன என்று யாழ்ப்பாணம் மாவட்டச் செயலர் தெரிவித்தார்.
அவர் மேலும் தெரிவித்ததாவது,
குடாநாட்டில் பொதுமக்களின் பாவனைக்குரிய சில இடங்களை விடுவிக்க வேண்டும் என்று இராணுவத்தினரிடம் கோரியிருந்தோம். அவற்றில் 4 இடங்களை விடுவிக்க இராணுவத்தினர் இணக்கம் தெரிவித்துள்ளனர்.
வசாவிளான் மற்றும் குரும்பசிட்டியில் கூட்டுறவுச் சங்கக் கிளைக் கட்டடம், கிராம அபிவிருத்திச் சங் » 25

### வடகிழக்கில்

## எண்ணை வள ஆய்வு பணி நேற்று ஆரம்பம்

கொழும்பு, செப்.3
இலங்கையில் எரிபொருள் வளத்தை ஆய்வு செய்வதற்கான முதற்கட்டப் பணிகளை பெற்றோலிய வளங்கள் அபிவிருத்தி அமைச்சர் அர்ஜுன ரணதுங்க நேற்று ஆரம்பித்தார். பெற்றோலிய வளங்கள் அபிவிருத்தி அமைச்சின் கீழ் இயங்கும் பெற்றோலிய வளங்கள் அபிவிருத்திச் செயலகத்தின் மூலமாக இந்த ஆய்வுப் பணிகள் ஆரம்பிக்கப்பட்டுள்ளன.
இலங்கை வடக்கு - கிழக்கு கடற்பரப்பில் எரிபொருள் வளத்தை ஆய்வு » 24

### அரசுக்கு

## தேசிய கொள்கை இல்லை

### நிதிக் குழுக் கூட்டத்தில் சாடிய இளையோர்

கண்டி, செப்.3
அரசுக்கு தேசியக் கொள்கை இல்லை என்று இளையோர் சாடியுள்ளனர்.
நாடாளுமன்ற பொது நிதிக் குழுவின் கூட்டம் முதன்முறையாக நாடாளுமன்றத்துக்கு வெளியே நேற்று இடம்பெற்றது. கண்டியில் இடம்பெற்ற இந்தக் » 25

# காற்சட்டை அணியாது ஞானசாரர் பிடிவாதம்

## சிறைச்சாலைத் தலைமையகம் நீதியமைச்சிடம் ஆலோசனை

கொழும்பு, செப்.3
வெலிக்கடைச் சிறைச்சாலை மருத்துவமனையில் சிகிச்சை பெற்று வரும் பொதுபல சேனா அமைப்பின் பொதுச் செயலர் கலகொட அத்தே ஞானசார தேரரை இன்னும் ஒரு வாரத்தில் சிறைக்குமாற்றத் தீர்மானிக்கப்பட்டுள்ளது.
சிறைச்சாலை மருத்துவமனையில் ஞானசாரதேரருக்கு அரைக் காற்சாட்டை வழங்கப்பட்டுள்ளது. எனினும் அதை அணிய அவர் மறுப்பு தெரிவித்துள்ளார்.
மாநாயக்க தேரர்கள் இணங்கினால் மட்டுமே தான் அரைக் காற்சட்டையை அணிவேன் என்று ஞானசார தேரர், சிறை அதிகாரிகளிடம் கூறியுள்ளார் என்று தெரியவருகிறது. எந்தக் காரணத்தைக் கொண்டும் காவியைக் கழற்றப் போவதில்லை எனவும் அவர் கூறியுள்ளாராம்.
வெலிக்கடைச் சிறைச்சாலை நிர்வாகம் இது தொடர்பாக சிறைச்சாலைகள் தலைமையகத்துக்கு அறிவித்துள்ளது. ஞானசார தேரர் அரைக் காற்சட்டை அணிய மறுப்பது தொடர்பில் எடுக்க வேண்டிய நடவடிக்கைகள் தொடர்பில் சிறைச்சாலை தலைமையகம் நீதியமைச்சிடம் வினவியுள்ளதாகத் தகவல் வட்டாரங்கள் தெரிவிக்கின்றன.
ஞானசார தேரருக்கு அண்மையில் சிறி ஜயவர்தனபுர மருத்துவமனையில் சத்திர சிகிச்சை மேற்கொள்ளப்பட்டது. அதனையடுத்து அவர் வெலிக்கடைச் சிறைச்சாலைமருத்துவமனைக்கு மாற்றப்பட்டார். (ற)

# கட்சித்தலைவர்களை சந்திக்கின்றார் ரணில்

## எல்லை வரம்பு மீளாய்வுக் குழு தீர்மானம் பற்றிக் கலந்துரையாட

கொழும்பு, செப்.3
எல்லை வரம்பு மீளாய்வுக் குழுவின் தீர்மானங்கள் கட்சித் தலைவர் கூட்டத்தில் கலந்துரையாடப்பட்டு மாகாண சபைத் தேர்தல் தொடர்பான தீர்மானம் எடுக்கப்படவுள்ளது.
இதற்காகதலைமைஅமைச்சர் ரணில் விக்கிரமசிங்க கட்சித் தலைவர்களை நாளை செவ்வாய்க்கிழமை சந்தித்துக் கலந்துரையாடவுள்ளார்.
எல்லை வரம்பு அறிக்கை தொடர்பாக நியமிக்கப்பட்ட மீளாய்வுக் குழுவின் தீர்மானங்கள் தொடர்பாகக் கட்சித் தலைவர்களுக்கு விளக்கம் எக்கப்படவுள்ளது. கட்சித் தலைவர்களிடம் மீளாய்வுக் குழுவின் தீர்மானங்களுக்கு ஆதரவைப் பெற்றுக் கொள்ளும் வகையில் இந்தக் கலந்துரையாடல் நடைபெறும் என்றும் தெரிவிக்கப்பட்டுள்ளது. மாகாண சபைகளுக்கான எல்லை வரம்பு அறிக்கை கடந்த வாரம் நாடாளுமன்றத்தில் விவாதத்துக்கு எடுத்துக்கொள்ளப்பட்டு பின்னர் வாக்கெடுப்புக்கு உட்படுத்தப்பட்டது. எல்லைவரம்பு அறிக்கை நாடாளுமன்றில் தோற்கடிக்கப்பட்டது.
அதையடுத்து மாகாண சபைத் தேர்தல் தொடர்பான எல்லை வரம்பு அறிக்கை குறித்து மீளாய்வு செய்யும் வகையில் ஐந்து பேர் கொண்ட மீளாய்வுக் குழு, சபாநாயகர் கரு ஜயசூரிய வால் அறிவிக்கப்பட்டது. (ற)

### தலைமை

# நீதியரசர் பதவிக்கு ஜெயந்த ஜெயசூரிய



கொழும்பு, செப்.3
உயர் நீதிமன்றத்தின் புதிய தலைமை நீதியரசராக, சட்டமா அதிபர் ஜயந்த ஜயசூரியவை நியமிப்பதற்கு, அரச தலைவர் மைத்திரிபால சிறிசேன திட்டமிட்டுள்ளார் என்றுசெய்திகள் வெளியாகியுள்ளன.
உயர் நீதிமன்ற தலைமை நீதியரசர் பிரியசாத் டெப் அடுத்தமாதம் ஓய்வு பெறவுள்ளார்.
இந்நிலையிலேயே சட்டமா அதிபராக உள்ள ஜயந்த ஜயசூரியவின் பெயரை புதிய தலைமை நீதியரசர் பதவிக்கு அரச தலைவர் முன்மொழியவுள்ளார். எனினும், உயர் பதவிகளுக்கான நாடாளுமன்ற குழுவே இந்நியமனத்தை உறுதி செய்யும் என்பது குறிப்பிடத்தக்கது. (5)

### மாணவர் கடத்தல் விவகாரம்

# ரவீந்திர விஜேகுணரத்ன இந்தவாரம் கைதாவார்?

கொழும்பு, செப்.3
இலங்கையின் மிக மூத்த படை அதிகாரியான பாதுகாப்பு அதிகாரிகளின் பிரதானி, அட்மிரல் ரவீந்திர விஜேகுணரத்ன இந்த வாரம் கைது செய்யப்படுவார் என்றும் அதற்கான ஏற்பாடுகள் மேற்கொள்ளப்படுகின்றன என்றும் கொழும்பு ஊடகங்கள் செய்தி வெளியிட்டுள்ளன.

கொழும்பில் 11 இளைஞர்கள் கடத்தப்பட்டு காணாமல் ஆக்கப்பட்ட வழக்கில் தொடர்புடைய முதன்மைச்சந்தேகநபரான கடற்படை அதிகாரி நாட்டை விட்டுத்தப்பிச்செல்ல அட்மிரல் விஜேகுணரத்ன உதவினார் என்பதற்குப் போதிய ஆதாரங்கள் தம்மிடம் உள்ளன என்று குற்றப் புலனாய்வுப் பிரிவினர் கடந்த புதன்கிழமை கோட்டை நீதிமன்றத்தில் தெரிவித்திருந்தனர். அதையடுத்து அவரைக் கைது செய்யுமாறு நீதிவான் உத்தரவு பிறப்பித்திருந்தார்.
இலங்கை இராணுவத்தின் நான்குநட்சத்திர ஜெனரல் ஒருவருக்கு இணையான பதவியில் இருக்கும், அட்மிரல் விஜேகுண ரத்ன வைக்கைது செய்ய உத்தரவிடப்பட்ட பின்னரும், அவர் வெளிநாட்டில் இருந்து வந்த பிரதிநிதிகளைச் சந்திக்கும் பணியில் ஈடுபட்டார்.
நீதிமன்ற உத்தரவு பிறப்பிக்கப்பட்ட போது, அரசதலைவர் மைத்திரிபாலசிறிசேனா, நேபாளத்தில் நடைபெற்ற பிம்ஸ்ரெக் மாநாட்டில் பங்கேற்க நாட்டை விட்டுப் புறப்பட்டுச் சென்றிருந்தார். கைது நடவடிக்கையில் தாமதம் ஏற்பட்டது. அரசதலைவர் மைத்திரிபால சிறிசேன நேபாளத்தில் இருந்து நேற்றுமுன்தினம் நாடுதிரும்பியுள்ளார்.
ரவீந்திர விஜேகுணரத்ன இந்த வாரம் கைது செய்யப்பட்டு நீதிமன்றத்தில் முன்னிலைப்படுத்தப்பட வாய்ப்புகள் உள்ளன என்று கூறப்படுகிறது.
அதேவேளை, அட்மிரல் விஜேகுணரத்ன வைக்கைது செய்வதை அரசஉயர்மட்டத்தில் உள்ள ஒருவர் தடுத்து வைத்துள்ளார் என்ற தகவலும் வெளியாகியுள்ளது. அட்மிரல் விஜேகுணரத்னவின் பதவிக்காலம் இன்றுடன் முடிவடையவுள்ளது. மதிப்பாக அவரை வழியனுப்பி வைத்த பின்னர், அவர் கைது செய்யப்படும் வாய்ப்புகள் உள்ளன என்று கூறப்படுகிறது.
2016ஆம் ஆண்டு அட்மிரல் விஜேகுணரத்ன, இலங்கைக் கடற்படைத் தளபதியாக இருந்த போது, அம்பாந்தோட்டை துறைமுகத்தில் ஊடகவியலாளரைத் தாக்கியிருந்தார். அதற்குப் பின்னரே அரச தலைவரால் பாதுகாப்பு அதிகாரிகளின் பிரதானியாக நியமிக்கப்பட்டார் என்பதும் குறிப்பிடத்தக்கது. (ற)

# சிறப்பு நிபுணர் இலங்கைக்கு வருகின்றார்

கொழும்பு, செப்.3
ஐ.நா. சபையின் வெளிநாட்டுக் கடன் மற்றும் மனித உரிமைகள் தொடர்பான சிறப்பு நிபுணர் ஜீவான் பப்லோ பொகோஸ் ஸ்வ்ஸ்கி இலங்கைக்கு இன்று வருகின்றார்.
எதிர்வரும் 11ஆம் திகதி வரை இலங்கையில் தங்கியிருக்கும் அவர் அரச தலைவர், தலைமை அமைச்சர், அரச பிரதிநிதிகளையும், சிவில் தரப்பினரையும் சந்தித்துக் கலந்துரையாடவுள்ளார் என்று தெரிவிக்கப்படுகின்றது.
இலங்கையின் பொருளாதாரம், நாட்டின் கடன் போன்ற விடயங்களை ஆராய்ந்து எதிர்வரும் மார்ச் மாதம் நடைபெறவுள்ள ஐ. நா. மனித உரிமைகள் சபை அமர்வில் சமர்ப்பிப்பார் என்று கூறப்படுகின்றது.
போரின் பின்னரான இலங்கையின் நிலமைகள் தொடர்பில் ஆராய்வதற்காகப் பரந்தளவிலான சந்திப்புக்களை சிறப்பு நிபுணர் மேற்கொள்வார் - என்றும் தெரிவிக்கப்பட்டுள்ளது. (ற)

# கறுப்புப் பட்டியலில் 30ஆயிரம் படையினர்

## நாட்டை விட்டு வெளியேறத் தடை

கொழும்பு, செப்.3
நாட்டை விட்டு வெளியேறுவதற்குத்தடைவிதிக்கப்பட்டு 62 ஆயிரத்து 338 இலங்கையர்கள் கறுப்புப் பட்டியலில் சேர்க்கப்பட்டுள்ளனர் என்று மூத்த அரச புலனாய்வு வட்டாரங்கள் தெரிவித்துள்ளன. இவ்வாறு தடைவிதிக்கப்பட்டுள்ளவர்களில் சுமார் 30 ஆயிரம் வரையான பாதுகாப்புப் படையினர் உள்ளனர்.
அவர்களில் சாதாரண சிப்பாய்களில் இருந்து, மூத்த அதிகாரிகள் வரை உள்ளடங்கியுள்ளனர். இவர்களுக்கு எதிராக பல்வேறு குற்றச்சாட்டுகள் நீதிமன்றங்களில் நிலுவையில் உள்ளன.
இந்தப் பட்டியலில் உள்ள சிறப்பு அதிரடிப் படையினரில் பெரும்பாலானோர் விடுமுறை பெறாமல் கடமைக்குச்சமூகமளிக்காமல் இருப்பவர்களாவர். இவர்களில் பலருக்கு எதிராக, நீதிமன்றங்களில் குற்றவியல் வழக்குகள் உள்ளன.
மேலும் தடைவிதிக்கப்பட்டுள்ளவர்களில், அரசியல்வாதிகள், மதகுருமார், மோசடிப்போ்வழிகள், புலம்பெயர் தமிழ் அனுதாபிகள், மத அடிப்படைவாதிகள், ஆள்கடத்தல் சந்தேக நபர்கள், போதைப்பொருள்கடத்தல்புள்ளிகள், ஆகியோரும் அடங்கியுள்ளனர்.
இவ்வாறுதடைவிதிக்கப்பட்டுள்ளவர்கள் நாட்டைவிட்டு வெளியேறுவதைத் தடுக்கும் நடவடிக்கையில் குடிவரவு, குடியகல்வு திணைக்களம், சிவில் வானூர்திப் போக்குவரத்து அதிகாரிகள், மற்றும் ஏனைய பங்காளர்களுடன் இணைந்து அரச புலனாய்வு அமைப்புகள் ஈடுபட்டுள்ளன. (5)



பொன்னாலை சிறி வரதராஜப் பெருமாள் ஆலயத்தின் வருடாந்தத் தேர்த்திருவிழா நேற்று ஞாயிற்றுக் கிழமைமதியம் 12 மணிக்கு நடைபெற்றது.

# ஏகே –47 துப்பாக்கிகள் வாங்குகிறார் பொன்சேகா

கொழும்பு, செப்.3
வனவாழ் உயிரினங்கள் திணைக்களத்துக்கு 42மில்லியன் ரூபா செலவில் 2 ஆயிரத்து 568 ஏகே-47 துப்பாக்கிகளைக் கொள்வனவு செய்வதற்கு அமைச்சரவை அனுமதி அளித்துள்ளது.
யானைகள் கொல்லப்படுவதில் இருந்து பாதுகாப்பதற்கும், மனிதர்கள்யானைகள் இடையிலான மோதல்களில் இருந்து மனிதர்களைப் பாதுகாப்பதற்குமே இந்தத் துப்பாக்கிகள் கொள்வனவு செய்யப்படவுள்ளன.
வனவாழ் உயிரினங்கள் அமைச்சர் பீல்ட்மார்சல்சரத் பொன்சேகா இதற்கான அமைச்சரவைப் பத்திரத்தை சமர்ப்பித்திருந்தார்.
சீனத் தயாரிப்பான ரி-56 ரகத் துப்பாக்கிகளை விட, ரஷ்யத் தயாரிப்பான ஏகே-47 துப்பாக்கிகள் தரமானவை என்று பீல்ட் மார்சல் சரத் பொன்சேகா பரிந்துரைத்துள்ளார். 2 ஆயிரத்து 568ஏ.கே.47துப்பாக்கிகள் கொள்வனவு செய்யப்படவுள்ளன. இந்த ஆண்டில், தலா16 ஆயிரம் ரூபா என்ற அடிப்படையில், ஆயிரத்து 500துப்பாக்கிகள் 24மில்லியன் ரூபாவுக்கு கொள்வனவு செய்யப்படும். அடுத்த ஆண்டு ஆயிரத்து 68 துப்பாக்கிகள், தலா 17 ஆயிரம் ரூபா வீதம், 18 மில்லியன் ரூபாவுக்கு கொள்வனவு செய்யப்படும்.
அவற்றில் 2 ஆயிரத்து 334 துப்பாக்கிகள், வன உயிரியல் பூங்காக்களில் உள்ள சிறிய பராமரிப்புக் குழுக்களுக்கு வழங்கப்படும். 234 துப்பாக்கிகள் உதவி வனத்துறை அதிகாரிகளுக்கு வழங்கப்படும். (ற)



காலம்சென்ற தமிழக முன்னாள் முதலமைச்சர் கருணாநிதி மற்றும் இந்தியாவின் முன்னாள் தலைமை அமைச்சர் வாஜ்பாய் ஆகியோருக்கான நினைவேந்தல் நிகழ்வுகளின் நேற்று பி.ப. 3மணிக்கு, கூட்டுறவு சபை மண்டபத்தில் இடம்பெற்றது. இந்நிகழ்வில் யாழ்ப்பாணத்தில் அமைந்துள்ள துணைத் தூதரகத்தின் கொன்சியூலர் ஜெனரல் பாலசந்திரன் முதன்மை விருந்தினராகக் கலந்து கொண்டார். தமிழ்த் தேசியக் கூட்டமைப்பின் நாடாளுமன்ற உறுப்பினர் சி.சிறீதரன் மற்றும் யாழ்ப்பாணப் பல்கலைக்கழகப் பேராசிரியர் கே.ரி. கணேசலிங்கம் ஆகியோரும் நிகழ்வில் பங்கேற்றனர். (5.6)

# யாழ்ப்பாணத்தில் கலாசார மையம் மாங்குளத்தில் மரபுவழி மாதிரிக் கிராமம்

## அமைக்கும் பணிகள் ஆரம்பம்

யாழ்ப்பாணம் ,செப். 3

அழிந்து வரும் தமிழரின் கலை,கலாசாரத்தை பாதுக்காக்கும் வகையில் யாழ்ப்பாணத்தில் கலாசார மையத்தையும் ,மாங்குளத்தில் மரபுவழி மாதிரிக் கிராமம் ஒன்றையும் அமைப்பதற்கான பணிகள் ஆரம்பிக்கப்பட்டுள்ளதாக வடக்கு மாகாண கல்வி அமைச்சர் க.சர்வேஸ்வரன் தெரிவித்தார்.

வடக்கு மாகாண கல்வி அமைச்சில் நேற்று இடம்பெற்ற ஊடகவியலாளர் சந்திப்பிலேயே அவர் இதனைத் தெரிவித்தார். அவர் மேலும் தெரிவித்ததாவது,

எமது கலாசாரம் மக்கள் மறக்கும் அளவுக்கு அழிந்து வருகின்றது. ஆகவே எங்களின் பண்டையகால மரபுகளையும் கலாசாரங்களையும் ஆவணப்படுத்தவேண்டிய கட்டாய தேவை உள்ளது.உள்நாட்டுப் போர் காரணமாக எமது ஆரம்பகாலத்து மரபுகள்.ஆக்கங்கள் அழிவடைந்துள்ளன.மரபு ரீதியான வாழ்வியலும். ஏற்பட்ட மாற்றங்களும் எவ்வாறு உள்ளது என்பதை மக்கள் பார்த்து விளங்கிக் கொள்ளும் வகையில் உருவாக்க வேண்டும்.

அதேபோல மரபுவழி வாழ்வியலை வெளிப்படுத்தும் மாதிரிக் கிராமம் ஒன்றை உருவாக்க வேண்டும். அங்கு மரபுவழியில் பயன்படுத்தப் பட்ட பொருள்கள், விவசாய முறை.வீட்டின் அமைப்பு.ஆகிய வற்றை உள்ளடக்கி அமைக்கவுள்ளோம்.

அதனை ஒரு திறந்த வெளி அருங்காட்சியகமாக அமைப்பதால் சுற்றுலா பயணிகள் பார்க்க கூடியதாக இருக்கும்.அந்தவகையில் யாழ்ப்பாணத்தில் கலாசார மையத்தையும் மாங்குளத்தில் மரபுவழி மாதிரிக் கிராமம் ஒன்றையும் அமைப்பதற்கான பணிகள் ஆரம்பிக்கப்பட்டுள்ளது.எமது மாகாண சபையின் பதவிக்காலம் இன்னும் குறுகிய காலத்தில் முடிவடைகின்றது.ஆனாலும் எமக்கு பின்னால் வரும் அதிகாரிகளோ அல்லது அமைச்சரோ இதனைத் தொடருவார்.அதற்கான முறையிலேயே இந்த திட்டம் ஆரம்பிக்கப்பட்டுள்ளது என்றார். (8)

# யானை தாக்கியதால் ஒருவர் படுகாயம்

வவுனியா ,செப். 03

வவுனியா நெடுங்கேணி மருதோடைப் பகுதியில் யானைதாக்கியதால் குடும்பத்தலைவர் ஒருவர் படுகாயமடைந்து .வவுனியா மருத்துவமனையில் அனுமதிக்கபட்டுள்ளார்.

வயலில் வேலைசெய்துகொண்டிருந்தவர்களுக்கு உணவு கொண்டு சென்றவேளை அஅந்தப் பகுதியில் நின்ற காட்டு யானைஅவரைத் தாங்கியுள்ளது.

இதனால் படுகாயமடைந்தவர் அங்கிருந்தவர்களின் உதவியுடன் நெடுங்கேணி மருத்துவமனையில் அனுமதிக்கப்பட்டுள்ளார். அங்கிருந்து மேலதிக சிகிச்சைக்காக வவுனியா மருத்துவமனையில் அனுமதிக்கபட்டுள்ளார் .

நெடுங்கேணி துவரங்குளத்தை சேர்ந்த விசுவலிங்கம் வயது 45 என்ற குடும்பத்தலைவரே படுகாயம்டைந்துள்ளமை குறிப்பிடத்தக்கது. (110)

# வட்டுவாகல் கடற்படையினர் முகாமிலுள்ள கால்நடைளை மீட்டுத்தருமாறு உரிமையாளர்கள் கோரிக்கை

முல்லைத்தீவு .செப் .3

முல்லைத்தீவு வட்டுவாகல் கடற்படையினர் முகாமில் நிற்கும் கால்நடைகளை பிடித்துச் செல்லுமாறு கடற்படையினர் பிரதேச செயலகத்திற்கு அனுமதி வழங்கியபோதும், அதனை நிறைவேற்ற பிரதேச செயலகம் தவறிவிட்டதாக கால்நடை உரிமையாளர்கள் குற்றம் சாட்டுகின்றனர்.

வட்டுவாகல் கடற்படைத் தளம் அமைந்துள்ள 617 ஏக்கர் காணிகள் கடற்படையினரின் பாவனைக்காக அபகரித்துள்ள பிரதேசத்திற்குள் சுமார் நூறு மாடுகள் அகப்பட்டுள்ளன.

இவ்வாறு அகப்பட்டுள்ள மாடுகளை மீட்டுத்தருமாறு கடந்த 2 ஆண்டுகளாக மாவட்டச் செயலகம் ஊடாக கோரிக்கை விடுத்தோம்.

முல்லைத்தீவு மாவட்டம் வட்டுவாகல்ப் பகுதியில் மக்களின் வாழ்விடத்தினை மட்டும் கடற்படையினர் அபகரிக்கவில்லை. இப்பகுதி மக்களின் ஜீவனோபாயத்திற்கான கால்நடைகளைக்கூட அடாத்தாகப்பிடித்து முட்க்கம்பி வேலிகளுக்குள் வைத்து அதன் வருமானங்களைபெறுகின்றனர் . ஆனால் இதன் உரிமையாளராகிய நாம் விலை கொடுத்துப் பால் வாங்கும் நிலையில் உள்ளதனையும் சுட்டிக்காட்டினோம்.

இதனையடுத்து நீண்ட முயற்சிகளுக்கு பின் முகாம் பகுதியில் உள்ள கால்நடைகளை பிடிப்பதற்கு படையினர் அனுமதித்தனர் . அதனையடுத்து கால்நடைகளைபிடிப்பதற்கான முயற்சிகள் இடம்பெற்றன. இருப்பினும் சுமார் 10 மாடுகள் கூட பிடிக்கப்படாது முயற்சி கைவிடப்பட்டது. எஞ்சிய மாடுகளையும் பிரதேச செயலகம் பிடித்து தர வேண்டும். என மக்கள் கோரிக்கை விடுக்கின்றனர்.

இந்த விடயம் தொடர்பில் கரைத்துரைப்பற்று பிரதேச செயலருடன் தொடர்பு கொண்டு கேட்டபோது ,

குறித்த கடற்படை முகாமில் கால் நடைகள் இருப்பது சுட்டிக் காட்டப்பட்டதனையடுத்து, கடற்படை முகாம் அதிகாரிகளுடன் தொடர்புகொண்டு மாடுகளைப் பிடிப்பதற்கான அனுமதியும் பெறப்பட்டது.

அதன் பயனாக முன்னாள் பிரதேச செயலர் மாடுகளை பிடிக்கக்கூடியவர்களை கூட்டிச் சென்று முதலில் தடம் வைத்து பிடிக்க முயன்றனர். அப்போது ஒரு மாடு மட்டுமே அகப்பட்டது. அதன் பின்னர் நேரடியாகவே துரத்திப் பிடித்தனர் அதன்போதும் 7 மாடுகள் மட்டுமே பிடிக்க முடிந்தது.

இந்த நிலையில் மாடுகளைப் பிடிப்பவர்கள் இந்த மாடுகளை பிடிப்பது தமது கூலிக்குப் பொருந்தாது என கைவிட்டுச் சென்றனர். இதன் காரணத்தினாலேயே குறித்தபணி தடைப்பட்டது. இருப்பினும் மீண்டும் கடற்படை அதிகாரிகளுடன் தொடர்பு கொண்டு அவற்றினை பிடிப்பதற்கான மாற்று ஏற்பாடுகள் தொடர்பில் நடவடிக்கை மேற்கொண்டு கால்நடைகளை பிடித்து ஒப்படைக்க ஆவண செய்யப்படும். என்றார். (105)

# புதையல் தோண்டிய ஆறுபேர் கைது



வவுனியா .செப் 03

வவுனியா ஓமந்தைப் பொலிஸ் பிரிவுக்குட்பட்ட பனிக்கன் நீராவிபகுதியில் புதையல் தோண்டமுற்றபட்ட நிலையில் பெண்ஒருவர் உட்பட ஆறுபேர் ஓமந்தைப் பொலிஸாரால் கைதுசெய்யபட்டுள்ளனர்.

இது தொடர்பாக தெரியவருகையில் : ஓமந்தைப் பொலிஸாருக்குக் கிடைத்த இரகசியத் தகவலின் அடிப்படையில் .நேற்று மதியம் 12 மணியளவில் பொலிஸ் பொறுப்பதிகாரி சுரேஸ் சில்வா தலைமையில் உபபொலிஸ்பரிசோதகர் சி.சன்னஸ்கல, சாயன்ட்களான சமரசிங்க.கொஸ்தாபல்களான சிறி வர்தன,நிலந்த,புவிசங்கர்.பிரபாத்குமார், விராஜ் , ஆகியோரைகொண்ட பொலிஸ் குழுவினரின் அதிரடிநடவடிக்கையிலேயே நேற்றுக் காலை பனிக்கன் நீராவிபகுதியில் உள்ள தனியார்காணி ஒன்றில் காணி உரிமையாளரின் அனுமதியுடன் மேற்கொள்ளபட்ட புதையல்அகழ்வு நடவடிக்கை இடைநிறுத்தப்பட்டது .

அதனைமேற்கொண்ட பெண் ஒருவரும் மாங்குளம் பகுதியைசேர்ந்த பூசாரி ஒருவருமாக ஆறு நபர்கள் கைதுசெய்யபட்டுள்ளனர். அவர்களிடமிருந்து புதையல்தோண்டுவதற்கு பயன்படுத்தப்பட்ட இயந்திரம் .பிக்கான்கள், .பூசை பொருள்கள் என்பனவும் பொலிஸாரால் கைப்பற்றபட்டன. கைதுசெய்யபட்டவர்கள் இன்று நீதிமன்றில் ஆயர்படுத்தப்படவுள்ளதோடு போலீசார் மேலதிக விசாரணைகளை மேற்கொண்டு வருகின்றனர் . (110)

# சுகாதாரமருத்துவ அதிகாரி பணிமனைக்கு அடிக்கல் நடும் நிகழ்வு

யாழ்ப்பாணம் ,செப் 03

நீண்ட காலமாக தனியான சுகாதாரமருத்துவ அதிகாரி பணிமனை இன்றி ,ஊர்காவற்துறை சுகாதார மருத்துவ அதிகாரி பணிமனையின் கீழ் காரைநகர் பணிமனை இயங்கி வந்தமை குறிப்பிடத்தக்கது.

கடந்தசிலதினங்களுக்கு முன்னதாகதெல்லிப்பளை சுகாதார மருத்துவ அதிகாரியாக கடமை ஆற்றி வந்த மருத்துவர் பரா.நந்தகுமார் இடமாற்றலாகி ஊர்காவற்துறை , காரைநகர் சுகாதார மருத்துவ அதிகாரியாக நியமிக்கப் பட்டமை குறிப்பிடத்தக்கது. இந்த நிலையில் காரைநகர் சுகாதார மருத்துவ அதிகாரி பணிமனைக்கு நேற்று அடிக்கல் நடப்பட்டது.

பிராந்திய சுகாதார பணிப்பாளர் மருத்துவ கலாநிதி நந்தகுமாரன்.ஊர்காவற்துறை காரைநகர் சுகாதார மருத்துவ அதிகாரி பரா.நந்தகுமார், -நில அறக்கொடையாளர் கதிர்காம நாதன் இணையர் , காரைநகர் சுகாதார மருத்துவ அதிகாரி பணிமனை உத்தியோகத்தர்கள் ,ஊழியர்கள் கலந்து கொண்டு அடிக்கல் நட்டனர். தமிழ் மந்திரங்கள் முழங்க பூமி பூசையுடன் வழிபாடுகளும் இடம் பெற்றது.



# சாந்தசோலையில் இளைஞர்குழு அட்டகாசம்

வவுனியா.செப் 03

வவுனியா சாந்தசோலைப் பகுதியில் நேற்று மதியம் 2 மணியளவில் .மதுபோதையில் இரும்புகம்பிகளுடன் வீடொன்றுக்குள் சென்ற மூன்றுபேரைகொண்ட இளைஞர் குழு .வீட்டின்வாயிலை உடைத்து சேதப்படுத்தியதுடன், வீட்டின்மீது கற்களை எறிந்தும் தாக்குதல் நடத்தி உள்ளனர்.



இதன்போது வீட்டிற்குள் இருந்த குடும்பத்தலைவர் மற்றும் கர்பவதி யானஅவரது மனைவி, இரு குழந்தைகள் உட்பட ஐந்து பேர் செய்வதறியாது தவித்ததுடன் வீட்டின் கதவை மூடிவிட்டு உள்ளேயே இருந்துள்ளனர்.

பின்னர் அவசர பொலிஸாருக்கு தகவல்வழங்கபட்டது. பொலிஸார் வருவதற்கு முன்னரே குறித்த இளைஞர்கள் தாக்குதலைமேற்கொண்டு விட்டு உந்துருளியில் தப்பிச் சென்றுள்ளனர். கொடுக்கல் வாங்கல் பிரச்சினை காரணமாக் குறித்த சம்பவம் இடம்பெற்றதாக வீட்டின் உரிமையாளர் தெரிவித்தார். சம்பவம் தொடர்பான விசாரணைகளை வவுனியா குற்றத்தடுப்பு பொலிஸார் மேற்கொண்டு வருகின்றனர். (110)



# முள்ளியில் கழிவுகள் தாராளம் நாற்றத்துக்கு மத்தியில் பயணம்

## விரைவில் சீராகும் என்கின்றன சபைகள்

**யாழ்ப்பாணம், செப். 3**

**வீதியில் செல்லும் முள்ளி வெளியில், பொதுமக்களுக்கு நோய்கள் ஏற்படக் கூடிய வகையில், திண்மக்கழிவுப் பொருள்கள் மலைபோல குவிந்துள்ளன. சுகாதாரப் பகுதியினரும் உள்ளூராட்சி சபையினரும் இதைக்கண்டும் காணாததுபோலச் செயற்படுகின்றனர் என்று பொதுமக்கள் கவலை தெரிவிக்கின்றனர்.**

ஞாயிற்றுக்கிழமைகளிலும் கோவிலில் நடைபெறும் பூசைகள், வழிபாடுகளுக்கு தென்மராட்சிப் பிரதேசத்தைச் சேர்ந்தவர்களும் மற்றும் பலரும் வரணி ஊடாகப் பருத்தித்துறை வல்லிபுர ஆழ்வார் கோவிலுக்குச் செல்கின்றனர். தென்மராட்சி எல்லை தாண்டியதும் முள்ளிவெளி தொடக்கம் சாலையில் மூக்கைப் பிடித்துச் செல்லவேண்டிய நிலை ஏற்பட்டுள்ளது. அந்தளவுக்கு மலக்கழிவுகளும், குப்பைகளும், இறந்த கால்நடைகளின் கழிவுகளும் தாராளமாகக் கொட்டப்பட்டுக் காணப்படுகிறன. இந்தப் பகுதியில் குடியிருப்பு கள் இல்லாததால் மக்கள் வாகனங்களில் கழிவுகளைக் கொண்டு வந்து நாளாந்தம் கொட்டிவிட்டுச் செல்கின்றனர். இதனை உரிய உள்ளூராட்சி சபையினர் அப்புறப்படுத்துவது இல்லை. இதனால் வீதியில் செல்லும் பொதுமக்கள் சுகாதாரச் சீர்கேட்டை எதிர்நோக்குகின்றனர்.

திண்மக்கழிவுகளுடன் வீட்டின் பாவனைக்கு உதவாத நீர்ஏந்து பொருள்களும் காணப்படுகின்றன. மழைகாலத்தில் இவற்றில் மழை வெள்ளம் தேங்கிநின்று டெங்கு நுளம்புகள் உற்பத்தியாகி பரவிச் செல்லும்நிலை நீடிக்கிறது என்று தெரிவிக்கின்றனர்.

"முள்ளியில் இருந்தது படையினர் வெளியேறியபின்னர் சட்டவிரோத செயற்பாடுகளால் பொலிஸ் சோதனைச்சாவடி அமைக்கப்பட்டுத் தினமும் அங்கு பொலிஸார் கடமையில் இருந்தனர். இதனால் திண்மக் கழிவுகள் எவரும் போடுவதில்லை. பொலிஸ் சோதனைச் சாவடி அங்கிருந்து அப்புறப்படுத்தப்பட்ட பின்னர் அந்தப் பகுதி சட்டவிரோத செயற்பாடுகளுக்கு உகந்த இடமாகக் காணப்படுகிறது. மக்கள் தமது வீடுகளில் காணப்படும் குப்பைகள் உட்பட கழிவுப் பொருள்களைத் தாராளமாகக் கொட்டிவிட்டுச் செல்கின்றனர். தினமும் நூற்றுக்கணக்கான வாகனங்கள் இரவு வேளைகளில் வீதியில் செல்வதால் எந்த வாகனத்தில் கழிவுப் பொருள்கள் கொண்டு செல்கிறார்கள் என்பதைக் கண்டறிய முடியவில்லை.

இதனைக் கட்டுப்படுத்த வேண்டுமாயின் பொலிஸாரின் ரோந்து சேவை இடம்பெறவேண்டும். அல்லது உள்ளூராட்சி சபையினர் பாதுகாப்பு வேலிகளை அமைத்து காவலாளியை நியமித்து கழிவுப் பொருள்கள் கொட்டுவதைத் தடை செய்ய வேண்டும்" என்று அந்தப் பிரதேசத்தை அண்மித்துள்ள மக்கள் கூறுகின்றனர்.

இது தொடர்பாக வடமராட்சி உள்ளூராட்சி சபைகளுடன் தொடர்புடையவர்களுடன் தொடர்பு கொண்டு கேட்ட போது, பருத்தித்துறை நகரசபை, பருத்தித்துறை பிரதேச சபை, கரவெட்டிப் பிரதேச சபை போன்றவற்றின் எல்லைக்குள் திண்மக்கழிவுகளைக் கொட்டக் கூடிய நிரந்தர இடம் இன்னமும் கிடைக்காததால் வல்லிபுரப் பகுதியில் அரசகாணியொன்றில் திண்மக்கழிவுகளைக் கொட்டி வருகின்றனர். கரவெட்டிப் பிரதேச சபையால் திண்மக் கழிவுகளைப்பசளையாக்கும்திட்டத்துக்கான வேலைத்திட்டம் இடம்பெற்று வருவதால் திண்மக்கழிவுப் பிரச்சினைகள் விரைவில் தீரும் என்று தெரிவித்தனர்.

சுகாதாரப் பகுதியினருடன் தொடர்பு கொண்டு கேட்டபோது, திண்மக்கழிவகற்றல் பணிகள் அனைத்தும் உள்ளூராட்சி சபைகளிடமே உள்ளன. அதற்கான வாகனங்களும் உள்ளன. அவர்களின் கடமைகளில் நாங்கள் தலையிட முடியாது. இருப்பினும் பொதுமக்களுக்குப் பாதிப்புத் தரக்கூடிய வகையில் திண்மக்கழிவுகள் கொட்டப்படுவதை ஏற்றுக் கொள்ளமுடியாது. இரவு வேளைகளில் திண்மக்கழிவுகளும், மலக்கழிவுகளும் முள்ளிப் பகுதியில் கொட்டப்படுவதன் தாக்கம், மழைகாலம் ஆரம்பித்த பின்னர்தான் அனைவருக்கும் தெரியவரும். பொதுமக்கள் உள்ளூராட்சி சபைகளுடன் இணைந்து திண்மக்கழிவுகளை அகற்றுவதற்கு முயற்சிக்க வேண்டுமே தவிர தாங்கள் நினைத்தவாறு கண்ட இடங்களிலும் கழிவுகளைக் கொட்டுவது பெருஞ் சுகாதாரச் சீர்கேடாகும். மழை காலத்துக்கு முன்னர் இந்தக் கழிவுப் பொருள்கள் அகற்றப்படாவிடின் மழை காலத்தின் பின்னர் பிரதேச மக்களுக்குப் பெரும் பாதிப்பை ஏற்படுத்தும் எனவும் தெரிவித்தனர்.

இதேவேளை, சில பிரதேச சபைகள் இணைந்து கழிவுகளை மீள்சுழற்சிக்கு உட்படுத்தும் நிலையத்தை அமைக்கவுள்ளதாகக் கூறியிருக்கின்றனர். (4.9)




## "எறும்பூரும் பாதைகள்" கவிதை நூல் வெளியீடு

யாழ்ப்பாணம், செப் 3

நிவேதிகாவின் "எறும்பூரும் பாதைகள்" என்ற கவிதை நூலின் வெளியீட்டு நிகழ்வு நேற்றுமுன்தினம் யாழ்ப்பாணம் கச்சேரியடியில் உள்ள கிறிஸ்தவ வாலிபர் சங்க மண்டபத்தில் முற்பகல் 9.30 மணியளவில் இடம்பெற்றது.

கவிஞர் வே. முல்லைத்தீபன் தலைமையில் நடைபெற்ற நிகழ்வில் முதன்மை விருந்தினராக வடக்கு மாகாண உதவிக் கல்விப் பணிப்பாளர் இ.ஹம்சத்வனி கலந்து கொண்டார். செந்தமிழ்ச்சொல்லருவி ச.லலீசன் சிறப்புரை ஆற்றினார். துணுக்காய் பிரதேச கலாசார உத்தியோகத்தர் கு. றஜீபன் ஆய்வுரை நல்கினார்.

நூலை முதன்மை விருந்தினர் இ.ஹம்சத்வனி, யாழ்ப்பாணம் தமிழ்ச்சங்கத் தலைவர் ச.லலீசன் ஆகியோர் இணைந்து வெளியிட்டு வைத்தனர்.

நூலின் முதற்பிரதியை இந்து மகளிர் கல்லூரி உப அதிபர் ஜெ.ரஜீவன் பெற்றுக்கொண்டார்.

## நாடகமும் அரங்கியலும் மாணவர்களுக்கான இருநாள் பயிற்சிப்பட்டறை

யாழ்ப்பாணம், செப். 3

திருமறைக் கலாமன்றத்தின் ஏற்பாட்டில் ஜி.சி.ஈ. உயர்தரப் பரீட்சையில் நாடகமும் அரங்கியலும் பாடத்தில் எழுத்துப்பரீட்சைக்கு தோற்றி விரைவில் செய்முறைப்பரீட்சைக்குத் தோற்றவுள்ள மாணவர்களுக்கான இருநாள் பயிற்சிப்பட்டறை இடம்பெறவுள்ளது.

எதிர்வரும் 8ஆம் 9 ஆம் திகதிகளில்(சனி, ஞாயிறு) காலை 9.00மணிதொடக்கம்பிற்பகல்2.30மணிவரையாழ்ப்பாணத்தில்அமைந்துள்ளதிருமறைக்கலாமன்றத்தின்கலைத்தூது கலையகத்தில் இடம்பெறும். பயிற்சிநெறியில் பங்குபற்றவிரும்பும் மாணவர்கள் 07ஆம் திகதி வெள்ளிக்கிழமைக்குமுன்னதாகதிருமறைக்கலாமன்றஅலுவலகத்தில் தமது பெயர், விபரங்களைப் பதிவுசெய்து கொள்ளுமாறு வேண்டப்படுகின்றார்கள்.

# நல்லூரில் இன்று

நல்லூர்துர்க்காதேவிமணிமண்டபத்தில்இன்றுஇசைக்கச்சேரி இடம்பெறும். இதில் பாட்டு பரமேஸ்வரி கணேசன், வயலின்சு.கோபிதாஸ்மிருதங்கம்நா.மாதவன்,கெஞ்சிரா க.நந்தகுமார் ஆகியோரும் நிகழ்த்தவுள்ளனர். இலங்கை இளங்கலைஞர் மன்றத்தின் ஏற்பாட்டில் இடம்பெறும் இந்த நிகழ்வுமாலை6.45மணிதொடக்கம்8.15வரைஇடம்பெறும்.

★★★

நல்லூர்மனோன்மணி அம்மன் கோவிலில் "கந்தர் அலங்காரம்" என்ற தலைப்பில் சைவசின்மயர் செ.கந்தசத்தியதாசன் சொற்பொழிவாற்றுவார். உலகசைவத்திருச்சபையின் ஏற்பாட்டில் இடம்பெறும் இந்த நிகழ்வு மாலை 6.45 மணி தொடக்கம் 7.45 மணிவரை இடம்பெறும்.

★★★

நல்லை ஆதினகுருமூர்த்த ஆலய மண்டபத்தில் தெய்வீகத் தொடர் இசைப் பேருரையில் இன்று "வீரவாகு தேவர் தூது" என்ற தலைப்பில் பேருரை இடம்பெறும். கலாபூசணம் பிரம்மசிறிசிவ. வை. நித்தியானந்தசர்மாவுடன் அணிசெய் கலைஞர்கள் இதை வழங்குவர். நல்லூர் சைவ மகா சபை நடத்திவரும் இந்த நிகழ்வு மாலை 6.30 மணி தொடக்கம் 8 மணிவரை இடம்பெறும்.

★★★

சிறிலசிறி ஆறுமுகநாவலர் மணிமண்டபத்தில், பிற்பகல் 3.00 மணி தொடக்கம் மாலை 5.00 மணி வரை நல்லூர் ஸ்ரீஷ்கந்தபதிக் கலாமன்றக் குழுவினரின் பஜனை நிகழ்வு இடம்பெறும். நல்லை திருஞானசம்பந்தர் ஆதீனக் கலா மண்டபத்தில் நல்லை திருஞானசம்பந்தர் ஆதீனக் குரு முதல்வர் சிறிலசிறி சோமசுந்தர தேசிக ஞானசம்பந்த பரமாசார்ய சுவாமிகள் திருமுன்னிலையில், இந்துசமய, கலாசார அலுவல்கள் திணைக்கள உதவிப்பணிப்பாளர் இ. கர்ஜின் தலைமையில் இடம்பெறும் நிகழ்வில் யாழ்ப்பாணப் பல்கலைக்கழக மேனாள் இந்துநாகரிகத் துறைத்தலைவர், பேராசிரியர் மா.வேதநாதன் முதன்மை அதிதியாகக் கலந்துகொள்ளவுள்ளார்.

பருத்தித்துறைப்பிரதேச அறநெறிப்பாடசாலை மாணவர்களின் கலை நிகழ்வுகளும், யாழ்ப்பாணப் பல்கலைக்கழக இந்துநாகரிகத்துறைவிரிவுரையாளர் சி.ரமணராஜாவின் "தீட்டு கடற்வேற் குமரன் தேவி வள்ளியம்மை" எனும் தலைப்பிலான சிறப்புச்சொற்பொழிவும், யாழ்ப்பாணப்பல்கலைக்கழக நுண்கலைத்துறை விரிவுரையாளர் திருமதி. மஞ்சுசீதாஜெயதீஸ்சின்வீணையிசைசிறப்புநிகழ்வாகவும் இடம்பெறவுள்ளன. இந்துசமய, கலாசார அலுவல்கள் திணைக்களம் இதனை நடத்துகிறது.

## விவசாயிகள் உரமானியப் பதிவுகளை மேற்கொள்ளலாம்

மறவன்புலவு கமக்கார விவசாய சம்மேளனத்துக்கு உட்பட்ட விவசாயிகளுக்கான உரமானியப் பதிவுகள் ஆரம்பிக்கப்பட்டுள்ளன. இன்று திங்கட்கிழமை தொடக்கம் வெள்ளிக்கிழமை வரை இதற்கானபதிவுகள்இடம்பெறும். பதிவுகள் சாவகச்சேரியில் உள்ளசம்மேளத்தின்தலைவர் இல்லத்தில் மற்றும் மறவன்புலவிலுள்ள அமைப்பின்அலுவலகத்திலும் பதிவுகளை மேற்கொள்ளலாம்.

விவசாயிகள்தமதுதேசிய அடையாள அட்டை, காணி உரிமை தொடர்பான ஆவணங்களுடன் வருகை தருமாறும் சம்மேளனத் தலைவர் சி. திருஞானசம்பந்தர் அறிவித்துள்ளார். இதேவேளை சாவகச்சேரி நுணாவில் மேற்கு கமக்கார அமைப்பிற்குட்பட்ட நெற்செய்கையாளர்களுக்கான மானிய உரம் வழங்குவதற்கான பதிவுகளும் ஆரம்பிக்கப்படவுள்ளன. (159-9)



## ஓவியப்பாடவகுப்பறைக்கட்டடம்திறப்பு

சாவகச்சேரிசெப்3

சாவகச்சேரி தேவாலய சாலையில் ரி.பீ.ஹன்ட் நினைவு ஓவியக் கூடத்தில் அமைக்கப்பட்ட ஓவியப் பாட வகுப்பறை நேற்றுமுன்தினம்திறந்துவைக்கப்பட்டது. நிகழ்வில்மட்டக்களப்புக்கல்வி வலயப்பாடசாலைமாணவர்களால் ஆக்கப்பட்ட ஓவியங்களும்காட்சிப்படுத்தப்பட்டன. திருமதி இவாஞ்சலின் யோக மணி அழகரத்தினம் தலைமையில் இடம்பெற்ற நிகழ்வில் தென்னிந்தியத் திருச்சபையின்மானிப்பாய்வலய போதகர் அருட்பணி என்.ரி. வசந்தகுமார் அடிகள், வட்டுக்கோட்டைவலயப்போதகர் அருட்பணி செல்வநாயகம் அடிகள், சாவகச்சேரி தேவாலய போதகர் அருட்பணி ஜெயநேசன் அடிகள் மற்றும் பிரிட்ஜ் அக்கடமி நிறுவன இலங்கைக்கான பணிப்பாளர் எஸ்.சிறிசுடரோன், மட்டக்களப்புகல்விவலய அழகியற் பாட உதவிக் கல்விப் பணிப்பாளர் எஸ்.சிறிதரன், யாழ்ப்பாணப் பல்கலைக்கழக சித்திர பாட விரிவுரையாளர்; கொழும்பு கல்வி வலய அழகியற்பாடஆசிரியஆலோசகர், சாவகச்சேரிஸ்ரார்உணவக உரிமையாளர் எஸ்.சிவநிதன் உட்பட பலர் கலந்து கொண்டனர். ஓவிய பாட வகுப்பறைக் கட்டடத்தினை பிரிட்ஜ் அக்கடமி நிறுவன இலங்கைக்கான பணிப்பாளர்எஸ்.சிறிசுடரோன்திறந்து வைத்தார். (9.131.159)

## அலங்காரத் திருவிழா

யாழ்ப்பாணம்.செப் 3
ஏழாலை அருள்மிகு சிவபூதவராயர் ஆலய அலங்காரத் திருவிழா இன்று திங்கட்கிழமை ஆரம்பமாகி தொடர்ந்து 10 நாள்கள் இடம்பெறும். தினமும் மாலை 6.30 மணிக்கு பூசை இடம் பெற்று தொடர்ந்து சுவாமி வீதி உலா வருதல் இடம்பெறும்.என்று ஆலய பரிபாலனசபையி னர் அறிவித்துள்ளனர்.

## சனசமூக நிலையத்தின் ஆண்டு நிறைவு நிகழ்வு

கொடிகாமம் செப் 3
மறவன்புலவு மேற்கு சனசமூக நிலையத்தின் 49 ஆவது ஆண்டு நிறைவு நிகழ்வு நிலைய முன்றலில் 1ஆம் திகதி சனிக்கிழமை மாலை 7 மணிக்கு நிலையத் தலைவர் சி. அருமைத் துரை தலைமையில் நடைபெற்றது.
இந்த நிகழ்வில்முதன்மை விருந்தினராக தலைவர் இலங்கை தமிழரசுக்கட்சி ,நாடாளு மன்ற உறுப்பினருமான மாவை. சோ.சேனா திராஜா, நாடாளுமன்ற உறுப்பினர் ஈ.சரவண பவனின்பிரதிநிதிசி.பிரதாப், சிறப்புவிருந்தினர்க ளாக மாகாண சபை உறுப்பினர் கே.சயந்தன், சாவகச்சேரி பிரதேச சபைத் தவிசாளர் க.வாம தேவன், தலைவர் பனை தென்னைவள அ.கூ. சங்கம் சாவகச்சேரி வ.தெய்வேந்திரம் ஆகி யோர் கலந்து கொண்டனர். (159)

## பாடசாலை இடமாற்றம்

யாழ்ப்பாணம், பெப் 3
யாழ்ப்பாணம், வயாவிளான் சிறி வேலுப்பி ள்ளை வித்தியாலயம் இன்று தொடக்கம் யாழ்ப்பாணம்வயாவிளான்மத்தியகல்லூரியின் வடக்குப்புறமான நுழைவாயிலை முதன்மை வாயிலாகக் கொண்டு அமைக்கப்பட்ட புதிய வகுப்பறைக் கட்டடத்தில் ஆரம்பமாகவுள்ளது. 2012ஆம் ஆண்டு ஜனவரி மாதம் 2ஆம் திகதி மீளத்திறக்கப்பட்டு, சுமார் 400 மாணவர்க ளோடு, உரும்பிராயில்தற்காலிககூடாரங்களில் இயங்கி வந்தது. இந்தப் பாடசாலை கல்லடி வேலுப்பிள்ளையால் ஆரம்பிக்கப்பட்டது.


## தெய்வீக சுக அனுபவம்

யாழ்ப்பாணம், செப் 3
கல்வி பண்பாட்டலுவல்கள், விளையாட்டுத் துறை மற்றும் இளைஞர் விவகார அமைச்சால் வருடாந்தம் ஏற்பாடு செய்துவரும் தெய்வீக சுகானுபவம் VII நிகழ்வில் நடனக்க லைஞர் சிறிமதி ஊர்மிளா சத்தியநாராயணன், அவர்களது குழுவினரும் இணைந்து நடத்தும் நடன அளிக்கை மற்றும் பயிற்சிப் பட்டறை ஆகி யன நடைபெறவுள்ளது.
வடமாகாண கல்வி பண்பாட்டலுவல்கள், விளையாட்டுத்துறை மற்றும் இளைஞர் விவ கார அமைச்சின் பண்பாட்டலுவல்கள் திணைக் களமும் யாழ்.இந்திய துணைத்தூதரகமும் இணைந்து இதனை ஏற்பாடு செய்துள்ளது.
இந்தப் பயிற்சிப் பட்டறை மற்றும் நடன ஆற் றுகை என்பவற்றில் கலைஞர்கள், இசை நடன ஆசிரியர்கள், பல்கலைக்கழக நுண்கலைப் பீட மாணவர்கள், கலை ஆர்வலர்களைக் கலந்து கொள்ளுமாறு அறிவித்துள்ளார். பயிற்சிப்பட் டறை நாளை செவ்வாய்க்கிழமை யாழ்ப்பா ணம் கைலாசபதி கலையரங்கில் முற்பகல் 10 மணி தொடக்கம் 12 மணிவரை நடைபெறும்.
5ஆம்திகதிபுதன்கிழமைமாலை6.30மணிக்கு நல்லூர் சங்கிலியன் தோப்பில் இலங்கை வய லின் கலைஞர் சு.கோபிதாஸின் வயலின் இசைக்கச்சேரி, நடனக்கலைஞர் சிறிமதி ஊர் மிளா, சத்தியநாராயணன் குழுவினரின் நடன அளிக்கை ஆகியன நடைபெறவுள்ளன. 6ஆம் திகதி வியாழக்கிழமை வவுனியா நகர சபை மண்டபத்தில் முற்பகல் 10 மணி தொடக்கம் 12 மணிவரையும் பயிற்சிப்பட்டறையும் ,பிற்பகல் 4.30 தொடக்கம் 6.30 மணிவரை நடன அளிக்கையும் நடைபெறவுள்ளன என ஏற்பாட் டாளர்கள் அறிவித்துள்ளனர்.

## யாழ் .மாவட்டத்தில்
# அடையாளப்படுத்தப்பட்டுள்ள உயர் டெங்குப் பிரதேசங்கள்

யாழ்ப்பாணம், செப் 3
யாழ்ப்பாணம் மாவட்டத்தில் உயர் டெங்குப் பிரதேசங்களாக சங்கானை, கரவெட்டி, கோப்பாய், நல்லூர், சண்டிலிப்பாய், தெல்லிப்பளை ,சாவ கச்சேரி, பருத்தித்துறை, உடுவில் ஆகிய பிரதேசங்களும், குறைந்த டெங்கு பிரதேசங்களாகக் காரைநகர், ஊர்காவற்றுறை, மருதங்கேணி, வேலணை ஆகிய பிரதேசங்களும் குறிப்பிடப்பட்டுள்ளன.

மழை காலம் ஆரம்பிக்க வுள்ளதையடுத்து, மைய சுகாதாரத் திணைக்கள டெங்குக் கட்டுப்பாட்டுப் பிரிவினர் தேசிய நுளம்பு கட்டுப்பாட்டு வாரத்தை எதிர்வரும் 26 ஆம் திகதி தொடக்கம் ஒக்ரோபர் இரண்டாம் திகதி வரை கடைப்பிடிக்குமாறு திணைக்களத் தலைவர் களுக்கு அறிவித்துள்ளனர்.
அதி உயர் ஆபத்தான டெங்குப் பிரதேசங்களில் 7 தினங்களும் உயர் டெங்கு பிரதேசம் மற்றும் குறைந்த டெங்கு பிரதேசம் ஆகி யவற்றில் ஐந்து தினங்களும் டெங்கு கட்டுப்பாட்டு வாரத்தைக்



கடைப்பிடிக்குமாறும். தேசிய அளவில் செப்ரம்பர் 28 ஆம் திகதி பாடசாலைகளில் டெங்குப் பரிசோதனைகளையும், செப் ரெம்பர் 30 ஆம் திகதி சிரமதா னப் பணிகளையும் மேற்கொள் ளுமாறும் அறிவித்துள்ளனர்.

இதனடிப்படையில் அதி உயர் ஆபத்தான டெங்கு பிரதேசமா கக் காணப்படும், வடக்கு மாகாணத்தில் யாழ்ப் பாணம் மாநகரசபை பிரதேசம், மற்றும் கிழக்கு மாகாணத்தில் மட்டக்களப்பு, ஏறாவூர் திருகோணமலை ,கல் முனை தெற்கு, ஆகிய பிரதேசங்களில் 7 தினங்களும் ,ஏனைய உயர் டெங்கு பிரதேச சங்கள் ,குறைந்த டெங்கு பிர தேசங்கள் ஆகியவற்றில் ஐந்து தினங்களும் டெங்குக் கட்டுப் பாட்டு வாரத்தினை கடைப்பிடிக் குமாறும் அறிவித்துள்ளனர். (9)

## பன்னாட்டு கூட்டுறவாளர் தினம்

யாழ்ப்பாணம், செப்.3
யாழ்ப்பாண மாவட்டக் கூட்டுறவுச் சபை நடத்தும் 96ஆவது பன் னாட்டு கூட்டுறவாளர் தின நிகழ்வு கள் நாளை செவ்வாய்க்கிழமை முற்பகல் 10 மணிக்கு சபையின் தலைவர் தி.சுந்திரலிங்கம் தலை மையில் வீரசிங்கம் மண்டபத்தில் நடைபெறும்.
நிகழ்வில் முதன்மை விருந்தின ராக வடக்கு மாகாண கூட்டுறவு அபிவிருத்தி ஆணையாளர் பொ.வாகீசன் கலந்துகொள்ள வுள்ளார்.
பன்னாட்டு கூட்டுறவாளர் தினத்தை முன்னிட்டு சபையால் நடத்தப்பட்ட போட்டிகளில் வெற்றி பெற்றவர்களுக்கு சிறப்புப் பரிசில் கள், கேடயங்கள் என்பன வழங் கப்படவுள்ளது. அதனைவிடச்சிறந்த கூட்டுறவாளர், சிறந்த சங்கங்கள் போன்றவையும் தெரிவு செய்து மதிப்பளிக்கப்படவுள்ளன. (17)

## வி.தர்மலிங்கத்தின் 33 ஆம் ஆண்டு நினைவு நிகழ்வு

யாழ்ப்பாணம்.செப் 3
மறைந்த முன்னாள் நாடாளுமன்ற உறுப்பினர் வி.தர்மலிங்கத் தின் 33 ஆம் ஆண்டுநினைவுஅஞ்சலிநிகழ்வுகள் க.கௌரிகாந்தன் தலைமையில் நேற்றுக் காலை நடைபெற்றது.
தாவடி பிரதேசத்தில் உள்ள அவரின் நினைவுத் தூபிக்கு மலர் மாலை அணிவித்து மலர் அஞ்சலி செலுத்தப்பட்டது.
யாழ்ப்பாணப் பல்கலைக்கழக வரலாற்று துறை தலைவர் பேராசி ப.புஸ்பரட்ணம்,செஞ்சொற்செல்வர் கலாநிதி ஆறுதிருமுகன் ஆகியோர் அஞ்சலி உரைகளை நிகழ்த்தினர்.
நிகழ்வில் நாடாளுமன்ற உறுப்பினர்கள் ,வடக்கு மாகாண சபை அமைச்சர்கள்.வடக்கு மாகாண சபை உறுப்பினர்கள்.பிரதேச சபை தவிசாளர்கள் ,உறுப்பினர்கள் ,பொது மக்கள் எனப்பலர் கலந்து கொண்டனர். (7)



## தாச்சி சுற்றுப் போட்டி

கைதடி.செப் 3
கைதடி தென்கிழக்கு விநா யகர்சனசமூகநிலையத்தின் 71ஆவது ஆண்டுநிறைவை முன்னிட்டு கைதடி தென் கிழக்கு விநாயகர்சனசமூக நிலையமும், விநாயகர் விளையாட்டுக் கழகமும் இணைந்து யாழ்மாவட்ட தாச்சிச் சங்கத்தின் அனுசர ணையுடன் தென்மராட்சி ரீதியில் நடாத்துகின்ற மா பெரும் தாச்சி சுற்றுப் போட்டி 1 ஆம் திகதி ஆரம்பமானது. மூன்றாம் நாள் போட்டியில் கோவிலாக்கண்டி மகா விஸ்ணுவிளையாட்டுக் கழ கத்தை எதிர்த்துக் கைதடி ஸ்ரார் விளையாட்டுக் கழ கம் மோதியது. இந்தப் போட்டியில் கோவிலாக் கண்டி மகாவிஸ்ணு விளை யாட்டுக் கழகம் 133 என்ற புள்ளிகள் அடிப்படையில் வெற்றிபெற்று, அடுத்த சுற் றுக்கு முன்னேறியுள்ளது. இதேவேளை இன்று இரவு 8 மணியளவில் நடைபெற வுள்ள போட்டியில் கைதடி தெற்கு மின்னொளி விளை யாட்டு கழகத்தை எதிர்த்து கைதடி மேற்கு பாரதி விளை யாட்டுக்கழகம்மோதவுள்ளது.




மீசாலை மேற்கு இலந்தை கூடல்சிறி கங்காணியார்முரு கன் ஆலயத்தின் வருடாந்தப் பெருந்திருவிழா கடந்த வெள் ளிக்கிழமைகொடியேற்றத்து டன்ஆரம்பமாகி நடைபெற்று வருகின்றது. (159)

## 3 ஆம் தவணை ஆரம்பம் சில பாடசாலைகளில் 6 ஆம் திகத்திக்கு பிற்போடப்பட்டது

யாழ்ப்பாணம், செப்.3
வடக்கு மாகாணப் பாடசாலைகள் அனைத்தும் 3ஆம் தவணைக்காக இன்று ஆரம்பமாகின்றது. எனினும் குறித்த சில பாடசாலைகளில் க.பொ.த. உயர்தரப் பரீட்சையின்கட்டம் I க்கான விடைத்தாள் மதிப்பீட்டுப் பணிக்கான நிலை யங்களாக கொக்குவில் இந்துக் கல்லூரி ,யாழ். மத்திய கல்லூரி ,யாழ் . இந்துக்கல்லூரி ஆகியவை செயற்படுவதன் காரணமாகப் பரீட்சைகள் ஆணையாளர் நாயகத்தின் அறிவுறுத்தலுக்கு அமைவாக 3ஆம் தவணைக்கான செயற்பாடுகள் எதிர்வரும் 6ஆம் திகதி வியாழக்கிழமை ஆரம்பமாகும் எனக் கல்லூரியின் அதிபர்கள் அறிவித்துள்ளனர்.

## விவசாய நவீன மயமாக்கலில் உள்வாங்கப்படவுள்ள பழ உற்பத்தியாளர்கள்

யாழ்ப்பாணம் ,செப் 3
வலிகாமம் வடக்கு திராட்சை உற்பத்தியாளர்களுடன் பதில் விவசாய அமைச்சர் அங்கஜன் இராமநாதனும் , உலக வங்கி யின் பிரதிநிதிகளும் , அமைச் சின் உயர்மட்ட அலுவலர்களும் இணைந்து கலந்துரையாடல் ஒன்றினை நடத்தியுள்ளனர்.
திராட்சை உற்பத்தி குறைவ டைந்து செல்வதற்கான கார ணங்களையும், விரிவாகச் செய்கை பண்ணும் இடங்க ளுக்கும் களப்பயணம் மேற் கொண்டு ஆராய்ந்திருந்தனர் .
உற்பத்தியாளர்கள் சார்பாக வலி காமம் வடக்கு பழ உற்பத்தியா ளர் கூட்டுறவுச் சங்கத்தின் செய லர் சு.மதிமுகன் கருத்துக்களை முன்வைத்தார்.
இதன்போது தற்போதுள்ள ஸ்ரேல் புளூ இனத்திற்கு மாற்றீ டாக புதிய இனங்களை அறிமு கப்படுத்தலாம் எனவும் அதற்கு முதல் புதிய இனங்கள் தொடர் பாக ஆராட்சியினை மேற்கொள் வதற்கு யாழ்ப்பாணத்தில் திராட்சை ஆராட்சி நிலையம் ஒன்றினை நிறுவுதல் வேண்டும் எனவும் தெரிவித்தார். அதன் போது பதில் அமைச்சர் அங்கஜன் இராமநாதன் அதற்குரிய ஏற்பாடு களை மேற்கொண்டு ஆராய்ச்சி நிலையத்தை ஏற்படுத்துவதாகவும் உறுதியளித்தார்.
மேலும்மதிமுகன் கருத்து தெரிவிக்கையில் மழை காலங் களில் சந்தைப்படுத்தல் வாய்ப் புக்கள் இல்லாதிருப்பதால், அதனை நிவர்த்தி செய்வதற்கு பழத் தொழிற்சாலை ஒன்றை நிறுவலாம் எனவும் கூராவல்.பங் கசு. அழுக்கனவன் போன்ற நோய்களைக் கட்டுப்படுத்த முடி யாதிருப்பதாகவும் தெரிவித்தார்.
இந்நோய்களைமேலும்ஆய்வு செய்வதற்குஇதில்நிபுணத்துவம் வாய்ந்த ஒரு அலுவலரை நிய மிக்கின்றோம் என உலக வங்கி பிரதிநிதிகள் தெரிவித்தனர்.
மேலும் பதில் விவசாய அமைச் சர் வடக்குக் கிழக்கில் விவசா யத்துறையினை மேம்படுத்துவ தற்கு வடக்கு கிழக்கு விவசாய மீள்எழுச்சி திட்டம் ஒன்றினை முன்மொழிந்துள்ளதாகவும், அத்திட்டம் ஏற்றுக்கொள்ளப்பட் டதாகவும், இந்த வரவு செலவுத் திட்டத்தில் உள்ளடக்கப்படும் எனத் தான் எதிர்பார்ப்பதாகவும் கூறினார்.



# காணாமல் ஆக்கப்பட்டோரின் போராட்டங்களை ஒரு தலைமைத்துவத்தின் கீழ் கொண்டு வரவேண்டும்

## உண்மை மற்றும் நல்லிணக்க மன்றத் தலைவர் தெரிவிப்பு

**கிளிநொச்சி,செப்.3**

**வலிந்து காணாமல் ஆக்கப்பட்டோரின் உறவுகளின் போராட்டங்கள் ஒரு தலைமைத்துவத்தின் கீழ் இருந்த நிலைமாறி, ஒற்றுமை குலைந்து, சொந்த நிகழ்ச்சி நிரல்களின் கீழ் செயற்படுகின்றமையே, தேசமும் பன்னாடும் இந்த விடயத்தில் நழுவல் போக்கை கடைப்பிடிக்க ஏதுவாக அமைந்துவிட்டது என நல்லிணக்க மன்றங்களின் வடக்கு மாகாண இணைப்பாளர் வெ.சுப்பிரமணியம் தெரிவித்தார்.**

2018 ஆம் ஆண்டு பன்னாட்டு வலிந்து காணாமல்ஆக்கப்பட்டோர் தினத்தை முன்னிட்டு கிளிநொச்சியில் கடந்த 1 ஆம் திகதி நடந்த நிகழ்வில் கலந்துகொண்டு கருத்துத் தெரிவிக்கும்போதே அவர் இதனைத் தெரிவித்தார்.

மேலும் தெரிவித்ததாவது :

பன்னாட்டு வலிந்து காணாமல் ஆக்கப்பட்டோர் தினத்தின் முதன்மை நோக்கம் காணாமல் ஆக்கப்பட்டோரின் உறவுகளின் உண்மையைக் கண்டறிதல், நீதியைப் பெற்றுக்கொடுத்தல், இழப்பீடு வழங்கல் மற்றும் மீள நிகழாமல் தடுத்தல் ஆகிய இடைக்கால நீதியின் நான்கு பொறிமுறைகளின் கீழ் பரிகாரத்தைப் பெற்றுக் கொடுத்தலாகும்.

இவை பெற்றுக் கொடுக்கப்படாவிட்டால் அது நாட்டின் சமூகநல்லிணக்கத்துக்கும் சமாதானத்துக்கும் பெரும் அச்சுறுத்தலாக அமையும் என்பதில் எந்தவித ஐயமுமில்லை.

சமூகத்தின் பல பெறுமதிமிக்க மனிதர்கள் வலிந்து காணாமல் ஆக்கப்பட்டிருத்தல், அவர்களின் உறவுகள் சொல்லொண்ணாவேதனைகளில் கடந்த 9 வருடங்களுக்கும் மேலாகப் பரிதவித்து வருதல் ஆகிய விடயங்கள் தொடர்பில் அரசு தனது பொறுப்புக்கூறலை சரிவர நிறைவேற்றாமை, பன்னாட்டுச் சமூகத்தின் ஈடுபாடு இந்த விடயத்தில் குறைந்து செல்லல், ஐக்கியநாடுகள் சபையின் நழுவிச் செல்லும் போக்கு என்பன எமக்கு மிகுந்த வேதனையையும், மனக் கிலேசத்தையும், துயரத்தையும் அளித்து வருகின்றன.

மறுபுறத்தில் ஆரம்பத்தில் மிகத் தாக்கமாக இருந்தபோராட்டங்களும், அரசகரிசனைகளும் பன்னாட்டு ஈடுபாடுகளும் இன்று படிப்படியாக வீழ்ச்சியுற்று மிகவும் தாழ்ந்தமட்டத்தை அடைந்துள்ளது ஏன் என்ற வினாவும் எம் முன்னால் பூதாகரமாக எழுந்துள்ளது என்பதையும் நாம்மறுப்பதற்கில்லை.

நடப்பு சூழ்நிலையை நன்கு பகுப்பாய்வு செய்வோமாயின், வலிந்து காணாமல் ஆக்கப்பட்டோர்களின் உறவுகளின் போராட்டங்கள் ஒரு தலைமைத்துவத்தின் கீழ் இருந்த நிலைமாறி, ஒற்றுமை குலைந்து, சொந்த நிகழ்ச்சி நிரல்களைக் கொண்ட பல தலைமைத்துவங்களுக்குக் கீழ் சிறுசிறுதுண்டுகளாக உடைந்து சுக்குநூறாகச் சிதறி, ஒருவருக்கொருவர் தொடர்பற்ற வகையிலும் ,போட்டிமனப் பான்மையுடனும் நடாத்தப்படுகின்ற போராட்டங்களாக மாறியிருக்கின்றமையே தேசமும், பன்னாடும் இந்த விடயத்தில் நழுவல் போக்கைக் கடைப் பிடிக்க ஏதுவாக அமைந்துவிட்டன என்பது நன்கு புலனாகும்.

எனவே வலிந்து காணாமல் ஆக்கப்பட்டமையின் வலிகள்ஒருபுறம் இருக்க, அதற்கான போராட்டங்கள் ஒற்றுமை குலைந்து வலுவிழந்து இருக்கின்றமை அதனிலும் அதிக வலியை ஏற்படுத்தியுள்ளது.

எனவே , அரசின் பொறுப்புக் கூறலை உறுதிப்படுத்தவும், வலிந்து காணாமல் ஆக்கப்பட்டோருக்கான பன்னாட்டு பரிந்துபேசலை வலுப்படுத்தவும், நாட்டில் வலிந்துகாணாமல் ஆக்கப்பட்டோருக்கான சகல போராட்டங்களும் ஒரு குடையின் கீழ், ஒரு வலிதான தலைமைத்துவத்தின் கீழ்கொண்டு வரப்பட்டு, ஒற்றுமையாக ஓங்கி ஒலிக்கும் ஒரேகுரலாக மாற்றப்படல் வேண்டும்.

இந்த வலியைச் சுமந்துகொண்டு திரியும் அனைத்து உள்ளங்களும் ஒற்றுமைப்படவேண்டிய தருணம் இது. வலியைத் தீர்க்க இது ஒன்றே வழியாகும். வலியுடன் கூடிய ஒரு தலைமை இதனை முன்னெடுக்க முன்வருமாக இருந்தால் உண்மை மற்றும் நல்லிணக்கமன்றங்கள் தமது பூரண ஆதரவை வழங்கத் தயாராகவுள்ளன என்று தெரிவித்தார். (110)

# கசிப்புடன் கைதானவருக்கு 75 ஆயிரம் ரூபா தண்டம்

முல்லைத்தீவு, செப்.3

முல்லைத்தீவு, உடுப்புக்குளம் பகுதியில் ஆறு லீற்றர் கசிப்பினை உடமையில் வைத்திருந்த குற்றச்சாட்டில் கடந்த 25ஆம் திகதி முல்லைத்தீவு பொலிஸாரால் கைதுசெய்யப்பட்ட ,நுரைச்சோலையினைச் சேர்ந்த நபர் அன்றையதினம் முல்லைத்தீவு மாவட்ட நீதிமன்றில் முன்னிலைப் படுத்தப்பட்டார்.

இதன்படி ஓகஸ்ட் 31ஆம் திகதி அன்று குறித்த வழக்கு முல்லைத்தீவு மாவட்ட நீதிவான் நீதிமன்ற நீதிபதி எஸ்.லெனின்குமார் முன்னிலையில் எடுத்துக்கொள்ளப்பட்டபோது, குறித்த குற்றவாளிக்கு 75 ஆயிரம் ரூபா தண்டப்பணம் விதித்து தீர்ப்பளித்துள்ளார்.

நுரைச்சோலையைச் சேர்ந்த நபர் தண்டப்பணத்தைக் கட்டி விடுதலையாகியுள்ளார். (ரி3)

# குமுளமுனையில் ஆர்.பி.ஜி எறிகணையும் கைக்குண்டும் மீட்பு

முல்லைத்தீவு, குமுழமுனை ஆறாம்வட்டாரத்தில் அமைந்துள்ள தனியார் காணி ஒன்றைத் துப்புரவு செய்யும் போது நேற்றுமுன்தினம் ஆர். பி.ஜி எறிகணையும் கைக்குண்டு ஒன்றும் கண்டு பிடிக்கப்பட்டுள்ளது.

சம்பவம் குறித்து காணியின் உரிமையாளரினால் முல்லைத்தீவு பொலிஸ் நிலையத்தில் முறைப்பாடு செய்யப்பட்டதைத் தொடர்ந்து ,வெடி பொருள் காணப்படும் இடத்தைப் பொலிஸார் அடையாளப்படுத்தியுள்ளனர்.

வெடிபொருள்களை அகற்றுவதற்கான சட்ட நடவடிக்கையில் முல்லைத்தீவு பொலிஸார் ஈடுபட்டுள்ளதாகத் தெரிவித்தனர் . (ரி3)



# முத்துமாரி அம்மனின் குடமுழுக்கு நிகழ்வு

கிளிநொச்சி ,செப்.3

வவுனியா காத்தான்கோட்டம் அருள்மிகு முத்துமாரி அம்மனின் குடமுழுக்கு நிகழ்வு சிவசிறி சிவகுகநாதன் குருக்கள் தலைமையில் 31 ஆம் திகதி வெள்ளிக்கிழமை காலை சிறப்பாக நடைபெற்றது.

அன்று ஆலயத்தின் பெருமை சொல்லும் பாடல்கள் கொண்ட இறுவட்டு கிளிநொச்சி கலைஞர்களான பாக்கியராஜ் ,விமல்,மலையவன்,றெஜிஸ் ஆகியோரின் முயற்சியால் வெளியிட்டு வைக்கப்பட்டது. நிகழ்வினை இன்தமிழ் இனியன் செ.சிறினிநிவாசன் நெறிப்படுத்தினார். இறுதியில் ஆலய நிர்வாக சபையால் கலைஞர்கள் மதிப்பளிக்கப் பட்டனர். (222)

# வவுனியாவில் விபத்து இருவர் படுகாயம்

வவுனியா ,செப். 3

வவுனியா கொறவப்பொத்தான வீதி, இறம்பைக்குளம் சந்திப்பகுதியில் நேற்றுமுன்தினம் இரவு நடந்த விபத்தில் இருவர்படுகாயமடைந்துள்ளதுடன் ஒருவர் சிறு காயமடைந்துள்ளார்.

நேற்று இரவு 10 மணியளவில் வவுனியா நகர்பகுதியில் இருந்து இறம்பைக்குளம் நோக்கி பிளசர் ரக உந்துருளியில் சென்ற மூன்று இளைஞர்கள் இறம்பைக்குளம் மகளிர்மகாவித்தியாலத்துக்கு அருகில் உள்ள மின்சாரத் தூணுடன் மோதியதில் இருவர்படுகாயமடைந்ததுடன் ஒருவர் சிறுகாயங்களிற்கு உள்ளாகியுள்ளார்.

குறித்த விபத்தில் கூமாங்குளம் பகுதியியைச் சேர்ந்த சபான் வயது 20,சுயீவலக்மால் வயது 18,என்ற இரு இளைஞர்கள் படுகாமடைந்தநிலையில் வவுனியா மருத்துவமனையில் அனுமதிக்கபட்டுள்ளதுடன், ஒருவரின் நிலை கவலைக்கிடமாக இருப்பதாகக் கூறப்படுகிறது. (110)



# அரச பேருந்து தரிப்பிடத்துக்கு மன்னாரில் தற்காலிக இடம்

மன்னார்,செப். 3

மன்னார் நகரத்தில் நவீன வசதிகளுடன் கூடிய புதிய பேருந்து நிலையம் அமைக்கும் பணிகள் வேகமாக நடைபெற்று வருகின்றன. ஒட்டுமொத்த பேருந்து நிலைய இடப்பரம்பலில் ஒருபகுதியில் தனியார் பேருந்துகளும் ஒருபகுதியில் அரச பேருந்துகளும் தரித்து நிற்பது வழமை . புதியபேருந்துநிலையத்துக்கான அடிக்கல் நடப்பட்ட நிகழ்வுகளின் போதே தனியார் பேருந்துகள் அதிலிருந்து விலகி வீதி ஓரங்களில் நிறுத்தி பொதுமக்களுக்கான சேவைகளை வழங்க ஆரம்பித்தனர்.

அரச பேருந்து தரித்து நிற்கும் இடங்கள் பெரிதாகக் கட்டுமானப் பணி ஆரம்பிக்கப்படவில்லை. அதனால் அவ்விடத்திலிருந்தே அரச பேருந்துகள் மக்களுக்கான சேவையை வழங்கியது . தற்பொழுது வேலைகளை ஆரம்பிப்பதற்கு மணல் மற்றும் கட்டுமானப் பொருள்கள் அவ்விடத்தில் போடப்படுவதால் 1 ஆம் திகதியிலிருந்து மன்னார் அரச பேருந்துகள் அனைத்தும் நகர நுழைவாயிலில் உள்ள எரிபொருள் நிரப்பும் நிலை யத்துக்கு அருகில் நிறுத்தி வைக்கப்பட்டு, மாவட்டம் முழுவதும் மக்களுக்கான போக்கு வரத்துச் சேவையைச் செய்யத் தொடங்கியுள்ளது. (213)

# வவுனியா மதுராநகர் முதன்மை வீதி சீரமைப்பு

வவுனியா,செப்.3

வவுனியா தெற்கு தமிழ்ப் பிரதேச சபைக்குட்பட்ட ஆசிகுளம்வட்டாரத்தின் மதுராநகர், சமளங்குளம் முதன்மை வீதி சீரமைக்கும் பணிகள் வவுனியா தெற்கு தமிழ்ப் பிரதேச சபையினால் ஆரம்பிக்கப்பட்டுள்ளது.

நீண்டகாலமாக வீதி சீரமைக்கப்படாமையினால் பொதுமக்களுக்கான போக்குவரத்துச் சேவைகள் கடந்தசிலகாலமாகத் தடைப்பட்டுள்ளமை தொடர்பில், பிரதேசசபையின் கவனத்துக்கு கொண்டுவரப்பட்டதை தொடர்ந்து பிரதேசசபையின் தவிசாளர் து.நடராஜசிங்கத்தின் வேண்டுகோளுக்கு அமைவாக வவுனியா மாவட்ட மாகாணசபை உறுப்பினர் மருத்துவர் ப.சத்தியலிங்கத்தின் முன்மொழிவின் அடிப்படையில் 3 மில்லியன் ரூபா இந்த வீதிச்சீரமைப்புக்காக ஒதுக்கீடு செய்யப்பட்டுள்ளது.

நேற்றுமுன்தினம் நடைபெற்ற வீதி சீரமைப்பு ஆரம்பப் பணிகளை மாகாணசபை உறுப்பினரின் சார்பில் அவரதுசெயலர்,ஆசிகுளம்,சமளங்குளம் வட்டார பிர



தேசசபை உறுப்பினர்கள்,தமிழ் அரசுக் கட்சியின் வவுனியா பிர தேசக்கிளையின் தலைவர்,கிராம அபிவிருத்திச்சங்க உறுப்பினர்கள் ஆகியோர் பார்வையிட்டனர். (110)

## நானாட்டான் பிரதேசத்தில்

# தீர்த்து வைக்கப்பட்டது குடிதண்ணீர்ப் பிரச்சினை

மன்னார்,செப்.3

**நானாட்டான் பிரதேசத்தில் குடிதண்ணீர்ப் பிரச்சினை உள்ள கிராமங்களுக்கு நீர்த்தாங்கிகள் வழங்கப்பட்டதுடன், பழுதடைந்திருந்த குழாய்க் கிணறுகள் திருத்தியமைக்கப்பட்டு நேற்றுமுன்தினம் மக்கள் பாவனைக்கு கொடுக்கப்பட்டுள்ளது.**

கடும் வறட்சியால் குளங்கள் வற்றியும், கிணறுகளில் தண்ணீர் குறைந்தமையால் மக்கள் பாதிப்புக்கு உள்ளாகினர். நானாட்டான் பிரதேச சபைக்கு உட்பட்ட கிராமங்களில் வாழும் மக்கள் அதிகமாகப் பாதிக்கப்பட்டார்கள். இந்தக் குடிதண்ணீர்ப் பிரச்சினை நானாட்டான் பிரதேச சபையின் தவிசாளரின் கவனத்துக்கு கொண்டு செல்லப்பட்டதை அடுத்து, கடந்த வாரம் செவ்வாய்க்கிழமை நானாட்டான் பிரதேச சபையில் சிறப்பு அமர்வுக்கு ஏற்பாடு செய்யப்பட்டு, மக்களின் குடி தண்ணீர்ப் பிரச்சினையை எவ்வாறு தீர்க்கலாம் என்று உறுப்பினர்களுடன் கலந்தாலோசித்ததன் பின் பிரதேச சபையின் குறைநிரப்புப் பிரேரணையின் மூலம் நீர்த்தாங்கிகள் வழங்குவது என்றும் குஞ்சுக்குளம் கிராமத்தில் குடிதண்ணீர்ப் பிரச்சினையைத் தீர்த்து வைக்க அங்கு பழுதடைந்த நிலையில் உள்ள குழாய்க்கிணறுகளைத் திருத்திக் கொடுப்பது என்றும் சபையில் தீர்மானம் நிறைவேற்றப்பட்டது. நானாட்டான் பிரதேச மக்களின் குடிதண்ணீர்ப் பிரச்சினைக்கு ஒருவாரத்துக்குள் தீர்வு வழங்கப்படும் என்று தவிசாளர் பரஞ்சோதி தெரிவித்தமைக்கு அமைவாக நேற்றுமுன்தினம் கற்கிடந்தகுளம் பரிகாரிகண்டல், மடுக்கரை அச்சங்குளம், றசூல் புதுவெளி போன்ற கிராமங்களுக்கான நீர்த்தாங்கிகள் தவிசாளரால் வழங்கப்பட்டது. இவற்றுக்கான குடிதண்ணீர் விநியோகத்தைத் தேசிய நீர்வழங்கல் அதிகாரசபை மாவட்ட இடர் முகாமைத்துவ செயலணி ஊடாக இன்றிலிருலிருந்து வழங்க ஏற்பாடு செய்யப்பட்டுள்ளதாகவும் - தவிசாளர் தெரிவித்தார்.

அதேவேளை குஞ்சுக்குளம் மக்களின் குடிதண்ணீர்ப்பிரச்சினைக்குத் தீர்வுகாணும் முகமாக நானாட்டான் பிரதேச சபையின் தொழிநுட்ப உத்தியோகத்தர் பரிபூரணன் மற்றும் சபை பணியாளர்களுடன் இணைந்து குஞ்சுக்குளம் கிராமத்தில் பழுதடைந்த நிலையிலிருந்த குழாய்கிணறுகளை திருத்தி மக்கள் பயன்பெறும் வண்ணம் செய்துள்ளனர். இந்த நிகழ்வில் தவிசாளருடன், பிரதேச சபை செயலர் தொழிநுட்ப உத்தியோகத்தர் மற்றும் சபையின் பணியாளர்கள் இணைந்து செயற்பட்டார்கள் என்பது குறிப்பிடத்தக்கது. (213)



## யானைக்கால் நோயால் பாதிக்கப்பட்ட மாணவனுக்கு உதவி

வவுனியா ,செப்.3

ஓமந்தை மத்திய கல்லூரியில் கல்வி கற்கும் லோஜனன் என்ற யானைக்கால் நோயால் பாதிக்கப்பட்ட மாணவனுக்கு, லண்டன் வெளிச்சம் குடும்ப அறக்கட்டளை நிறுவனமூடாக கொக்குவிலைச் சேர்ந்த லண்டன் வாழ் சமூக ஆர்வலர் சோபி நந்தன் மாதாந்த கொடுப்பனவை வழங்கி உதவவுள்ளார்.

நேற்றுமுன்தினம் சனிக்கிழமை முதல் கட்டமாக ரூபா பத்தாயிரத்தை வழங்கி உதவித்திட்டத்தை நிறுவனத்தலைவர் க.ஜெயக்குமார் ஆரம்பித்து வைத்தார்.

இந்த நிகழ்வில் மாவட்டச் சமூக சேவை உத்தியோகத்தர் செ.ஸ்ரீநிவாசன் நெடுங்கேணி பாடசாலை அதிபர் பவேந்திரன் ஆகியோர் கலந்து கொண்டனர். (222)




## வவுனியாவிலிருந்து கொழும்புக்கு சக்கர நாற்காலியில் பயணம்

வவுனியா, செப்.3

"எங்களால் முடியும் என்ற தொனிப்பொருளில்" வவுனியா சூடுவெந்த புலவைச் சேர்ந்த முகம்மட் அலி என்ற இளைஞன் நேற்றுமுன்தினம் காலை 8 மணியளவில் வவுனியா மணிக்கூட்டுச் சந்தியிலிருந்து கொழும்பு நோக்கிப் பயணத்தை ஆரம்பித்துள்ளார்.

இது தொடர்பாக அவர்கூறும்போது 2015 ஆம் ஆண்டு மின்சாரத் தூணில் இருந்து விழுந்தமையால் இடுப்பிற்குகீழ் இயங்க முடியாதநிலைமையில் சக்கரநாற்காலியிலேயே எனது வாழ்க்கை பயணத்தை மேற்கொண்டு வருகின்றேன்.

என்னால் நடக்கமுடியாது இருப்பினும் எதையாவது சாதிக்கவேண்டும் என்ற எண்ணம் என்மனதில் எழுந்தது. மற்றவர் செய்யும் வேலைகளை எங்களாலும் செய்யமுடியும் என்ற நோக்கிலேயே வவுனியாவில் இருந்து கொழும்பு நோக்கிச் சக்கரநாற்காலியில் பயணிக்க உள்ளேன் இந்தப் பயணம் வெற்றியாக அமையும் என்ற நம்பிக்கை எனக்கு இருக்கிறது என்று அவர் கூறினார். (110)





## பணிப்பாளர் பிரியாவிடையும் புதிய பணிப்பாளர் நியமனமும்

வவுனியா.செப் .3

கடந்த ஐந்து வருடங்களாக வவுனியா மருத்துவமனையின் பணிப்பாளராகக் கடமையாற்றி தனது மேற்படிப்பிற்காக செல்லவிருக்கும் மருத்துவர் கு.அகிலேந்திரனுக்குப் பிரியா விடை நிகழ்வொன்று நேற்றுமுன்தினம் காலை 10 மணியளவில் வவுனியா மருத்துவமனையின் கேட்போர் கூடத்தில் நடைபெற்றது. இந்த நிலையில் புதிய பணிப்பாளராக செட்டிகுளம் பிரதேச மருத்துவமனையில் கடந்த ஒருவருடமாக பணிப்பாளராகக் கடமையாற்றிய கந்தசாமிசெந்தூர்பதிராஜாவவுனியா மருத்துவமனைக்குபுதியபணிப்பாளராக நியமிக்கபட்டுள்ளமை குறிப்பிடத்தக்கது. (110)

## பின்னணிப்பாடகரின் நினைவு தினம்



வவுனியா,செப் 3

வவுனியா கூமாங்குளம் சிறி வீரபத்திரகாளி அம்மன் ஆலய மண்டபத்தில் நேற்று மாலை 3 மணியளவில் தென்னிந்தியாவின் பிரபல பின்னணிப்பாடகரான காலஞ்சென்ற பி. பீ. சிறினிவாசின் நினைவு தினம் அம்மா பவுண்டேசனின் ஏற்பாட்டில் இடம்பெற்றது.

இந்த நிகழ்வில் வசதியற்ற 20 மாணவர்களுக்கு கற்றல் உபகரணங்கள் வழங்கப்பட்டதுடன் பல்துறைகளிலிருந்து தெரிவு செய்யப்பட்டவர்களுக்கு விருதுகள் வழங்கி மதிப்பளிக்கப்பட்டது.

நிகழ்வில் வவுனியா பிரதேச செயலர் கா. உதயராஜா, பிரதேச கலாசார உத்தியோகத்தர் வீ. பிரதீபன், ஈழத்து பாலசுப்பிரமணியம், புலமைச்சுடர் மூத்த வளவாளர் வி. எஸ். கபிலன், கலைத்துறைசார்ந்த அதிகாரிகள், உத்தியோகத்தர்கள், பொதுமக்கள் எனப்பலரும் கலந்துகொண்டனர்.

## தனிநாயகம் அடிகளாரின் நினைவு நிகழ்வு









வவுனியா நகரசபையின் ஏற்பாட்டில் தமிழுக்கும்,சைவத்துக்கும் அரும்பணியாற்றிய தனிநாயகம் அடிகளாரின் நினைவுநாள் வவுனியா மணிக்கூட்டு கோபுரச் சந்தியில் உள்ள தனிநாயகம் அடிகளாரின் உருவச்சிலைக்குமுன்பாக நேற்றுமுன்தினம் காலை நடைபெற்றது.

நிகழ்வில் வவுனியா நகரசபைத் தலைவர் இ.கௌதமன்,உபநகரபிதா சு.குமாரசாமி, நகரபை உறுப்பினர்களான க. சந்திரகுலசிங்கம் மோகன்,நா.சேனாதிராயா த.பரதலிங்கம்,லக்சனா நாகராயன்,ரி.கே.ராஜலிங்கம்,மதியழகன், நகரசபை செயலர் இ.தயாபரன், எழுத்தாளர்மேழிக்குமரன்,பொது அமைப்புகள் மற்றும்,சமூக ஆர்வலர்கள் எனப் பலர் கலந்துகொண்டனர். அடிகளாரின் சிலைக்கு மாலை அணிவிக்கபட்டு மலர் தூவி அஞ்சலி நிகழ்தப்பட்டதுடன், தமிழருவி சிவகுமாரன் அடிகளார் தொடர்பான நினைவுரை ஒன்றை வழங்கினார். (110)

# வலி.வடக்கில் 7 இடங்கள் படையினர் வசம்

யாழ்ப்பாணம், செப். 3
வலி. வடக்குப் பிரதேச சபைக்குரிய எல்லைக்குரிய பகுதிகளில் மட்டும், அதிலும் காணிகள் கட்டடங்கள் என்று 7 இடங்கள் தற்போதும் படையினரின் பிடியிலேயே உள்ளனஎன்றுவலி.வடக்குப்பிரதேசசபையின்தவிசாளர்சோ.சுகிர்தன்தெரிவித்தார்.
வலி. வடக்குப் பகுதியில் ஒரு பகுதி விடுவிக்கப்பட்டநிலையில்மற்றொருபகுதிஇன்றுவரையில் விடுவிக்கப்படவில்லை. விடு விக்கப்படாத பகுதிகளுக்குள் அரச கட்டடங்கள் பல உள்ளன.
வலி.வடக்குபிரதேசசபையின்தலைமைப் பணிமனைகூட இன்றுவரை விடுவிக்கப் பட வில்லை. எமது சபையின் காங்கேசன் துறைப்பணியகத்தின் நூல்நிலையம், பிரதேச சபையின் சிறுவர் பூங்கா என்பவற்றோடு பிரதேச சபைக்குரிய வாடி வீடும் படையினரின் பிடியிலேயே இன்றும் காணப்படுகின்றன. குரும்பசிட்டி, வசாவிளான், காங்கேசன்துறை ஆகிய மூன்று மைதானங்களும் படையினரின் பிடியிலேயே உள்ளது.
இவ்வாறு எமது சபைக்குரிய கட்டடம் படையினரின் பிடியில் உள்ள நிலையில், சபையின் செயற்பாடுகளுக்காக நாம் தனியார் கட்டடங்களை வாடகைக்கு அமர்த்தியே பயன்படுத்துகின்றோம். இந்த நிலமையில் வலி. வடக்கில்இடம்பெறும்அபிவிருத்திகள் பல தாமதமடையும் நிலையில் உள்ளன.
மின்சாரவிநியோகம்நெருக்கடியைசந்திக்கின்றது. மின்சார சபைக்குரிய பணியக வளாகம் படையினரின் பிடியில் உள்ளதனால்மின்சாரசபைதமதுசெயற்பாட்டுக்காகவும், திடீர் சேதம் ஏற்பட்டாலும் 18 கிலோ மீற்றர் பயணித்துத் தமது சேவையை வழங்குகின்றனர். இதனால் படையின் பிடியில் உள்ள எமது சபையின் 7 இடங்களையும் மின்சார சபையின் இடத்தையும் கண்டிப்பாக விடுவிக்க வேண்டிய தேவை உள்ளது-என்றார். (4,105)

# ஆயிரத்து 500 மீன் குஞ்சுகள் விநியோகம்!

சாவகச்சேரி செப். 3
சாவகச்சேரிசுகாதார மருத்துவ அதிகாரிபணியகத்தில் வளர்க்கப்பட்ட ஆயிரத்து 500 மீன்குஞ்சுகள் ஒரேநாளில் கடந்த முதலாம் திகதி விநியோ கிக்கப்பட்டுள்ளன.
மீன்குஞ்சுகள்தேவையானோரின்விவரங்கள் பதிவு செய்யப்படுகின்றன என்றும் தெரிவிக்கப்பட்டது.
தென்மராட்சிப் பிரதேசத்தில் கடந்த மாத நடுப்பகுதியில் மேற்கொள்ளப்பட்ட டெங்குப் பரிசோதனையின்போதுமின்மோட்டரில்நீர்இறைக்கும் இயந்திரங்களின் மூலமாகத் தண்ணீர் பெறும் கிணறுகளில் டெங்குக் குடம்பிகள் காணப்பட்டமை பூச்சியியல் உதவியாளர்களால் கண்டுபிடிக்கப்பட்டது.
இதனையடுத்து சுகாதாரத் திணைக்க ளத்தினர்ஆயிரத்து 500 மீன்குஞ்சுகளைப் பெற்றுப் பணியகத்தில்உள்ளதொட்டியில்விட்டிருந்தனர். தேவையானோர் சனிக்கிழமைகளில் பெற்றுக் கொள்ளலாமென்று அறிவித்திருந்தனர். கடந்த சனிக்கிழமைபொதுவிடுமுறைஎன்பதால்பணியகம் மூடியிருந்தது. நேற்றுமுன்தினம் காலையில்பெருமளவானோர்போத்தல்களில்கிணற்று நீருடன் வருகை தந்திருந்தனர்.
வந்திருந்தவர்களுக்கு தலா 5 மீன்குஞ்சுகள் வீதம் வழங்கப்பட்டன. ஒரு மணி நேரத்தில் அனைத்து மீன்குஞ்சுகளும் விநியோ கிக்கப்பட்டன. பொதுமக்கள் வருகை தந்ததால் அவர்களின் விவரங்கள் பெறப்பட்டுள்ளன எனத் தெரிவிக்கப்பட்டது.
கடந்தவருடம்பிரதேசத்தில்டெங்குவின்தாக்கம் குறைவடைய நீர்நிலைகளில் அதிகளவு மீன் குஞ்சுகள் விடப்பட்டன. (4,9)

# அரச, தனியார் பணியாளர்களை அரச பேருந்துகள் ஏற்றுவதில்லை

## இ.போ.ச. கோண்டாவில் சாலை முகாமையாளரிடம் முறைப்பாடு

சாவகச்சேரி, செப். 3
**சாவகச்சேரி நகரப் பகுதியில் உள்ள அரச தனியார் நிறுவனங்களில் கடமையாற்றும் அலுவலர்கள், கடமைக்குச் செல்லக்கூடியவகையில்பேருந்துசேவையைநடத்துமாறுஇ.போ.ச. கோண்டாவில்சாலை முகாமையாளரிடம் அலுவலர்கள் கோரியுள்ளனர்.**

இந்த அலுவலர்கள் மாத ஆரம்பத்தில் பருவகாலப் பயணச்சீட்டுப் பெற்றுள்ள நிலையில்ஏனைய சாலைகளின் பேருந்துகள் யாழ்ப்பாணப்பேருந்துநிலையத்திலி ருந்து புறப்படுகின்ற போது சாவகச்சேரிக்குச் செல்லும் அரச பணியாளர்களைஏற்றமறுக்கின்றனர். எனத் தெரிவிக்கப்பட்டது.
பருவகால பயணச்சீட்டில் 769, 812, 87, 88, 807, 43 ஆகிய வழித்தடப் பேருந்துகளில் பயணிக்க முடியுமென்றுகுறிப்பிடப்பட்டுள்ளது. தூர இடங்களுக்குச் செல்லும் பேருந்துகளின் நடத்துநர்களிடமும், சாரதிகளிடம் சாவகச்சேரி பேருந்து நிலையத்தில் இறங்குவதாகத் தெரிவிக்கின்றபோதிலும் ஏற்றிச் செல்வதில்லை என்றும், ஏறவிடாமல்தடுக்கின்றனர் என்றும் பாதிக்கப்பட்டவர்கள் கூறுகின்றனர்.
பேருந்தின்ஆசனத்தில்அமராமல்நின்றுபயணிப்பதாக தெரிவிக்கின்றபோதிலும் நடத்துநர்கள் பேருந்தில் பயணிக்க அனுமதிப்பதில்லை.
சாவகச்சேரிபேருந்துநிலையத்தில் இறங்கக்கூடிய வகையில் யாழ்ப்பாணப் பேருந்து நிலையத்திலிருந்து பேருந்துகள் புறப்படுகின்றன. பேருந்துகளின் நடத்துநர்கள் தம்மைப் பேருந்தில் ஏறவிடாமல் தடுப்பதால் காலையில் குறித்த நேரத்தினுள் பணியகங்களுக்குச்செல்ல முடிவதில்லை. காலையில் உரியநேரத்தில்கையொப்பமிடத்தவறின்அரைநாள் விடுமுறை பெறும்நிலை ஏற்படுகிறது.
மாவட்டத்தின் பல்வேறு இடங்களிலிருந்துயாழ்ப்பாணம்வருகின்றசாவகச்சேரியில் பணிபுரியும் அலுவலர்கள் யாழ்ப்பாணப் பேருந்து நிலையத்தில் நீண்டநேரம் காத்திருக்க வேண்டியுள்ளது. இந்த நேரத்தில் குறுகிய சேவை இல்லாததால் அடுத்த பேருந்து வரும்வரை காத்திருந்து பணியகங்களுக்குத் தாமதமாகச் செல்ல வேண்டியுள்ளதெனவும் இதனால் சாவகச்சேரி மற்றும் கொடிகாமம் பகுதிகளில் உள்ள அரச தனியார் பணியகங்களில் கடமையாற்றும் அலுவலர்களின் நலன்கருதிக் காலையில் குறுகிய நேரப் பேருந்து சேவையை நடத்த வேண்டுமெனவும் கோருகின்றனர்.
இது தொடர்பாகக் கோண்டாவில் பேருந்து சாலை உதவி முகாமையாளருடன்தொடர்புகொண்டுகேட்டபோது,போதியளவுசேவைகளைநடத்துவதற்குதற்சமயம் ஆளணி வசதி உள்பட பேருந்து வசதி, நடத்துநர்கள் பற்றாக்குறை என்பன உள்ளன.
உடனடியாகஅவற்றைஏற்படுத்திக்கொடுப்பதென்பது சிரமமாகவே உள்ளது. எனினும் தற்போது அதற்கான ஏற்பாடுகள் செய்து கொண்டிருக்கின்றோம்.
நீண்டதூரப்பயணங்களில் ஈடுபடும்பேருந்துகளில் பயணிக்கும்போதுசிலவேளைகள் நீண்டதூரம் பயணிக்கும் பயணிகளுக்கான இருக்கைகள் போதாமல் இருந்தால் அவர்கள் அத்தகைய பேருந்துகளில் பயணத்தைத் தொடர மறுப்பார்கள். எனவேதான் சில நடத்துநர்கள் இவ்வாறு இடையில்இறங்குவதாகக் கூறிப் பயணிக்கும் பயணிகளை ஏற்ற மறுக்கின்றார்கள்.
எனினும் அந்தப் பிரதேசத்துக்குரிய மற்றும் அருகிலுள்ள பிரதேச பேருந்துகளில் பயணிக்கும் பயணிகளை நடத்துநர்கள் இவ்வாறுநடத்தினால், அவர்கள் கடமையாற்றும் பேருந்து இலக்கம்அல்லதுபயணிக்கு வழங்கப்பட்ட பற்றிச்சீட்டு என்பனவற்றை எடுத்து வந்து எம்மிடம் முறைப்பாடு செய்யுங்கள். அதற்குரிய நடவடிக்கை எடுப்போம். சாவகச்சேரிப்பிரதேசத்துக்கென்று வழமையாக ஈடுபடும் பேருந்துகளைப் பயன்படுத்துவதன்மூலமாகப் பணியாளர்கள் தமக்குரிய நேரத்துக்குத் தமது பணிகளுக்குச் செல்லமுடியும் எனவும் அவர் மேலும் தெரிவித்தார். (4,114)

# உயர்தரப் பரீட்சைக்கு தோற்றியோர் மும்மொழிக் கற்கைக்கு விண்ணப்பிக்கவும்

யாழ்ப்பாணம், செப். 3
இந்தவருடம் ஜி.சி.ஈ. உயர்தரப் பரீட்சைக்குத் தோற்றிய மாணவர்களுக்கான சிங்களம், ஆங்கிலம், மற்றும் தமிழ்ப்பாடநெறிகள்ஆரம்பிக்கப்படவுள்ளன. வடக்குமாகாணக்கல்வி, பண்பாட்டலுவல்கள், விளையாட்டுத்துறை, இளைஞர் விவகார அமைச்சின் கீழ் இயங்கும் மும்மொழிக் கற்கை நிலையத்தில் இந்தப் பாடநெறிகள் அடுத்தமாதம் ஆரம்பிக்கப்படவுள்ளன.
இதற்கான விண்ணப்பப்படிவங்களை மும்மொழிக் கற்கை நிலையத்திலும், www.edumin.np.gov.lk என்ற இணையத்திலும் பெற்றுக்கொள்ளலாம்.
இந்த விண்ணப்பப் படிவங்களைப் பூர்த்தி செய்து எதிர்வரும் 28ஆம் திகதிக்கு முன்னர் எமக்குக் கிடைக்கக் கூடியதாக நேரிலோ தபால் மூலமாகவோ அனுப்பிவைக்குமாறு கல்வி அமைச்சின் செயலர் தெரிவித்துள்ளார். (4)

# வாழைக்குலைகள் திருட்டைத் தடுக்க இரவுநேரக் காவல்

யாழ்ப்பாணம், செப். 3
வலி.கிழக்குப்பிரதேசத்தில்வாழைத் தோட்டங்களில் வாழைக்குலைத் திருட்டுப் போகும் சம்பவங்கள் அதிகரித்துள்ளன. அதனால் விவசாயிகள் இரவு வேளையில் காவற் கடமைகளில்ஈடுபடவேண்டியுள்ளதாகத் தெரிவிக்கப்பட்டது. குறிப்பாக நீர்வேலி, கோப்பாய், சிறுப்பிட்டி, மாசிவன், நவக்கிரி, இடைக்காடு, உரும்பிராய், ஊரெழு போன்ற இடங்களில் உள்ள வாழைத்தோட்டங்களில் இரவு வேளைகளில் வாழைக்குலைகள் திருடப்படு கின்றன.
தற்போதுவாழைப்பழத்தின்விலை சடுதியாக அதிகரித்துள்ளது.
இந்த விலை அதிகரிப்பைப் பயன்படுத்தித்திருடர்கள்வாழைக்குலைகளைக் களவாடிச் செல்கின்றனர். திருட்டை முறியடிக்கும் முகமாகவே வாழைச் செய்கையாளர்கள் இரவில் தோட்டங்களில் காவற் கடமையில் ஈடுபட்டு வருகின்றனர் என்று தெரிவிக்கப்பட்டது. (4,17)

சாவகச்சேரி நகர சந்தையில்

# 30 கிலோ தக்காளிப்பழம் கால்நடைகளால் நாசம்

சாவகச்சேரி, செப். 3
சாவகச்சேரிப் பொதுச் சந்தையில் வைக்கப்பட்டிருந்த 30 கிலோகிராம் தக்காளிப் பழங்களை கட்டாக்காலிக் கால்நடைகள் சேதமாக்கியுள்ளன என்றுபொதுச்சந்தையின்வியாபாரிகள்சாவகச்சேரிநகரசபையின் தவிசாளரிடம் முறையிட்டுள்ளனர்.
கடந்தவியாழக்கிழமைமாலை5.30மணியளவில்சந்தையின்மரக்கறிவிற்பனைப் பிரிவுக்குள் புகுந்த கால்நடைகள் அங்கு பெட்டிகளில்வைக்கப்பட்டிருந்ததக்காளிப் பழங்களை வீழ்த்தியும், சேதப்படுத்தியும் பெருநட்டத்தைஏற்படுத்தியுள்ளன என்று வியாபாரிகள் தெரிவித்துள்ளனர்.
சந்தையில் பெருமளவு வியாபாரிகள் தமதுவியாபாரப்பொருள்களை (மரக்கறி வகைகள்) கட்டி வைத்துவிட்டுப் பிற்பகல் தத்தமது வீடுகளுக்குச் சென்றுவிடுவர்.
அந்த நேரங்களில் கட்டாக்காலிக் கால்நடைகள் அவற்றைச் சேதம் செய்துவிடும்.



இதனால் அனைத்து வியாபாரிகளினுடையவியாபாரப்பொருள்களும்அழிந்து, நட்டம் ஏற்படும் அபாயம் உள்ளது என்று வியாபாரி கள் தவிசாளருக்கு எழுதிய கடிதத்தில் குறிப்பிட்டுள்ளனர்.
இந்த விடயம் தொடர்பாகச் சபையின் சந்தைக் குழுவினருக்கு தவிசாளர் அறிவித்துள்ளார். குழுஉறுப்பினர்கள்சந்தைக்குச் சென்று பார்வையிட்டு அறிக்கையிட்டுள்ளனர்எனத்தெரிவிக்கப்பட்டது. கடந்த மாத சபை அமர்வில், சந்தைக்குள் கால்நடைகளைக் கட்டுப்படுத்த நடவடிக்கை எடுக்க வேண்டும்என்றுசபையின்தமிழ்த் தேசிய மக்கள் முன்னணி உறுப்பினர் சு.நிதிகேசன் கோரிக்கை முன்வைத்திருந்தார்.
அதனை ஆதரித்து அனைத்து உறுப்பினர்களும் கருத்துத் தெரிவித்திருந்தனர். அதன்படி சந்தைக்குள் கட்டாக்காலியாகப் பிடிக்கப்படும் மாடுகள், ஆடுகள் அந்த இடத்திலேயே வைத்து ஏலத்தில் விற்பனை செய்து வியாபாரிகளுக்கு ஏற்பட்ட நட்டத்தை வழங்கவேண்டுமென்றும் சபையில் தீர்மானம் நிறைவேற்றப்பட்டது.
இந்த நிலையில் கடந்த வியாழக்கிமை கட்டாக்காலி மாடுகளால் மரக்கறி வகைகள் அழிக்கப்பட்டுள்ளன என்று வியாபாரிகள் தெரிவித்துள்ளனர். (4,9)

## சுகாதாரச்சீர்கேடான தொழிற்சாலையை மூடுமாறு நீதிமன்று உத்தரவு

யாழ்ப்பாணம், செப். 3

யாழ்ப்பாண நகரில் சுகாதார சீர்கேடுக ளுடன் இயங்கி வந்த கச்சான் அல்வா தொழிற்சாலையை உடனடியாக மூடுமாறு உத்தரவிட்ட நீதிவான், தொழிற்சாலை உரிமையாளரை 50ஆயிரம்ரூபாசரீரப்பிணையில்செல்லுமாறு தெரிவித்தார்.

யாழ்ப்பாணம் இந்துக் கல்லூரிக்கு அருகாமையில் இயங்கி வரும் கச்சான் அல்வா தொழிற்சாலையைச் சோதனைக்கு உட்படுத்திய வண்ணார்பண்ணைப் பொது சுகாதாரப் பரிசோதகர் தொழிற்சாலை சுகாதார விதிமுறைகளுக்குமுரணானவகையில் இயங்கி வருவதை அவதானித்துள்ளார்.

இதையடுத்து சுகாதாரப் பரிசோதகர் தொழிற்சாலை உரிமையாளருக்கு எதிராக 6குற்றச்சாட்டுக்கள் சுமத்தி கடந்த30ஆம்திகதி யாழ்ப்பாண நீதிமன்றில்வழக்குத்தாக்கல்செய்தார்.

வழக்கு கடந்த வெள்ளிக்கிழமை விசாரணைக்கு எடுத்துக் கொள்ளப் பட்டது.

தொழிற்சாலையின் உரிமையாளர் குற்றத்தை ஏற்றுக்கொண்டார்.

அதனையடுத்து தொழிற்சாலையை உடனடியாக மூடுமாறு உத்தரவிட்ட நீதிவான் உரிமையாளரை 50ஆயிரம் ரூபா ஆள் பிணையில் செல்லுமாறு உத்தரவிட்டார்.

தொழிற்சாலைச்சீரமைப்புஉள்ளிட்ட விடயங்கள் செய்யப்பட்ட பின்னர் அதனை மீளத் திறக்க மன்று அனுமதி வழங்குகின்றமை குறிப்பிடத்தக்கது. (4,115)

# வடக்குக்கான அபிவிருத்தி நிதியை உட்கட்டுமானத்துக்கு முன்னிறுத்தவும்

## நாடாளுமன்ற உறுப்பினர் சேனாதிராசா கோரிக்கை

யாழ்ப்பாணம், செப்.3

**வடக்கு மாகாணத்தில் நடப்பாண்டுக்கான அபிவிருத்திகளை முன்னெடுப்பதற்காக 2ஆயிரத்து 950மில்லியன் ரூபா வழங்கப்பட்டுள்ளது. இதனை முழுமையாகவே பல்வேறு சமூகங்களுக்கான உட்கட்டுமான அபிவிருத்திக்காக மக்கள் நலன் நோக்கியதாக முன்னிறுத்த வேண்டும். இந்தநிதி தமிழ்த் தேசியக் கூட்ட மைப்பு 2017ஆம் ஆண்டில் முன்வைத்த பாதீடு ஊடாக வலிந்து பெறப்பட்டதாகும்.**



இவ்வாறு தமிழ் அரசுக் கட்சியின் தலைவரும் நாடாளுமன்ற உறுப்பினருமான மாவை.சோ.சேனாதிராசா தெரிவித்துள்ளார்.

துரித கிராம அபிவிருத்தித் திட்டம் மற்றும்என்றபிறைசஸ்சிறிலங்கா அபிவிருத்தித் திட்டம் தொடர்பான அபிவிருத்திக் கூட்டம் கோப்பாயிலுள்ள கட்சிப் பணியகத்தில் முதலாம் திகதி இடம்பெற்றது.

நாடாளுமன்ற உறுப்பினர் ஈ.சரவணபவன் தலைமையில் இடம்பெற்றஇந்தக்கூட்டத்தில்முதன்மை விருந்தின ராகக் கலந்துகொண்ட சேனாதிராசா மேலும் தெரிவித்ததாவது:

2018ஆம் ஆண்டில் நடைமுறைப்படுத்துவதற்காக பாதீட்டில் 16 பெரிய திட்டங்களைத் தமிழ்த் தேசியக் கூட்டமைப்பு முன்வைத்தது. அதில் 13இலட்சம் ரூபா பெறுமதியான 50ஆயிரம் வீட்டுத் திட்டத்தையும் 12 ஆயிரத்து 650 முன்னாள் போராளிகளுக்கான அரச வேலைவாய்ப்பு உட்பட தொழிற்பயிற்சி என்பனவும் முன்வைக் கப்பட்டுள்ளன. இதனை விட 2018ஆம் ஆண்டில் உட்கட்டுமான அபிவிருத்திக்காக 2ஆயிரத்து 950மில்லியன் ரூபா வழங்கப்பட்டுள்ளது. இந்தநிதி பயன்படுத்தப்பட வேண்டும். இதனை விட கம்பெரலிய என்ற துரித கிராம அபிவிருத்தித் திட்டம், என்றபிறைசஸ் சிறிலங்கா திட்டம் என்பன முன்வைக்கப்படுகின்றன.

இதில் முதல் ஆறுமாதங்களுக்கு தொகுதிக்கு 100மில்லியன் ரூபாவும், மிகுதி ஆறுமாதங்களுக்கு 100மில்லியன் ரூபாவுமாக 200மில்லியன் ரூபா செலவிடப் படவுள்ளது. இந்தத் திட்டத்தை முன்னிறுத்துவது தொடர்பில் கலந்தாலோசிக்கவே மக்கள் முன்பாக அபிவிருத்தி தொடர்பில் பேசுகின்றோம். கடந்த காலங்களில்உள்ளகசுயநிர்ணய உரிமை தொடர்பில் விடுதலை புலிகளுக்கும், அரசுக்கும் இடையில் ஒஸ்லோவில் பேச்சு இடம்பெற்றது. எனினும் அது வெற்றியளிக்கவில்லை அதன் முக்கியத்துவத்தை இன்று நாம் உணர்கின்றோம் - என்றார்.

**சரவணபவன் எம்.பி.**

இந்த நிகழ்வில் தலைமை தாங்கிய நாடாளுமன்ற உறுப்பினர் ஈ.சரவணபவன் உரையாற்றுகையில்,

மாவட்ட மட்டத்தில் உள்ள அபிவிருத்தித் திட்டங்கள் தொடர்பில் மக்கள் பங்கேற்பு அபிவிருத்தித் திட்டங்கள் ஊடாக அபிவிருத்தி முன்மொழிவுகளைப் பெறுகின்றோம். இந்தத் திட்டங்களைத் தொகுதி ரீதியாகச் சம்பந்தப்பட்ட திணைக்களங்களுக்கு அனுப்பிவைப்பதன் மூலம் துரித அபிவிருத்திகளை முன்னிறுத்தலாம் என்றார். நிகழ்வில் நல்லூர்ப் பிரதேசமட்ட, சமூக மட்ட பிரதிநிதிகள், பொதுமக்கள் எனப் பலரும் கலந்துகொண்டனர். (4,50)

## காய்ச்சலால் பாதிக்கப்பட்டவர் மாரடைப்பால் உயிரிழந்தார்

சாவகச்சேரி, செப். 3

காய்ச்சல் ஏற்பட்டு மருத்துவமனை விடுதியில் தங்கிச் சிகிச்சை பெற்று வந்த குடும்பத் தலைவர் திடீரென்றுமாரடைப்பு ஏற்பட்டு உயிரிழந்துள்ளதாகக் கூறப்படுகிறது.

இந்தச்சம்பவம் கடந்த வெள்ளிக்கிழமை இடம்பெற்றது. கடந்த புதன் கிழமை காய்ச்சல் ஏற்பட்டு மருத்துவமனையில் சேர்க்கப்பட்டுச் சிகிச்சை பெற்று வந்த நிலையில் மீசாலை கிழக்கைச் சேர்ந்த வரும் தென்மராட்சித்தனியார்சிற்றூர்திச் சேவைகள் சங்கத்தின் நேரக் கணிப்பாளருமான கனகசிங்கம் தயாசீலன் (வயது- 48) என்பவரே உயிரிழந்தார்.

இவர் இரண்டு பிள்ளைகளின் தந்தையாவார். (4,9)

### சமூக பாதுகாப்பு ஓய்வூதியத் திட்டத்தில்

# அதிகமானோரை இணைத்துள்ளது தென்மராட்சிப் பிரதேச செயலகம்!

சாவகச்சேரி, செப்.3

தென்மராட்சிப் பிரதேசசெயலகத்தினர், கடந்த வருடம் சமூக பாதுகாப்பு ஓய்வூதியத்திட்டத்தில்அதிகளவானோரைஉறுப்பினர்களாக இணைத்து யாழ்ப்பாண மாவட்டத்தில்முதலிடத்தைப்பெற்றுள்ளனர்என்று தெரிவிக்கப்பட்டது.

இதன்மூலமாகத் தேசிய நிலையில் யாழ்ப்பாண மாவட்டம் முதலிடத்தைப் பிடிசெய்றப்பட்டுள்ளனர்.



சமூக பாதுகாப்பு ஓய்வூதியத் திட்டம் 2006ஆம் ஆண்டு ஆரம்பிக்கப்பட்ட வேலையிலிருந்துபிரதேசசெயலகசமூக சேவைகள் அலகினருடன் இணைந்து மக்களைத்திட்டத்தில்இணைக்கும்பணிகள் இடம்பெற்று வருகின்றன.

ஒவ்வொரு பிரிவிலும் கடமையாற்றும் கிராம அலுவலர்கள்பொருளாதார அபிவிருத்தி அலுவலர்கள்சமுர்த்தி அபிவிருத்தி அலுவலர்கள் ஆகியோர் திட்டத்தில் பயனாளிகளை இணைக்கவழிவகுத்துள்ளனர். அந்த வகையில் 2016 ஆம்ஆண்டு ஆயிரத்து 109 பேரையும் கடந்த வருடம் 4ஆயிரத்து 233 பயனாளிகளையும்திட்டத்தில் இணைத்துள்ளனர். கடந்த செவ்வாய்க்கிழமை யாழ்ப்பாண மாவட்டச் செயலகத்தில் இடம்பெற்ற சமூக பாதுகாப்பு திட்ட விருது வழங்கும் நிகழ்வில் கலந்து கொண்ட சமூக பாதுகாப்பு ஓய்வூதிய சபையின் உயர் அதிகாரிகளால் விருதுகள் வழங்கப்பட்டன.

மாவட்டத்தில் அதிக அளவு உறுப்பினர்களை இணைத்தமைக்காக தென்மராட்சிப் பிரதேச செயலகம் முதலிடத்தையும்நல்லூர்பிரதேசசெயலகம்இரண்டாமிடத்தையும் யாழ்ப்பாணம் பிரதேச செயலகம்மூன்றாமிடத்தையும்பெற்றுள்ளன என்று அறிவிக்கப்பட்டு விருதுகள் வழங்கப்பட்டன.

அத்துடன் தேசிய நிலையில் முதலிடம் பெற்றமைக்கான விருது யாழ்ப்பாண மாவட்டச் செயலகத்துக்கு வழங்கப்பட்டது. தென்மராட்சிப்பிரதேசசெயலகத்தில் சமூக பாதுகாப்பு ஓய்வூதியத் திட்டத்தில் ஆரம்ப காலத்தில் இணைந்த 60 வயதுக்குமேற்பட்ட 145 பேர்தற்போது திட்டத்தின்மூலம்ஓய்வூதியம்பெற்று வருகின்றனர்.

இந்தத் திட்டத்தில் ஒரு வயது தொடக்கம் 40 வயதுவரை உறுப்பினர்களாக இணைந்து கொள்ள முடியும். இந்தத் திட்டத்தில் இணைந்த மாணவியொருவர் கடந்த வருடம் ஜி.சி.ஈ. சாதாரண தரப் பரீட்சையில் 9 பாடங்களில் அதிசிறப்புச் சித்தி பெற்றமைக்காக ஒரு லட்சம் ரூபாவைப் பரிசாகப் பெற்றிருந்தார் எனவும் தெரிவிக்கப்பட்டது.

18 வயதுக்குக் குறைந்த மாணவர்கள் திட்டத்தில் உறுப்பினர்களாக இணைந்துள்ளதால்அவர்களால்மாதாந்தம்செலுத்தப்படும் தொகைக்கேற்ப பரிசில்கள் வழங்கப்படுமெனவும் மாணவர்கள் ஐந்தாம் தரப் பரீட்சையில் சித்தி பெற்றால் தலா 5 ஆயிரம் ரூபா தொடக்கம் வைப்பிலுள்ள தொகைக்கேற்ப ஒரு லட்சம் ரூபா வரையும்ஜி.சி.ஈ. சாதாரணதரப்பரீட்சையில் 9 பாடங்களில் 5 பாடங்களில் ஏ தரச் சித்தி பெற்றால் 10 ஆயிரம் ரூபா தொடக்கம் ஒரு லட்சம் ரூபா வரையும் ஜி.சி.ஈ. உயர்தரப் பரீட்சையில் சித்திபெற்று பல்கலைக்கழக அனுமதி பெற்றால் 20 ஆயிரம் ரூபா தொடக்கம் ஒரு லட்சம் ரூபா வரையும் பரிசாகப் பெற்றுக்கொள்ள முடியுமெனவும் தெரிவித்தனர். (4,9)

## அனுமதியின்றி இயங்கிய உணவகம் ரூ12 ஆயிரம் தண்டத்துடன் மூடல்

யாழ்ப்பாணம், செப். 3

யாழ்ப்பாண மாநகர சபையின் அனுமதியின்றி யும்சுகாதாரவிதிமுறைகளுக்குமுரணானவகையிலும்உணவகம்நடத்திவந்தஅதன்உரிமையாளருக்கு 12ஆயிரம் ரூபா தண்டம் விதித்தது நீதிமன்று. உணவகத்தை உடனடியாக மூடுமாறும் உத்தரவிடப்பட்டது.

யாழ்ப்பாணநகரிலுள்ளஉணவகங்களைச்சோதனைக்கு உட்படுத்தியபோது கோவில் வீதியில் குறித்த உணவகம் சிக்கியது.

உணவகஉரிமையாளருக்குஎதிராக6குற்றச்சாட்டுக்கள்சுமத்தியாழ்ப்பாண மாநகரப்பொதுச்சுகாதாரப்பரிசோதகர்பா.சஞ்ஜீவன்கடந்த28ஆம்திகதி யாழ்பாண நீதிமன்றில் வழக்குத் தாக்கல் செய்யப்பட்டது.

## படையினரின் வாகனம் மோதி இளைஞன் படுகாயம்

யாழ்ப்பாணம், செப். 3

படையினரின் வாகனம் மோதி உந்துருளியில் பயணித்தவர் காயமடைந்தார் என்று தெரிவிக்கப்பட்டது. கொடிகாமம் இராமாவில் முதன்மைச் சாலையில் இந்தச் சம்பவம் கடந்த வெள்ளிக்கிழமை இடம்பெற்றுள்ளது. இதில் காயமடைந்த கொடிகாமம் கச்சாய் வீதியைச்சேர்ந்த இராஜேந்திரம் நிரோஜன் (வயது-27)என்பவர்சாவகச்சேரிமருத்துவமனையில் சேர்க்கப்பட்டுள்ளார். எதிரே வாகனம் வருவதை அவதானித்துச்சாலையின்ஓரத்திற்குச்சென்ற உந்துருளியைஅதேதிசையில்வந்தபடையினரின் பட்டா ரக வாகனம் மோதியதெனத் தெரிவிக்கப்பட்டது. இது தொடர்பாகப் பொலிஸார் விசாரணை நடத்துகின்றனர். (4,9)

## கொழும்புப் போராட்டத்தில் அரசை எதிர்க்கும் அனைவரும் ஒன்றிணைவோம்

எதிர்வரும்5ஆம்திகதிகூட்டுஎதிர்க்கட்சிகொழும்பில் ஏற்பாடு செய்துள்ள போராட்டத்துக்கு அரசை எதிர்க்கும் அனைவரும் ஒன்றிணைவோம்என்றுஐக்கியமக்கள்சுதந்திரமுன்னணியின் நாடாளுமன்ற உறுப்பினர் சந்திம வீரக்கொடி தெரிவித்தார். காலியில் இடம்பெற்ற நிகழ்வொன்றில் கலந்துகொண்ட அவர் ஊடகங்களுக்கு கருத்து தெரிவிக்கும் போதே இவ்வாறு தெரிவித்தார்.
தமதுகட்சியில்உள்ளஅனைவரும்சிறிலங்கா சுதந்திரகட்சியின்கொள்கைஇருக்கும்இடங்களில் இருப்பதாகவும்அந்தகொள்கையைபின்பற்றியவாறே எதிர்க்கட்சிக்கான நடவடிக்கைகளையும்மேற்கொள்வதாகவும்அவர்மேலும் தெரிவித்தார்.

# பொது எதிரணியின் பேரணியை எதிர்கொள்ள அரசு வியூகம்

*முக்கிய தலைவர்கள் தீவிர கவனம்*

**கொழும்பு, செப் 3**
**முன்னாள் அரச தலைவர் மகிந்த ராஜபக்ச ஆதரவு பொது எதிரணியினர் நாளைமறுதினம் கொழும்பை மையமாகக் கொண்டு நடத்தத் தீர்மானித்துள்ள பெரிய பேரணி குறித்து கூட்டாட்சி அரசின் முக்கிய தலைவர்கள் தீவிர கவனம் செலுத்தி வருகின்றனர்.**

பொது எதிரணி பெருமளவு மக்களைப் பேரணிக்கு அழைத்து வருவதற்கான முயற்சிகளைமேற்கொண்டுள்ளஅதேவேளைஅரசு அதனை தடுப்பதற்கான வழிமுறைகள் குறித்தும்ஆராய்ந்துவருகின்றது. இந்தமோதலில் யாருக்கு வெற்றி என்பது அடுத்த 48 மணித்தியாலத்துக்குள் தெரிந்துவிடும் என அரசியல் அவதானிகள் தெரிவித்துள்ளனர்.
பேரணிக்கு மக்கள் அழைத்துவரப்படுவதை தடுப்பதற்கான முயற்சியின் ஒரு பகுதியாக 8 ஆம் திகதி வரை தனியார் பேருந்து உரிமையாளர்கள் சிறப்புபேருந்துசேவைகளைநடத்துவதற்கு மேல்மாகாண போக்குவரத்து அதிகார சபை தடை விதித்துள்ளது.
மேல்மாகாண போக்குவரத்து அதிகாரசபையின் இந்த உத்தரவைமீறுபவர்களின் வழித்தட அனுமதிகள் இரத்துச்செய்யப்படலாம் என்ற எச்சரிக்கையும் விடுக்கப்பட்டுள்ளதாக தகவல்கள்வெளியாகியுள்ளன. இதேவேளை அரசிடமிருந்து மேலும் இதுபோன்றபல அறிவிப்புகள்வெளியாகலாம்எனவும்தகவல்கள் வெளியாகியுள்ளன. தனியார் பேருந்து உரிமையாளர்களுக்குக் கடும் அழுத்தங்கள் பிரயோகிக்கப்படுவதாக நாடாளுமன்ற உறுப்பினர் தினேஸ் குணவர்த்தன தெரிவித்தார்.
அவர் மேலும் தெரிவித்ததாவது:
ஆதரவாளர்களைகொழும்பிற்குகொண்டுவருவதற்கு உதவவேண்டாம் என அவர்கள் மீது அழுத்தங்கள்பிரயோகிக்கப்பட்டுள்ளன. சிலர் ஏற்கனவே அச்சுறுத்தப்பட்டுள்ளனர். எங்களிற்கு மக்கள் ஆதரவு இல்லையென்றால் அரசு ஏன் அஞ்சுகின்றது.
கொழும்பில் இடம்பெறவுள்ள பேரணியின் முக்கிய கோரிக்கையாக தேர்தல்கள் உரிய நேரத்தில் இடம்பெறவேண்டும் என்பதே . அரசு மாகாணசபை தேர்தலிற்காக தயாராவதை நாங்கள் இன்னமும் காணவில்லை. வாழ்க்கை செலவு அதிகரிப்பது குறித்தும் கவனம் செலுத்துவோம் - என்றார்.

## மஞ்சள் கடவைகூட பாதசாரிகளுக்கு பாதுகாப்பு இல்லை

கொழும்பு,செப். 3
மஞ்சள் கடவையினுடாக வீதியைக் கடக்க முயன்ற குடும்பப் பெண் ஒருவர் பேருந்துடன் மோதுண்டு உயிரிழந்தார்.
இந்தச்சம்பவம்மொனராகலைப் பகுதியிலுள்ள உடவளை என்ற இடத்தில் சில நாள்களுக்கு முன்னர் இடம்பெற்றது.
மாலா சேனநாயக என்ற 59 வயதான பெண்ணே உயிரிழந்துள்ளார்.
விபத்தில்பலத்தகாயங்களுக்குள்ளான குறித்த பெண் உடவளை மருத்துவமனையில் சேர்க்கப்பட்ட பின்னர் உயிரிழந்துள்ளார்.
விபத்துக்குக் காரணமான சாரதி கைதுசெய்யப்பட்டுள்ளபோதிலும் ஒரு உண்மையை மக்கள் தெரிந்துகொள்ளவேண்டும்.
பாதசாரிகள் பாதுகாப்பாக வீதியைக் கடப்பதற்காகவே வீதியின் குறுக்காக மஞ்சள் கோடுகள் வரையப்பட்டன. இந்த நிலையிலும்மஞ்சள்கடவையில்கடக்கும் போதும் அவதானமாகவே அக்கம் பக்கம் பார்த்துத்தான் கடக்க வேண்டுமென்பதை மனதில் கொள்ள வேண்டும்.

## பொது இடத்தில் புகைப்பிடித்த நபருக்குத் தண்டம்

கொழும்பு, செப்3
பொது இடத்தில்புகைப்பிடித்த குற்றச்சாட்டில்சந்தேகநபர்ஒருவரை தியாகொடபொலிஸார்கைதுசெய்துள்ளனர்.
சந்தேகநபரை நீதிமன்றத்தில் முன்னிலைப்படுத்தியபோது அவருக்கு ரூபா2 ஆயிரம் தண்டம் விதிக்கப்பட்டது.
பொதுஇடங்களில்மற்றும்பேருந்துகளிலும் புகைத்தல் தடை செய்யப்பட்டுள்ளது. இதன் அடிப்படையிலேயே குறிப்பிட்ட நபர் பொலி

## மருத்துவமனையில் குழப்பம்; 7 பேருக்கு விளக்கமறியல்

கொழும்பு, பெப். 3
மருத்துவமனையில் குழப்பம் ஏற்படுத்திய சந்தேகநபர்களை எதிர்வரும் 6 ஆம் திகதி வரை விளக்கமறியலில் வைக்குமாறு நீதிவான் உத்தரவிட்டார்.
கண்டி, கலஹாபிரதேசமருத்துவமனையில் கடந்த 28 ஆம் திகதி சிகிச்சைக்காக சேர்க்கப்பட்ட இரண்டுவயதுகுழந்தையொன்று உயிரிழந்தது. இதனையடுத்து அப்பகுதிமக்கள்மருத்துவமனையின் நிர்வாகத்துக்கு எதிராக போராட்டத்தில் ஈடுபட்டதுடன் மருத்துவமனைமீதுதாக்குதலை நடத்தி உடமைகளுக்கு சேதம் விளைவித்தனர். சம்பவத்துடன் தொடர்புடைய சந்தேகத்தின் பேரில்7பேரைநேற்றுமுன்தினம் பொலிஸாரால்கைதுசெய்தனர்.
இவர்களை நேற்று நீதிமன்றில் முற்படுத்திய போது நீதிவான் அவர்களை எதிர்வரும் 06 ஆம் திகதி வரை விளக்கமறியலில் வைக்குமாறு உத்தரவிட்டார்.

## அரச தலைவர் தேர்தலில் களமிறங்குவார் மேர்வின்!

கொழும்பு, செப். 3
வீர துட்டுகெமுனு அமைப்பினூடாக எதிர்வரும் அரச தலைவர் தேர்தலில் போட்டியிடுவேன்என்றுதெரிவித்துள்ள முன்னாள் அமைச்சர் மேவின் சில்வா அதற்கு முன்னர் வடமத்திய மாகாண சபைத்தேர்தல்நடைபெறுமிடத்துதமது அமைப்பின்முதலமைச்சர்வேட்பாளராகக் களமிறங்குவேன் என்றும் தெரிவித்துள்ளார்.
கொழும்பில் அவர் கடந்த வெள்ளிக்கிழமை நடத்திய செய்தியானர் சந்திப்பிலேயே இவ்வாறு கூறியுள்ளார்.
அவர் தெரிவித்தாவது:
கூட்டு எதிர்க்கட்சி எதிர்வரும் ஐந்தாம் திகதி கொழும்பில் மக்கள் எழுச்சிப் பேரணிநடத்துகின்றபோதும்அரசைக் கவிழ்க்க முடியாது. ஏனெனில் குறிப்பிட்ட கால எல்லை முடியும் வரையில் அரசைக் கவிழ்க்க முடியாத வகையில் அரசமைப்பில் ஏற்பாடுள்ளது. நாட்டின் பாரம்பரியங்களிலும், கலாசாரத்திலும், பௌத்ததர்மத்திலும், சிங்களகட்டமைப்பிலும்அரசுகைவைக்குமாக்இருந்தால் அப்போதுவீட்டுக்குச்செல்லவேண்டிவரும்.
வட மாகாணத்திற்குத் தேவையான விடயங்களை மேற்கொள்வதற்கும் விடுதலைப் புலிகளின் தலைவர் பிரபாகரன் கோரியவற்றை செய்வதற்கும் எவரும் ஒத்துழைப்பு வழங்கக்கூடாது -என்றார். (ற)

## உள்நாட்டு வானூர்தி சேவைகளுக்கு இரு நிறுவனங்களுக்கு அனுமதி

கொழும்பு, செப். 3
உள்நாட்டு வானூர்தி சேவைகளை ஆரம்பிக்க இரண்டு உள்நாட்டு நிறுவனங்களுக்கு அனுமதி வழங்குவதாக தலைமை அமைச்சர் ரணில் விக்கிரமசிங்க தெரிவித்தார்.
இதன்மூலம்சுற்றுலாபயணிகளைகொழும்பு, மட்டக்களப்பு, சீகிரிய, பலாலி, திருகோணமலை போன்ற பகுதிகளுக்கு குறைந்த நேரத்தில் அழைத்து செல்வதற்கான வாய்ப்பு கிடைக்கும் என்றும் அவர் தெரிவித்தார். கல்குடா பகுதியில் இடம்பெற்ற நிகழ்வொன்றில் கலந்து கொண்டு உரையாற்றும் போதே அவர் இவ்வாறு தெரிவித்தார்.

## புதிய தொழிலை உருவாக்குவோரே தற்போது நாட்டுக்குத் தேவை

*பிரதி அமைச்சர் தெரிவிப்பு*

கொழும்பு, செப். 3
புதியதொழிலைஉருவாக்குபவர்களேதற்போதுநாட்டிற்கு தேவை என கைத்தொழில் மற்றும் வாணிப அலுவல்கள் பிரதி அமைச்சர் புத்திக பத்திரண தெரிவித்தார். மாத்தறை பகுதியில் இடம்பெற்ற நிகழ்வொன்றில் கலந்துகொண்டு உரையாற்றும் போதே அவர் இவ்வாறு தெரிவித்தார்.
அவர் மேலும் தெரிவித்ததாவது:
சிறு வயது முதலே பெரியவர்கள் கூறுவது போன்று நல்ல வேலை செய்யும் மனிதர்கள் தற்போது உள்ளனர். நாட்டுக்குத் தற்போது தேவை புதிய தொழிலை உருவாக்குபவர்களே -என்றார்.

## 2015ஆம் ஆண்டுடன் ஒப்பிடுகையில் தற்போது அத்தியாவசியப் பொருள்களின் விலை குறைவு

கொழும்பு, செப் .3
அத்தியாவசியபொருள்களின்விலை கடந்த 2015 ஆம் ஆண்டுடன் ஒப்பிடுகையில்தற்போது குறைவாக இருப்பதாக கல்வி அமைச்சர் அகில விராஜ் காரியவசம் தெரிவித்தார்.
குளியாப்பிட்டியபகுதியில்இடம்பெற்ற நிகழ்வொன்றில் கலந்துகொண்டு கருத்து தெரிவிக்கும் போதே அவர் இவ்வாறுதெரிவித்தார். தற்போதைய அரசு எவ்வளவு அபிவிருத்தி நடவடிக்கைகளைமேற்கொண்டாலும்அவை ஊடகங்கள் மூலம் விமர்சிக்கப்படுவதாகவும் அவர் மேலும் தெரிவித்தார்.

## பழங்கள் மீது இரசாயனத் திரவங்களைப் பயன்படுத்துவோருக்கு எதிராக நடவடிக்கை

கொழும்பு, செப் 3
உடலுக்குத் தீங்கு விளைவிக்கும் வகையில் இரசாயனத் திரவங்களைப் பயன்படுத்தி பழங்களைப் பழுக்க வைத்து விற்பனை செய்பவர்களைக் கைது செய்யும் நடவடிக்கைகளை ஆரம்பிக்கவுள்ளதாக விவசாய அமைச்சு அறிவித்தது. இரசாயனத் திரவங்களைப் பயன்படுத்திப் பழங்களைப் பழுக்கச் செய்யும் நடவடிக்கைகளைத் தடுக்கும் நோக்கில் விரிவான வேலைத்திட்டங்கள் முன்னெடுக்கப்படவுள்ளதாக அமைச்சர் மகிந்த அமரவீர அறிவித்துள்ளார்.



அவர் மேலும் தெரிவித்ததாவது:
இரசாயனத் திரவங்கள் பயன்படுத்துவது தொடர்பில் நுகர்வோர் விவகார அதிகார சபைக்கு ஆலோசனை வழங்கப்பட்டுள்ளது.
நாட்டின் சகல பிரதேசங்களிலும் விற்பனை செய்யப்படுகின்ற அனைத்து வகையான பழங்களிலும் இரசாயன திரவங்கள் தெளித்து பழுக்கவைக்கப்பட்டு விற்பனை செய்யப்படுகிறது.
இதனால் பழங்களைக் கொள்வனவு செய்கின்ற பெரும்பாலானோர் பல்வேறு நோய்களுக்கு உள்ளாவதாகக் கண்டறியப்பட்டு அமைச்சுக்கு முறைப்பாடுகள் செய்யப்பட்டுள்ளன - என்றார்.

# இலங்கை மற்றும் நேபாள அரச தலைவர்கள் சந்திப்பு

கொழும்பு,செப். 3

பிம்ஸ்டெக் அரச தலைவர்கள் மாநாட்டில் பங்குபற்றுவதற்காக நேபாளம் சென்றிருந்த அரச தலைவர் மைத்திரிபால சிறிசேனவுக்கும் நேபாளஅரச தலைவர் பித்யா தேவி பண்டாரிக்கும் இடையிலான உதிதியோகபூர்வ சந்திப்பு நேற்று முன்தினம் இடம்பெற்றது.



இலங்கைக்கும் நேபாளத்துக்கும் இடையில் மீன்பிடி, விவசாயம் மற்றும் சுற்றுலா துறைகளில் உறவுகளை பலப்படுத்துவது குறித்தும் தலைவர்கள் கலந்துரையாடினர்.
2017 ஆம் ஆண்டு பன்னாட்டு வெசாக் விழாவுக்கு பங்குபற்ற இலங்கைக்கு மேற்கொண்ட பயணத்தை நினைவுகூர்ந்த நேபாள அரசதலைவர், இதன்போது தனக்கு வழங்கப்பட்ட வரவேற்பை நன்றியுடன் நினைவுகூர்ந்தார்.
ஒவ்வொரு வருடமும் நேபாளத்துக்கு இலங்கை வழங்கிவரும் ஐந்து அரச தலைவர் புலமைப்பரிசில்கள் குறித்து நினைவுகூர்ந்த நேபாள அரச தலைவர், அது தொடர்பில் அரச தலைவருக்கு நன்றி தெரிவித்தார்.
லும்பினியில் கௌதம புத்தர் வானூர்தித் தளத்தை வானூர்தி சேவைக்குத் தேவையான நியமங்களுடன் உடனடியாக அபிவிருத்தி செய்வதற்கு தான் எதிர்பார்த்திருப்பதாகவும் இதன் மூலம் இலங்கையிலுள்ள பௌத்தர்களுக்கு நேரடியாக லும்பினியை தரிசிக்கின்ற சந்தர்ப்பம் கிடைக்கும் என்றும் நேபாள அதரிபர் தெரிவித்தார்.
இங்கு கருத்துத் தெரிவித்த அரச தலைவர் நேபாளத்தில் இலங்கை பௌத்த விகாரைகளின் அபிவிருத்திக்காக ஆரம்பிக்கப்பட்டுள்ள லும்பினி அபிவிருத்தி நிதியத்தினால் அமைக்கப்பட்டுள்ள விரிவான அபிவிருத்தி திட்டத்தை வெற்றிகரமாக மேற்கொள்வதற்கு முழுமையான ஒத்துழைப்பை வழங்குவதாகவும் குறிப்பிட்டார்.
அரச தலைவர்களின் சந்திப்பை தொடர்ந்து இலங்கைக்கும் நேபாளத்திற்குமிடையே இரண்டு புரிந்துணர்வு ஒப்பந்தங்கள் கைச்சாத்திடப்பட்டன.
இலங்கைக்கும் நேபாளத்திற்கும் இடையில் அரச ஊழியர்களை பயிற்றுவிக்கும் புரிந்துணர்வு உடன்படிக்கையில் நேபாள வெளிவிவகார அமைச்சின் செயலாளரும் நேபாளத்திலுள்ள இலங்கைத் தூதுவர் டபிள்யு.எஸ். பெரேரா ஆகியோர் கைச்சாத்திட்டனர்.
இளைஞர் அபிவிருத்தி தொடர்பிலான புரிந்துணர்வு உடன்படிக்கை நேபாளத்திலுள்ள இலங்கை தூதுவர் டபிள்யு.எஸ். பெரேரா மற்றும் நேபாளத்தின் விளையாட்டு அமைச்சின் செயலரும் கைச்சாத்திட்டனர்.
இவ்வாறு அரச தலைவர் ஊடகப்பிரிவு அனுப்பி வைத்துள்ள அறிக்கையில் தெரிவிக்கப்பட்டுள்ளது. (ரி2)

## சிங்கப்பூர் கழிவுகள் இலங்கைக்கு இதில் உண்மைத் தன்மை இல்லை

### என்கிறார் பாட்டலி சம்பிக்க ரணவக்க



கொழும்பு,செப். 3
சிங்கபூரில் உள்ள கழிவுகளை இலங்கைக்குக் கொண்டு வருவதாக எதிர்க் கட்சிகள் தெரிவிப்பதில் எந்தவித உண்மைத் தன்மையும் இல்லை. இவ்வாறு மாநகர மற்றும் மேல்மாகாண அபிவிருத்தி அமைச்சர் பாட்டலி சம்பிக்க ரணவக்க தெரிவித்துள்ளார்.
கினிகத்தனை நகரில் 90 மில்லியன் ரூபா செலவில் அமைக்கப்படவுள்ள புதிய பேருந்து நிலையத்துக்கு அடிக்கல் நடும் நிகழ்வு நேற்று இடம்பெற்றது. இதில் கலந்துகொண்டு உரையாற்றும்போதே அமைச்சர் இதனைத் தெரிவித்தார்.
அவர் தெரிவித்ததாவது.
சிங்கபூரில் இருந்து எந்தவித இரசாயனக் கழிவுகளையும் இங்கு கொண்டுவர வேண்டிய அவசியம் இல்லை. எனவே அவ்வாறு தெரிவிக்கப்படுவது உண்மைக்குப் புறம்பானதாகும்.
தற்போது தொழில்நுட்ப உலகத்தில் வாழும் நமக்கு அனைத்துத் தேவைகளையும் ஸ்மாட் கைத்தொலைபேசியூடாகச் செய்துகொள்ளகூடிய இயலுமை காணப்படுகின்றது. அதற்கமையவே பல்கலைக்கழகங்களிலும் புதியவகைஅப்பை அறிமுகப்படுத்தியுள்ளோம்.
வங்கித்துறை தற்போது நவீனமயப்படுத்தப்பட்டுள்ளதுடன், வாடகைக்கு வாகனங்களைப் பெறுவதற்கும் இணையத்தின் மூலம் வாய்ப்பேற்பட்டுள்ளது. ஊடகங்களும் இந்த புதிய முறைமைக்கு மாறியுள்ளன. அதாவது செய்திகளை முகப்புத்தகத்தில் வெளியிடும் அளவுக்குத் தொழில்நுட்பம் முன்னேறியுள்ளது.
அதற்கேற்றால் போல் எமது தேயிலைத்துறை, ஆடை தொழில்துறை போன்ற துறைகளை அபிவிருத்தியடையச் செய்ய வேண்டியது அவசியமாகும். இந்த உலகத்தின் எதிர்காலம் எமது பிள்ளைகளின் கைகளிலே உள்ளது.
இன்றைய உலகில் முகப்புத்தகம் மற்றும் கூகுள் உள்ளிட்ட வியாபாரத் துறைகளே பெரும் இலாபமீட்டிப் பெரும் வளர்சியைக் கண்டுள்ளன.
இந்தப் புதிய தொழில்நுட்பப் புரட்சியோடு முன்னோக்கிப் பயணிக்கவே எமது பிள்ளைகள் ஆயத்தப்பட வேண்டும். தற்போது எமது நாட்டில் நகரமயமாக்கலே பெரும் பிரச்சினையாகக் காணப்படுகின்றது.
இதற்கு வாகன அதிகரிப்பே முழுக் காரணம். சுதந்திரம் பெறும் போது 5 ஆயிரம் வாகனங்களே இருந்தன. ஆனால் இன்று 75 ஆயிரத்துக்கும் அதிகமான வாகனங்கள் உள்ளன.
கொழும்பில் தற்போது 15 வீதமான காணிகள் போக்குவரத்துக்காக ஒதுக்கப்பட்டுள்ளன. ஆனாலும் பேருந்து மற்றும் தொடருந்துப் போக்குவரத்துக்களுக்கு முக்கியதுவமளித்து செயல்பட வேண்டியுள்ளது.
எதிர்கால சந்ததியினருக்கு அரச போக்குவரத்தே அவசியப்படப் போகின்றதே அன்றி தனியார் போக்குவரத்து பயனளிக்கப் போவதில்லை.
புதிய தொழில்நுட்ப உலகத்துக்கு முகம் கொடுக்க எமது பிள்ளைகள் தயாராக வேண்டும் - என்றார். (ரி2)

## வன்முறையில் ஈடுபடுவோருக்கு சட்ட நடவடிக்கை



கொழும்பு,செப். 3
அரசுக்கு எதிரான ஆர்ப்பாட்டம் எனும் போர்வையில் மகிந்த அணியினால் முன்னெடுக்கப்படவுள்ள நடவடிக்கையின் போது வன்முறையில் ஈடுபடுபவர்களுக்கு எதிராகக் கடுமையான சட்டநடவடிக்கை எடுக்கப்படும். இவ்வாறு சட்டம் ஒழுங்கு அமைச்சர் ரஞ்ஜித் மத்துமபண்டார தெரிவித்துள்ளார்.
விடயம் தொடர்பில் அமைச்சர் தெரிவித்ததாவது.
எதிர்வரும் 5 ஆம் திகதி மகிந்த அணி ஏற்பாடு செய்துள்ள ஆர்ப்பாட்ட நடவடிக்கையின் போது பொது மக்களுக்கெதிரான வன்முறையில் ஈடுபட்டால் அவர்களுக்கு எதிராகக் கடுமையான சட்ட நடவடிக்கை எடுக்கப்படும்.
கூட்டரசில் நாட்டின் எந்தவொரு இடத்திலும் யாருக்கும் ஆர்ப்பாட்டம், போராட்டங்கள் என்பவற்றை நடாத்த ஜனநாயக ரீதியில் உரிமை உள்ளது.
இருப்பினும், ஜனநாயகம் எனும் போர்வையில் வன்முறையான வித்தில் செயல்படுவதற்கோ, அரச சொத்துக்களுக்குச் சேதம் விளைவிப்பதற்கோ முற்படுவார்களாக இருந்தால் பொலிஸார் சட்டத்தைச் சரியாகப் பின்பற்ற வேண்டியிருக்கும்என்றார். (ரி2)

## பொருளாதார அபிவிருத்திக்கான சிறப்புத் திட்டங்கள் துரிதகதியில்

### தலைமை அமைச்சர் அறிவிப்பு



கொழும்பு,செப். 3
கிழக்கு மாகாணத்தின் பொருளாதார அபிவிருத்திக்காக முன்னெடுக்கப்படவுள்ள சிறப்புத் திட்டங்களை துரிதப்படுத்தவுள்ளதாகத் தலைமை அமைச்சர் ரணில் விக்ரமசிங்க தெரிவித்துள்ளார்.
சுற்றுலாத்துறையை மேம்படுத்துவதன்மூலம் கிழக்கு மாகாணத்தில் பொருளாதார அபிவிருத்தியை ஏற்படுத்துவதற்கான நடவடிக்கைகளையும் விரைவுபடுத்தவுள்ளதாக அவர் சுட்டிக்காட்டியுள்ளார்.
600 மில்லியன் ரூபா நிதியில் மட்டக்களப்பு கல்குடா பிரதேசத்தில் அமைக்கப்பட்ட 'கண்ணியமாக வலுவூட்டல் மற்றும் நிலைபேறான அபிவிருத்திகான எம்.ஜே.எப்' நிலையத்தைத் திறந்து வைத்து உரையாற்றுகையிலேயே தலைமை அமைச்சர் இதனைத் தெரிவித்தார். அவர் தெரிவித்ததாவது,
கிழக்கு மாகாணத்தின் அபிவிருத்தி தொடர்பாக அரசு மிகுந்த கவனம் செலுத்தியுள்ளது. திருகோணமலை மாவட்டத்தை அபிவிருத்தி செய்வதற்காக சிங்கப்பூர் நிறுவனமொன்றினால் திட்டமிடப்பட்டுள்ளது. விவசாயத்தை வலுப்படுத்துவதற்கான திட்டங்களை எதிர்காலத்தில் நாம் முன்னெடுக்கவுள்ளோம்
கொழும்பிலிருந்து மட்டக்களப்பு, திருகோணமலை, சிகிரியா மற்றும் பலாலிக்கும் உள்ளூர் வானூர்தி சேவை நடத்துவது தொடர்பாக இரண்டு உள்ளூர் சிவில் வானூர்தி நிறுவனங்களுடன் கலந்துரையாடல்கள் இடம்பெற்றுள்ளது. இந்தத் திட்டங்கள் ஊடாக கிழக்கு மாகாணத்தில் மாற்றங்கள் ஏற்படும் என எதிர்பார்க்கின்றோம். இதன்மூலம் மட்டக்களப்பு, கல்முனை, அம்பாறை போன்ற பகுதிகளில் அதிக இளைஞர் யுவதிகள் படித்துவிட்டு தொழில் வாய்பின்றி உள்ளனர். இவ்விளைஞர் யுவதிகளுக்கு தொழில் வாய்ப்பை ஏற்படுத்துவதே சுற்றுலாத்துறை மேம்பாட்டின் நோக்கம்என்றார். (ரி2)

## பூச்சியம் கூடியதால் அடித்தது அதிஷ்டம்

கொழும்பு,செப். 3
காலியில் உள்ள நிதி நிறுவனம் ஒன்றிடம் கடன் பெற்ற பெண் ஒருவர் கைது செய்யப்பட்டுள்ளார்.
தவறான முறையில் 3 இலட்சத்து 60 ஆயிரம் ரூபா பணம் பெற்றுக் கொண்டார் என்ற குற்றச்சாட்டில் அந்தப் பெண் கைது செய்யப்பட்டுள்ளார். என்று தெரிவிக்கப்படுகிறது.
இவர் நிதி நிறுவனத்தில் 40 ஆயிரம் ரூபா கடன் கோரியுள்ளார். நிறுவன ஊழியர்களின் தவறு காரணமாக அந்தப் பெண்ணுக்கு 4 இலட்சம் ரூபா காசோலை வழங்கப்பட்டுள்ளது.
கடன் பணம் வழங்கப்பட்டதன் பின்னர் கணக்கெடுக்கும் நடவடிக்கையை குறித்த நிதி நிறுவனம் மேற்கொண்டுள்ளது. இதன் போது அந்தப் பெண்ணுக்கு ஒரு பூச்சியம் அதிகமாக எழுதியமையினால் 4 இலட்சம் ரூபா பணம் வழங்கப்பட்டமை தெரியவந்துள்ளது.
கடன் பணத்தைத் தவிர்த்து மீதிப் பணமான 3 இலட்சத்து 60 ஆயிரம் ரூபாவை மீள வழங்குமாறு நிதி நிறுவனம் கேட்டுக் கொண்ட போதிலும் அந்தப் பெண் அதனை நிராகரித்துள்ளார்.
இது தொடர்பில் பொலிஸ் நிலையத்தில் நிதி நிறுவன அதிகாரிகள் முறைப்பாடு செய்துள்ளனர். முறைப்பாட்டுக்கமைய பெண் கைது செய்யப்பட்டுள்ளார்.
குறித்த பெண் மேலதிகமாகக் கிடைத்த பணத்தை அதிஷ்டமாக கிடைத்ததெனக் கூறி அவர் நினைத்தது போன்று செலவு செய்துள்ளதாகத் தெரிவிக்கப்படுகின்றது. (ரி2)

உதயன்
மக்கள் மனம் நிறைந்த தமிழ் நாளிதழ்
தலைமையகம்: 361, கஸ்தூரியார் வீதி, யாழ்ப்பாணம்
செய்தி : 021 493 0000
விளம்பரம் : 021-493 1111
விநியோகம் : 021-493 2222, 021 - 492 7450
செய்தி : uthayanprint@gmail.com கருத்து: comments@uthayan.com
விளம்பரம்: advt@uthayan.com

# இறவாத துவேசம்

இலங்கையின் ஆட்சி, அரசியல், அரசியல் உறுதித்தன்மை, அரசியல் இருப்பு என்று அனைத்தும் 'பௌத்த பேரினவாதம்', 'இனவாதம்' என்ற எண்ணக்கருக்களில் ஊறிப்போயுள்ளன. அவை அவ்வளவு இலகுவில் அழிக்க முடியாதவை என்பது நாளுக்குநாள் மெய்ப்பிக்கப்பட்டு வருகிறது. அரச தலைவர் மைத்திரிபால சிறிசேன – தலைமை அமைச்சர் ரணில் விக்கிரமசிங்க தலைமையில் அமைந்துள்ள கூட்டு அரசுக்கு எதிராக கொழும்பில் நாளைமறுதினம் நடைபெறும் என்று எதிர்பார்க்கப்படும் ஆர்ப்பாட்டம் இதற்கு மிகச்சிறந்த அண்மைக்கால எடுத்துக்காட்டு. வழக்கம்போன்று மகிந்த தரப்பினரால்தான் இந்த ஆர்ப்பாட்டம் நடத்தப்படுகிறது. ஆர்ப்பாட்டம் எங்கு நடைபெறும் என்பதும், அது குறித்தான மேலதிக தகவல்களும் நாளை வெளிவரும் என்று அறிய வருகிறது.

கொழும்பிலோ அல்லது பெரும்பான்மையினரின் பகுதிகளிலோ ஆட்சியமைப்பதற்கு இரண்டு விடயங்களைக் காலாகாலமாகக் கடைப்பிடித்து வருகின்றன சிங்கள பேரனவாதக் கட்சிகள். ஒன்று இனவாதம், மற்றொன்று மதவாதம். இந்த இரண்டு வகையறாக்களுக்குள் உள்ளடங்கும் கருத்துக்களை சீரான இடைவெளியில் வெளிப்படுத்திக் கொண்டிருந்தால்தான் சிங்கள மக்கள் தம்மை நினைவில் நிறுத்துவார்கள் என்பது இந்த இனவாத மதவாத விசுவாசிகளின் நிலைப்பாடு. அந்த வகையில் நாளைமறுதின ஆர்ப்பாட்டம் பௌத்த மதவாதத்தை முன்னிறுத்தி இடம்பெறலாம் என்று எதிர்பார்க்கப்படுகிறது. ''கூட்டு அரசில் பௌத்தம் வேட்டையாடப்படுகிறது'' என்று குறிப்பிட்டு ஆர்ப்பாட்டத்துக்கான திகதியை மகிந்த அறிவித்ததை அடுத்தே, நிகழப்போகும் ஆர்ப்பாட்டம் 'பௌத்தப் போர்வைக்குள்' கச்சிதமாகத் திட்டமிடப்பட்டுள்ளது என்று அறியக்கிடைக்கிறது.

நிச்சயமாக இது புதிதல்ல. புளித்துப்போன ஒன்றுதான். இனவாத, மதவாத இறவாத்துவேசங்களுக்கு இந்த வருடத்திலேயே ஏகப்பட்ட எடுத்துக்காட்டுக்களைக் குறிப்பிடலாம். முடிவடைந்த உள்ளூராட்சித் தேர்தலுக்கான தமது பரப்புரையில் சிங்கள பேரினவாதக் கட்சிகள் வடக்கு– கிழக்கில் பௌத்தத்தை பரவலாக்குவது என்ற தமது திட்டத்தை வெளிப்படுத்தியிருந்ததும், கூட்டு அரசும் கூட்டமைப்பும் இணைந்து முன்னெடுத்துவந்த புதிய அரசமைப்பு உருவாக்கல் முயற்சிகள், 'புதிய அரசமைப்பு உருவாகினால் தமிழர் தாயகம் உருவாகும், கொழும்பைவிடவும் மாகாணங்கள் அதியுச்ச அதிகாரம் பெற்றுத் திகழும்' என்றவாறான மகிந்த தரப்பினரின் இனவாதப் பரப்புரைகளாலேயே முடங்கிப் போயுள்ளதும் அத்தகைய உதாரணங்களில் வெகுசில. இத்தகைய பின்னணிகள், பதிவுகள் இருக்கையில் தற்போது ஏதோவொரு புதிய விடயத்துக்காக அல்லது கருத்தூட்டத்துக்காக 'ஆர்பாட்டம்' என்கிற போர்வையில் அத்திபாரம் போடப்படுகிறது என்பது மட்டும் புலப்படுகிறது.

இன்வாதத்தையும், மதவாதத்தையும் இரு கண்களைப் போன்று விசுவசிக்கும் அரசியல்வாதிகள் சூழ்ந்திருக்கையில், மாகாண சபைகளுக்கான தேர்தல்கள், அரச தலைவருக்கான தேர்தல் என்பன அடுத்தடுத்து வரவுள்ளமை தமிழ் பேசும் மக்களைப் பொறுத்தவரையில் நல்ல செய்தியல்ல. ஏனெனில் தேர்தல் பரப்புரைகளை சிங்கள பேரினவாதத் தலைவர்கள் வெறும் இனவாத, மதவாதத் தேர்தல்களாகவே பார்க்கப்போகின்றனர். எனவே அடுத்துவரும் சிலகாலங்கள் இலங்கையில் எங்கு பார்த்தாலும் நாளுக்குநாள் இனவாதமும் மதவாதமும் வலுப்பெறலாம். அதற்குரிய அத்திபாரமாகக்கூட நாளைமறுதின ஆர்ப்பாட்டம் இருக்கலாம். அவ்வாறு எண்ணிக்கொள்வதில் தவறேதும் இருப்பதாகப் புலப்படவில்லை. ஏனெனில் எவர் அதிக துவேசத்தைக் கக்குகிறாரோ அவரே வெற்றியாளர். எந்தக் கட்சி அதிக துவேசத்தைக் கக்குகிறதோ அதுவே ஆளுங்கட்சி. இலங்கையின் நிலைப்பாடு இதுவே. இங்கு யதார்த்தமும் அதுவே.

# அபிவிருத்தியும் அவசியம்

இந்துமதி

வடக்கு மற்றும் கிழக்கின் அபிவிருத்தி தொடர்பான அரசதலைவர் செயலணியின் கூட்டத்தில் கூட்டமைப்பு நாடாளுமன்ற உறுப்பினர்கள் கலந்து கொண்டதன் மூலமாக அரசதலைவர் மீதான தமது நம்பிக்கையை உறுதி செய்துள்ளனர். அண்மையில் மயிலிட்டித் துறைமுகத்தின் அபிவிருத்திப் பணிகளை ஆரம்பித்து வைக்கும் பொருட்டு யாழ்ப்பாணத்துக்கு வருகை தந்த அரசதலைவர், செயலணியின் கூட்டங்களில் தவறாது பங்குபற்றுமாறு கூட்டமைப்புக்கு அழைப்பு விடுவித்திருந்தமை குறிப்பிடத்தக்கது. ஆனால் அரசதலைவரின் அழைப்பை ஏற்க வேண்டாமென இங்கு குரல்கள் எழுந்தன. முக்கியமாக வடக்கு மாகாண முதலமைச்சர் சி.வி. விக்னேஸ்வரன் கூட்டமைப்பின் தலைவருக்கு எழுதிய கடிதத்தில் அரசதலைவர் செயலணியின் கூட்டத்தைப் புறக்கணிக்குமாறு கேட்டுக்கொண்டிருந்தார். ஆனால் கூட்டமைப்பின் நாடாளுமன்றக் கூட்டத்தில் பங்குபற்றிய அனைத்து நாடாளுமன்ற உறுப்பினர்களும் விக்னேஸ்வரனின் கோரிக்கைக்கு எதிரான முடிவை எடுத்திருந்தனர். இதனடிப்படையில் விக்னேஸ்வரனின் கோரிக்கையை நிராகரிப்பதாக சம்பந்தன் பதில் கடிதத்தை விக்னேஸ்வரனுக்கு அனுப்பி வைத்தார்.

**வடக்கு - கிழக்கின் அபிவிருத்தி அவசியம்**

இன்றைய நிலையில் வடக்கு-கிழக்கின் அபிவிருத்தி முக்கியத்துவம் வாய்ந்த ஒன்றாகக் காணப்படுகின்றது. இதன் மூலமாகத் தமிழ் மக்களே அதிகளவில் நன்மை பெறுவார்கள். இதற்கு வாய்த்த ஒரு சந்தர்ப்பத்தை எட்டி உதைப்பது தமிழர்களுக்கே பாதகமாகிவிடும். இறுதிப்போரின் போது இடம்பெற்றதாகக் கூறப்படும் போர்க்குற்றங்கள், மனித உரிமை மீறல்கள், காணாமல் ஆக்கப்பட்டவர்களின் விவகாரம், வடக்கில் இடம்பெறுகின்ற அத்துமீறிய சிங்களக் குடியேற்றங்கள், வெளிமாவட்ட மீனவர்களால் நடத்தப்படுகின்ற அத்துமீறல்கள், படையினரால் ஆக்கிரமித்து வைக்கப்பட்டுள்ள பொதுமக்களுக்குச் சொந்தமான காணிகள் விடுவிக்கப்படாமை, வீடுகளை இழந்தவர்களின் நிர்க்கதியான நிலை எனப் பல்வேறு பிரச்சினைகளுக்குத் தமிழ் மக்கள் முகம் கொடுத்து வருகின்றனர். இதைவிட அரசியல் தீர்வின் மூலமாக இனப்பிரச்சினைக்குத் தீர்வு காண வேண்டிய அவசியமும் உள்ளது. இவற்றுக்கு மேலதிகமாக வடக்குக் கிழக்கின் அபிவிருத்திக்கு முன்னிலை வழங்க வேண்டிய தேவையும் எழுந்துள்ளது. அபிவிருத்திக்கு ஆதரவு வழங்குவதன் மூலமாக ஏனைய விடயங்கள் பின் தள்ளப்பட்டுவிடுமென விக்னேஸ்வரன் தரப்பினர் கூறு கின்றனர்.



முதலில் அரசியல் தீர்வு அதற்குப் பின்னரே மற்றவையெல்லாமென அவர்கள் நியாயப்படுத்தவும் முயல்கின்றனர். ஆனால் ஒன்றை அவர்கள் மறந்துவிட்டனர். போர் காரணமாகச் சீர்குலைக்கப்பட்ட வடக்கு மற்றும் கிழக்கு மாகாணங்கள் இன்னமும் அபிவிருத்தி காணப்படாமல் பின்தங்கிய நிலையில் காணப்படுகின்றன. ஏனைய பகுதிகளுடன் ஒப்பிடும்போது இது வெளிப்படையாகவே தெரிகின்றது. விரைவு வீதிகள் அமைக்கப்பட்டு வாகனங்களும் அதிகளவில் நடமாடினால் அதுவே அபிவிருத்தியென எம்மவர்கள் நினைக்கின்றனர். இதுவொரு தவறான சிந்தனையாகும். போருக்கு முன்னர் வடக்கிலும், கிழக்கிலும் அமைந்திருந்த தொழிற்சாலைகளில் ஏராளமானவர்கள் தொழில் வாய்ப்பைப் பெற்றிருந்தனர். இதனால் ஆயிரக்கணக்கான குடும்பங்கள் பொருளாதாரச் சிரமமின்றி வாழக்கூடியதாக இருந்தது. ஆனால் இன்று அந்த நிலை காணப்படவில்லை. ஏராளமானவர்கள் தொழில் வாய்ப்பின்றிக் காணப்படுவதால் அவர்களது குடும்பங்கள் வருமானமின்றித் தவித்து வருகின்றன.


**தொழில் வளங்கள் பெருக வேண்டும்**


ஆகவே முன்னர் போன்று வடக்கிலும், கிழக்கிலும் தொழிற்சாலைகளை மீள இயங்கவைப்பதற்கான நடவடிக்கைகள் முன்னெடுக்கப்பட வேண்டும். புனரமைக்கப்படாத நிலையில் காணப்படுகின்ற வீதிகள் யாவும் புனரமைக்கப்பட வேண்டும். பாடசாலைகளில் போதிய கட்டட வசதிகள் ஏற்படுத்தப்படுவதோடு அங்கு காணப்படுகின்ற சகல குறைபாடுகளும் நிவர்த்தி செய்யப்பட வேண்டும். வைத்தியசாலைகளின் அபிவிருத்தியிலும் முக்கிய கவனம் செலுத்தப்பட வேண்டும். நோயாளர்கள் அருகில் உள்ள வைத்தியசாலைகளில் தமது மருத்துவத் தேவைகளை நிவர்த்தி செய்யும் வகையில் அவை அபிவிருத்தி செய்யப்படல் வேண்டும். ஒரு காலத்தில் கொடிகட்டிப் பறந்த கூட்டுறவுத்துறை இன்று மோசமான நிலையில் காணப்படுகின்றது. கூட்டுறவுத் துறையை அபிவிருத்தி செய்து பழைய நிலைக்கு அதைக் கொண்டு வருதல் அவசியமானதாகும். அதைவிட சிறுதொழில் முயற்சிகளுக்கு ஊக்கமும், உதவிகளும் வழங்கப்பட்டால் தொழில் வாய்ப்புக்களை ஏற்படுத்த முடியுமென்பதுடன் பொருளாதார அபிவிருத்தியையும் எட்டமுடியும். வடக்கு மாகாணத்தில் நீர்வளம் மிகக் குறைவாகவே காணப்படுகின்றது. இரணைமடு போன்ற ஒன்றிரண்டு பெரிய குளங்களைத் தவிர மழை நீரைத் தேக்கி வைக்கக்கூடிய வசதிகள் எதுவும் காணப்படவில்லை. இதனால் மாரிகாலத்தில் பெய்கின்ற மழைநீர் கடலில் கலக்கின்ற அவலநிலை காணப்படுகின்றது. சிறிய அணைகளை அமைப்பதன் மூலமாக மழை நீரைத் தேக்கிவைத்து கோடை காலத்தில் பயன்படுத்த முடியும். இதனால் கிணறுகளிலிருந்து போதுமான குடிதண்ணீரைப் பெற்றுக்கொள்ள முடியும். அணைகளில் தேக்கி வைக்கின்ற நீரின் மூலமாக சிறுபோக விவசாயத்தை தடையின்றி மேற்கொள்ள முடியும். மழை நீரைச் சேகரிக்கும் திட்டம் வெற்றிகரமாகச் செயற்படுத்தப்படுமானால் யாழ்ப்பாணக் குடாநாட்டின் குடிதண்ணீர்ப் பிரச்சினைக்கு நிரந்தரமான தீர்வைக் காணமுடியும்.

இவற்றைவிட வேறுபல அபிவிருத்தித் திட்டங்களைச் செயற்படுத்த வேண்டிய தேவையும் வடக்குக் கிழக்கில் உள்ளது. அரசியல் தீர்வுக்கான முயற்சிகளுக்குச் சமாந்தரமாக அபிவிருத்தித் திட்டங்களையும் வடக்குக் கிழக்கில் மேற்கொள்வது காலத்தின் தேவையாகும்.

# குமரிக் கண்டத்தில் அய்யன் வள்ளுவருக்கு 133 அடியில் சிலை அமைத்தார் கருணாநிதி

தேவநாயகம் தேவானந்த்





## தமிழ்த் தலைவன் மு.கருணாநிதி-24

கலைஞர் கருணாநிதி தனது எழுத்துக்களால் தமிழுக்குப் பங்களித்திருக்கிறார். தனக்கெனவொரு தனித்துவமான இடத்தினைப் பதிவு செய்துள்ளார். இதனையெல்லாம் தாண்டி அவர் தமிழுக்குச் செய்த பங்களிப்பாக சிலவரலாற்று முக்கியத்துவம் வாய்ந்த விடயங்களைக் குறிப்பிடுகிறார்கள். அதில் குமரிக்கண்டத்தில் 133 அடி வள்ளுவர் சிலையை நிறுவியது, மெரீனாவில் தமிழ் அறிஞர்கள் பெரியார்களின் சிலைகளை நிறுவியது, வள்ளுவர் கோட்டம் நிறு வியது, ஆசியாவிலேயே பெரிய நூலகமான அண்ணா நூலகத்தை நிறுவியது, தமிழுக்கு செம்மொழி அந்தஸ்தைப் பெற்றுக் கொடுத்தது, தமிழுக்கு செம்மொழி மகாநாடு நடத்தியது, மனோன்மணியம் சுந்தரம் பிள்ளை எழுதிய 'நீராடும்' என்ற பாடலை தமிழ்த்தாய் வாழ்த்தாக அரசு விழாக்களில் பாடும் வழக்கத்தை 1970ஆம் ஆண்டில் ஏற்படுத்தியது போன்ற பலவற்றை அடிக்கிக் கொண்டு போகிறார்கள். இவற்றை ஒவ்வொன்றாகப் பார்க்கலாம்.

> இருபதாம் நூற்றாண்டு முடிந்து 21ஆம் நூற்றாண்டு பிறந்த வேளையில், குமரி முனையில் 133 அடி உயர திருவள்ளுவர் சிலையை அப்போதைய முதலமைச்சர் கருணாநிதி திறந்து வைத்தார்.

**கலைஞரின் சிந்தனை**

தமிழ்நாடு அரசு திருவள்ளுவருக்கு கன்னியாகுமரிக் கடலில், கடல் நடுவே, நீர் மட்டத்திலிருந்து 30 அடி உயரமுள்ள பாறை மீது 133 அடி உயரச்சிலை அமைத்துள்ளது. உலகில் இதுபோன்ற கருங்கற்களால் ஆன சிலை கிடையாது. இந்த சிலை அமைப்பதற்கான திட்டத்தை முன்மொழிந்தவர் கலைஞர் கருணாநிதி. 1975 டிசம்பர் மாதம்தமிழ்நாடு அரசு சார்பில், கன்னியாகுமரியில் திருவள்ளுவர் சிலை அமைக்கப்படும் என்று அப்போதைய முதல் அமைச்சர் கருணாநிதி அறிவிக்கிறார். அந்த அறிவிப்பு வெளியான சில நாள்களில் அவரது ஆட்சி கலைக்கப்பட்டு விட்டதால் அவரால் அந்தத் திட்டத்தைத் தொடங்க முடியவில்லை. பின்னர் முதல் அமைச்சராகப் பதவி ஏற்ற எம்.ஜி.ஆர். கன்னியாகுமரியில் 40 அடி பீடத்தின் மீது 30 அடி உயர திருவள்ளுவர் சிலை அமைக்கப்படும் என்று அறிவித்தார். குன்னியாகுமரியில் வள்ளுவர் சிலை அமைக்கும்பணியைஎம்.ஜி.ஆர். முன்னிலையில் மொரார்ஜி தேசாய் தொடங்கி வைத்தார்.

**பணிகள் ஆரம்பம்**

1989ஆம் ஆண்டில் மீண்டும் முதலமைச்சராகப் பொறுப்பேற்றார் கருணாநிதி. உடனேயே விரைவில் திருவள்ளுவர் சிலை அமைக்கப்படும் என்று அறிவித்தார். 1990ஆம் ஆண்டில் திருவள்ளுவர் சிலை எழுப்பும் பணியை கருணாநிதி தானே உளியைக்கொண்டு செதுக்கி தொடங்கி வைத்தார். வள்ளுவர் சிலையை, வள்ளுவர் கோட்டத்தை உருவாக்கிய கணபதி ஸ்தபதி உருவாக்கினார். அவர் தலைமையில் 500 சிற்பிகள் சிலையை உருவாக்கும் பணியில் ஈடுபட்டனர். இந்திய மத்தியரசு இந்தப் பணிக்கும் முட்டுக்கட்டை போட்டது. திருவள்ளுவர் சிலையை அமைப்பதால், கன்னியாகுமரியில் உள்ள வெளிச்ச வீட்டிற்கு இடையூறு ஏற்படும் என்று கூறி, திருவள்ளுவர் சிலையை அமைக்க வேண்டாமென்று 1994ஆம் ஆண்டில் இந்திய மத்திய அரசு தடை விதித்தது. ஆனால், 1996ஆம் ஆண்டில் கருணாநிதி மீண்டும் முதல் அமைச்சராகப் பொறுப்பேற்றார்., திருவள்ளுவர் சிலை அமைக்கும் பணிக்கு மீண்டும் உயிர் கொடுத்தார்.

**குறட்பாக்களைக் கொண்டமைந்த சிலை**

1999ஆம் ஆண்டில் சிலை அமைக்கும் பணிகள் முடிவ டைந்தன. 38 அடி உயரமான பீடத்தில் 95 அடி உயரமான சிலை அமைக்கப்பட்டுள்ளது. அதாவது, பீடத்தையும் சேர்த்து சிலையின் மொத்த உயரம் 133 அடி. மொத்த எடை 7 ஆயிரம் தொன். 3 ஆயிரத்து 681 கற்களைக்கொண்டு, சிலை அமைக்கப்பட்டுள்ளது. திருவள்ளுவர் சிலையை அமைப்பதற்கு மொத்த செலவு ரூ.10 கோடி ஆகும். இதில் 133 குறட்பாக்கள் பொறிக்கப்பட்டுள்ளன. திருவள்ளுவர் சிலை அமைக்கும் பணி 1990ஆம் ஆண்டில் ஆரம்பிக்கப்பட்டு 2000ஆம் ஆண்டு ஜனவரி முதலாம் திகதி சிலை திறக்கப்பட்டது. சிலையினுள் 130 அடி உயரம் வரை வெற்றிடம் உள்ளது. இந்த வெற்றிடம் சிலையின் உறுதித் தன்மையை உறுதிப்படுத்துகிறது. பீடத்தின் 38 அடி உயரமானது திருக்குறளின் அறத்துப்பாலின் 38 அதிகாரங்களையும், பீடத்தின் மேல் நிற்கும் 95 அடி உயரச் சிலையானது திருக்குறளின் பொருள் மற்றும் இன்பத்துப்பாலின் 95 அதிகாரங்களையும் குறிப்பதாகத் திகழ்கின்றது. மண்டபத்தின் உட்புறச் சுவற்றில் ஒவ்வொரு அதிகாரத்திலிருந்து ஒரு குறள் வீதம் 133 குறட்பாக்கள் தமிழிலும் அவற்றுக்கு நிகராக ஆங்கில மொழி பெயர்ப்பிலும் பொறிக்கப்பட்டுள்ளன.

இருபதாம் நூற்றாண்டு முடிந்து 21ஆம் நூற்றாண்டு பிறந்த வேளையில், குமரி முனையில் 133 அடி உயர திருவள்ளுவர் சிலையை அப்போதைய முதலமைச்சர் கருணாநிதி திறந்து வைத்தார்.

அந்த விழாவில் கலந்து கொண்ட சிவாஜி கணேசன் "தாஜ்மஹாலைப் போல தஞ்சைக் கோவிலைப்போல இந்தத் திருவள்ளுவர் சிலையும், இதை அமைத்த கருணாநிதியும் நீடித்து நிற்பார்கள்" என்று கூறினார். இந்த விழாவில் கருணாநிதி பேசுகையில், "திருவள்ளுவரை இனி கவிஞன் என்றோ, புலவன் என்றோ அழைக்காதீர்கள். தெய்வாம்சம் பொருந்திய அவரை 'அய்யன்' என்றே அழையுங்கள்" என்றார்.

(தொடரும்)

## ஆசிரியருக்கான கடிதம்

### மயிர்கொட்டிகளில் இருந்து விமோசனம் இல்லையா?

மசுக்குட்டிகள் என்று சொல்லப்படும் மயிர்கொட்டிகளின் பிரச்சினை நாளுக்குநாள் அதிகமாகிக் கொண்டே செல்கிறது. தெருவோரங்களால் பயணிப்பதென்பது பெரும் சவால் மிகுந்த விடயமாக மாறியுள்ளது. தெருவோரத்தால் செல்லும்போது பூவரசு வேலிகளில் தொங்கிக் கொண்டிருக்கும் மயிர்கொட்டிகள் மக்களைப் பதம் பார்த்து விடுகின்றன.

இதனால் ஏற்படுகின்ற இடர் சொல்லி மாளாதது. அண்மையில்கூட சுன்னாகத்தில் தெருவோரமாகச் சென்றுகொண்டிருந்தபோது பூவரசன் கிளையில் தொங்கிக் கொண்டிருந்த மயிர்கொட்டி முகத்தைப் பதம் பார்த்ததை அடுத்து அன்று முழுவதும் நகர வேதனையாகப் போய்விட்டது. எனவே வேலிகளுக்கு உரிமையாளர்கள் வீதிகளை நோக்கி நீட்டிக் கொண்டிருக்கும் வேலிகளை உரிய நேரத்தில் வெட்டிப் பராமரிக்க முன்வர வேண்டும். பயணிகள் சிரமமற்ற முறையில் தமது பயணத்தை மேற்கொள்ள அவர்கள் நடவடிக்கை எடுக்க வேண்டும்.

அருளானந்தம் ,சுன்னாகம்

### சமிக்ஞைகளைக் கடைப்பிடியுங்கள்

கடந்த புதன்கிழமை வேம்படிப் பாடசாலைக்கு அருகில் அமைந்திருக்கும் வீதி சமிக்ஞை விளக்குப் பகுதியில் நடந்த சம்பவமொன்றை இங்கு பதிவுசெய்தது தவிர்க்க முடியாததாகிறது. சிகப்பு நிற விளக்கு எரிந்து கொண்டிருக்கிறது. அந்த அவகாசம் முடிவடைந்து நான் நிற்கும் பக்கத்தால் வாகனங்கள் செல்வதற்கு சுமார் 40 செக்கன்கள் வரை இருந்தன. இரண்டு இளைஞர்கள் தமது அதி நவீன மோட்டார் சைக்கிளில் வந்தார்கள். எனது அருகில் நின்றார்கள். அங்கும் இங்குமாகப் பார்த்துவிட்டு சட்டென தமது மோட்டார் சைக்கிளை எடுத்துக்கொண்டு சென்று விட்டார்கள். திரும்பிப் பார்த்தேன் சுமார் 20 வாகனங்கள் சமிக்ஞையைக் கடைப்பிடித்தவாறு அங்கு நின்றிருந்தன. எனின், பச்சை வெளிச்சத்துக்காகக் காத்திருந்த அனைவரும் முட்டாள்களா?. 40 செக்கன்கள் காத்திருப்பதில் என்ன நடந்துவிடப் போகிறது. இந்த வகையறாக்குள் உள்ளடங்குகிறவர்களே ஏகப்பட்ட வீதி விபத்துக்குள்ளுக்கும் காரணமாகிறார்கள். தானாக முடியும் தமது விதியை வாரித் தலையில் அள்ளிப் போட்டுக் கொள்கிறார்கள். இவர்கள் தரவளிகளுக்கு எது நடந்தாலும் பரவாயில்லை. எதிரே வருபவர்களுக்கு ஏதும் நடந்துவிட்டால்......!. தயவு செய்து சமிக்ஞைகளைக் கடைப்பிடியுங்கள். உங்கள் வித்துவத் தனங்களை வீதிகளில் காட்டாதீர்கள். பின்னர் விதி முடிந்துவிடும்.

பரமு, ஆனைக்கோட்டை

## பாகிஸ்தானுக்கான உதவித்தொகையில் கைவைத்தார் அமெரிக்க அதிபர் ட்ரம்ப்



வொஷிங்டன், செப். 3
பாகிஸ்தானில் உள்ள ஆயுதக் குழுக்களை அழிப்பதற்காக பாகிஸ்தானுக்கு வழங்கிவந்த உதவித் தொகையை நிறுத்துமாறு அறிவித்தார் அமெரிக்க அதிபர் ட்ரம்ப். பாகிஸ்தான் வருடந்தோறும் சுமார் 5 ஆயிரம் கோடி ரூபாவை பயங்கரவாதத்தை அழிப்பதற்காக அமெரிக்காவிடம் இருந்து பெற்று வருகிறது. ஆனால் தம்மிடம் இருந்து பெறும் நிதிக்கு உரிய மதிப்பை பாகிஸ்தான் வழங்கவில்லை. ஆயுதக் குழுக்களை அழிக்கவில்லை. மாறாக ஆயுதக் குழுக்களின் மட்டில் பாகிஸ்தான் அரசு சகிப்புத் தன்மையுடன் நடந்து கொள்கிறது என்று குற்றஞ்சாட்டினார் அமெரிக்க அதிபர் ட்ரம்ப். இதன் தொடர்சியாக பாகிஸ்தானுக்கு வழங்கிவரும் நிதி உதவியை முற்றாக நிறுத்துமாறு அவர் நேற்று உத்தரவிட்டார். அந்தத் தொகை வேறேதும் அவசரத் திட்டங்களுக்குச் செலவிடப்படும் என்றும் ட்ரம்ப் அறிவித்தார். (ம)



# பலஸ்தீனத்துக்கான
# நிறுத்தி அமெ. நடவ


வொஷிங்டன், செப். 3
பலஸ்தீனத்துக்கு வழங்கி வந்த உதவித் தொகையை முற்றாக நிறுத்துமாறு அமெரிக்க அதிபர் டொனால்ட் ட்ரம்ப் உத்தரவிட்டிருந்த நிலையில், அந்த உத்தரவு நேற்று நடைமுறைக்கு வந்தது. அமெரிக்காவின் இந்த அறிவிப்பால் பலஸ்தீன அகதிகளைப் பராமரிக்க ஐக்கிய நாடுகள் சபை திண்டாடும் என்று கருதப்படுகிறது. பலஸ்தீனத்தின் ஒருபகுதியான ஜெருசலேமை இஸ்ரேல் கடந்த ஐந்து தசாப்தங்களாக ஆக்கிரமித்து வைத்துள்ளது. அமெரிக்க அதிபர் ட்ரம்ப் கடந்த வருடத்தின் இறுதிப் பகுதியில் இஸ்ரேலின் தலைநகராக ஜெருசலேமை அங்கீகரித்தார். அத்துடன் இஸ்ரேலுக்கான அமெரிக்கத் தூதரகத்தையும் ஜெருசலேமில் திறக்குமாறு உத்தரவிட்டு அதன்படி நடவடிக்கை எடுத்துள்ளார். அமெரிக்காவின் இந்த நடவடிக்கைகளை பலஸ்தீனர்கள் ஏற்றுக்கொள்வில்லை. இஸ்ரேல் பலஸ்தீன எல்லைப் பகுதிகளான காசா, மேற்குக் கரை, கிழக்கு ஜெருசலேம் என்பனவற்றில் தொடர்ந்து ஆர்ப்பாட்டங்களும் போராட்டங்களும் நடத்தப்பட்டு வருகின்றன. பலஸ்தீனர்களின் விடுதலையை வலியுறுத்திப் போராடிவரும் ஹமாஸ் அமைப்பு இஸ்ரேலுக்கு எதிரான போராட்டங்களை தீவிரப்படுத்தியிருந்தது. இந்த நிலையில் பலஸ்தீனத்துக்கு வருடாவருடம் வழங்கும் நிதியுதவி கடந்த சில வாரங்களுக்கு முன்னர் பாதியாகக் குறைக்கப்பட்டது. கடந்த சில




மெக்சிக்கோவில் இருந்து நாள்தோறும் நூற்றுக் கணக்கானவர்கள் அமெரிக்காவுக்குள் சட்டவிரோதமாக ஊடுருவிச் செல்கின்றனர். அவர்களைக் கட்டுப்படுத்த நாள்தோறும் பற்பல நடவடிக்கைகளை மேற்கொண்டு வருகிறது அமெரிக்கா. அமெரிக்க எல்லைகள் பலப்படுத்தப்பட்டுள்ளன. அவ்வாறு அமெரிக்காவுக்குள் சட்டவிரோதமாக ஊடுருவியவர்கள் பொலிஸாரால் மடக்கிப் பிடிக்கப்படும் இந்த ஒளிப்படம் பன்னாட்டு ஊடகமான ரொயிட்டர்ஸால் வெளியிடப்பட்டது. (ம)

## இமாலயத் தொலைநோக்கி

விண்வெளியைப் பல மடங்கு துல்லியமாகப் படம்பிடிக்கக்கூடிய உலகின் அதி நவீன தொலைநோக்கி சிலி நாட்டில் உருவாக்கப்பட்டு வருகிறது.
உலகின் மிகப் பெரிய தொலைநோக்கியாக அமையும் இந்த 'ஜெயன்ட் மெக்கல்லன் டெலஸ்கோப்', எதிர்வரும் 2024ஆம் ஆண்டு முதல் செயல்படத் தொடங்கும் என்று கூறப்படுகிறது. இதைப் பயன்படுத்தி, விண்ணியல் ஆய்வாளர்களால் பண்டைய பிரபஞ்சம் மற்றும் வேற்றுக்கிரக உயிர்கள் பற்றி ஆராய முடியும் என்று நம்பப்படுகிறது.
சிலி மலைத்தொடரில் கட்டுமானப் பணியாளர்கள் இந்த ஒரு பில்லியன் டொலர் செயல்திட்டத்துக்கான அடிப்படைப் பணிகளை சமீபத்தில் ஆரம்பித்து செயற்படுத்தி வருகின்றனர். புதிய தொலைநோக்கியின் எடை 2 மில்லியன் பவுண்டாக இருக்கும் என்று மதிப்பிடப்பட்டிருக்கிறது. (ம)





ா நிதியை
வடிக்கை!

தினங்களுக்கு முன்னர் மீதித் தொகையையும் நிறுத்துமாறு ட்ரம்ப் உத்தரவிட்டிருந்த நிலையில் நேற்று இந்த உத்தரவு நடைமுறைக்கு வந்தது. பலஸ்தீனம் பயங்கரவாதத்துக்கு துணைபோகின்றது அல்லது பயங்கரவாதிகள் மட்டில் சகிப்புத் தன்மையுடன் நடந்துகொள்கிறது என்ற குற்றச்சாட்டின் அடிப்படையிலேயே அமெரிக்காவால் இந்த நடவடிக்கை மேற்கொள்ளப்பட்டது. அமெரிக்கா 'பங்கரவாதம்' என்ற அடையாளத்துக்குள் பலஸ்தீனத்தின் விடுதலைக்காகப் போராடும் ஹமாஸ் அமைப்பை வைத்துள்ளது. அமெரிக்காவின் இந்த நடவடிக்கைக்கு ஐக்கிய நாடுகள் சபையின் பொதுச் செயலாளர் குத்தேரஸ் வருத்தம் தெரிவித்தார். (ம)

# ரஷ்யாவிடம் இருந்து ஆயுதங்கள் வாங்கினால் இந்தியாவுக்குப் பொருளாதாரத் தடை விழும்!


## அமெரிக்கா அடித்தது 'பல்டி'

வொஷிங்டன், செப். 3

"ரஷ்யாவிடம் இருந்து இந்தியா ஆயுதங்களை வாங்கினால் இந்தியாவுக்கு எதிராகப் பொருளாதாரத் தடைகள் விதிக்கப்படுவது தவிர்க்க முடியாதது" என்று வெள்ளை மாளிகையின் அதிபர் ஒருவர் தெரிவித்தார் என்று பன்னாட்டு ஊடகங்கள் செய்தி வெளியிட்டன.

எதிரி நாடுகளின் ஏவுகணைத் தாக்குதலில் இருந்து நாட்டை பாதுகாத்துக்கொள்ளும் சாதனங்களை ரஷ்யாவிடம் இருந்து கொள்முதல் செய்ய இந்தியா திட்டமிட்டுள்ளது. இந்தச் சாதனங்களின் மதிப்பு ரூ. 31 ஆயிரத்து 500 கோடி (இந்திய மதிப்பில்) ஆகும். ஆனால், பல்வேறு விவகாரங்களுக்காக, ரஷ்யா மீது அமெரிக்கா பொருளாதாரத் தடை விதித்துள்ளது. ரஷ்யாவிடம் ஆயுதங்களைக் கொள்முதல் செய்யும் இந்தியா மீதும் அமெரிக்கா பொருளாதாரத் தடை விதிக்கும் என்ற கணிப்பு எழுந்திருந்தது. அதே சமயத்தில், நட்பு நாடாக இருப்பதால், பொருளாதார தடை விதிக்கப்படுவதில் இருந்து இந்தியாவுக்கு அமெரிக்கா தானாகவே விலக்கு அளிக்கும் என்றும் கருதப்பட்டது. இதன்படி, "பொருளாதாரத் தடையில் இருந்து இந்தியாவுக்கு விலக்கு வழங்கப்படலாம்" என்று அமெரிக்க இராணுவத்துறைத் தலைவர் மேட்டிஸ் அண்மையில் அறிவித்தார். இந்த விவகாம் தொடர்பில் எதிர்வரும் 6ஆம் திகதி இந்திய - அமெரிக்கப் பிரதிநிதிகளுக்கு இடையில் பேச்சு நடைபெறவுள்ளது.

இந்த நிலையில், 'இந்தியா ரஷ்யாவிடம் இருந்து இராணுவத் தளபாடங்களை வாங்கினால் இந்தியாவுக்கு எதிராக பொருளாதாரத் தடை என்பது தவிர்க்க முடியாததாக ஆகிவிடும்' என்று வெள்ளை மாளிகையின் அதிகாரியொருவர் தெரிவித்தார் என்று பன்னாட்டு ஊடகங்கள் செய்தி வெளியிட்டன. (ம)



## சிந்து நதி உடன்படிக்கையை மீண்டும் செயற்படுத்த முடிவு!

இஸ்லாமபாத், செப். 3

சிந்து நதி உடன்படிக்கையை இந்தியா - பாகிஸ்தான் ஆகிய இரு தரப்பும் மீண்டும் செயற்படுத்த முடிவு செய்துள்ளன.

இந்தியா, பாகிஸ்தான் இடையே கடந்த 1960ஆம் ஆண்டில் சிந்து நதி உடன்படிக்கை கையெழுத்தானது. இதன்படி ரவி, பீஸ், சட்லஜ் ஆகிய சிந்து படுகையின் கிழக்குப் பகுதி நதிகள் இந்தியாவுக்கு ஒதுக்கப்பட்டன. மேற்குப் பகுதி நதிகளான சிந்து, ஜீலம், செனாப் ஆகியவற்றில் 80 சதவீத நீர் பாகிஸ்தானுக்கு ஒதுக்கப்பட்டது. இந்த உடன்படிக்கையின்படி இருநாட்டு அதிகாரிகளும் ஆண்டு தோறும் சந்தித்துப் பேச வேண்டும். ஆனால் இருநாடுகளுக்கும் இடையே ஏற்பட்ட விரிசல் காரணமாக கடந்த பல ஆண்டுகளில் பேச்சு நடத்தப்படவில்லை.

பாகிஸ்தானின் புதிய தலைமை அமைச்சராக இம்ரான் கான் பதவியேற்றுள்ள நிலையில் இந்த ஆண்டுக்கான பேச்சு அந்த நாட்டின் லாகூர் நகரில் கடந்த வியாழன், வெள்ளி இரு நாள்கள் நடைபெற்றது. சிந்து ஒப்பந்தத்தை மீண்டும் செயற்படுத்துவதற்கு இரண்டு தரப்புக்களும் விருப்பம் தெரிவித்தன. (ம)

## தென்சீனாவில் கடும் மழை

பீஜிங், செப். 3

சீனாவின் தெற்குப் பகுதியில் கடும் மழைபெய்து வருகிறது. அங்குள்ள பல பகுதிகள் வெள்ளக்கடாக மாறியுள்ளன. லட்சக் கணக்கான மக்கள் இடம்பெயர்துள்ளனர்.


சீனாவின் தெற்குப் பகுதியில் அமைந்துள்ள குவாண்டாங் மாகாணத்தில் கனமழை பெய்து வருகிறது. இதனால் ஏற்பட்ட வெள்ளப் பெருக்கில் அங்குள்ள 27 மாவட்டங்கள் நீரில் மூழ்கியுள்ளன. சுமார் 44 ஆயிரத்து 700 ஹெக்டயர் பண்ணை நிலங்கள் வெள்ளத்தால் பாதிக்கப்பட்டுள்ளதால் சுமார் 1 பில்லியன் யுவான் (146 மில்லியன் அமெரிக்க டொலர்) அளவுக்கு சேதம் ஏற்பட்டுள்ளது என்று தெரிவிக்கப்பட்டுகிறது. இதனால், அந்தப் பகுதியில் வசித்துவந்த 1.27 லட்சம் மக்கள் பாதுகாப்புக் கருதி முன்னெச்சரிக்கை நடவடிக்கையாக வெளியேற்றப்பட்டுள்ளனா். (ம)



## பறவைகளை விரட்டும் பச்சைக்கதிர்

வொஷிங்டன், செப். 3

புதிய தொழில்நுட்பங்கள் பல துறைகளிலும் முன்னேற்றத்தைக் கொண்டு வந்துள்ளதைப்போல, விவசாயத்திலும் முன்னேற்றத்தைக் கொண்டுவந்திருக்கிறது. அமெரிக்காவின் ஓரிகனில் உள்ள பெர்ரி தோட்டத்தில் பறவைகளால், 25 வீதம் இழப்பு ஏற்பட்டு வந்தது. அவர்களும் பல்வேறு வழிகளில் பறவைகளின் பிரச்சினைக்குத் தீர்வு காண முயன்றனர். இறுதியில் தொழில்நுட்பத்தின் உதவியால் அது சாத்தியமாகியிருக்கிறது. பெர்ரி காய்க்க ஆரம்பித்த உடன் தோட்டத்தில் 6 இடங்களில் அக்ரிலேசர் அட்டானமிக்ஸ் என்ற தானியங்கி லேசர் துப்பாக்கிகள் வைக்கப்பட்டன. பறவைகள் கூட்டமாக பழங்களை நோக்கி வரும்போது தானியங்கி லேசர் துப்பாக்கிகளில் இருந்து பச்சை வண்ண கதிர்கள் பீய்ச்சப்படும். ஒளி வந்தவுடன் பறவைகள் சட்டென்று பறந்துவிடுகின்றன. இதன் விளைவு, அறுவடையில் தெரிந்திருக்கிறது. தானியங்கி லேசர் கருவிகள் மூலம் இரை தேடிவந்த 99 வீதமான பறவைகள் விரட்டப்பட்டிருக்கின்றன. இந்த சீசனில் 2 லட்சத்து 62 ஆயிரத்து 500 கிலோ பெர்ரிகள் பறவைகளிடமிருந்து பாதுகாக்கப்பட்டிருக்கின்றன. பல்



வேறு வண்ண கதிர்களை வெவ்வேறு அலை நீளங்களில் செலுத்திப் பரிசோதனை மேற்கொள்ளப்பட்டது. இறுதியில் பச்சை வண்ணக் கதிருக்கே பறவைகளை விரட்டும் சக்தி அதிகம் இருப்பதாகக் கண்டறியப்பட்டது.

"பறவைகளின் கண்களும் மூளையும் சிவப்புக் கதிரைவிட, பச்சைக் கதிருக்கே அதிகமாக ஒத்துழைத்தன. சிவப்பை விட பச்சை 8 மடங்கு பயனை அதிகமாகத் தந்தது. ஆபத்தும் குறைவாக இருந்தது. வண்ணங்களை முடிவு செய்த பிறகு, ஒளியின் நீளத்தைப் பரிசோதித்தோம். எதில் பறவைகளை அதிகமாக விரட்ட முடிகிறது என்பதைத் தெரிந்துகொண்டோம். பிறகுதான் தானியங்கி லேசர் கருவிகளை உருவாக்க ஆரம்பித்தோம். இப்போது லேசர் கருவிகள் உலகம் முழுவதும் பல்வேறு இடங்களில் பயன்படுத்தப்பட்டு வருகின்றன. வானூர்தி நிலையம், எண்ணெய் நிறுவனங்கள் உட்பட 6 ஆயிரத்துக்கும் அதிகமான இடங்களில் லேசர் கருவிகள் இயங்கி வருகின்றன" என்கிறார் தானியங்கி லேசர் கருவிகளை உருவாக்கும் நிறுவனத்தைச் சேர்ந்த தலைமை செயல் அதிகாரி ஸ்டெய்னர். (ம)

# இன்றைய நாள்

**மேடம்:** நல்லோரின் வழிகாட்டுதலால் நம்பிக்கை பெறுவீர்கள். தொழில், வியாபாரத்தில் அளவான மூலதனம் போதும். இலாபம் சுமார். பெண்கள் அதிக விலையுள்ள பொருட்களை கவனமுடன் பாதுகாக்கவும்.

**இடபம்:** நண்பர்களிடம் எதிர்பார்த்த உதவி கிடைக்கும். முக்கியமான பணி எளிதாக நிறைவேறும். தொழில், வியாபார வளர்ச்சியால் புதிய சாதனை படைப்பீர்கள். ஆதாயம் அதிகரிக்கும்.

**மிதுனம்:** எதிலும் முன்யோசனை செயல்படுவது நல்லது. தொழில், வியாபாரத்தில் கூடுதல் கவனம் செலுத்துவது அவசியம். சராசரி அளவில் பணவரவு கிடைக்கும்.

**கடகம்:** வாழ்வில் புதிய அனுபவங்களை எதிர்கொள்வீர்கள். தொழில், வியாபாரத்தில் போட்டி குறையும். நிலுவைப்பணம் வசூலாகும். தாயின் தேவை அறிந்து நிறைவேற்றுவீர்கள்.

**சிங்கம்:** குடும்பத்தினரின் ஆலோசனையை ஏற்பது நல்லது. தொழில், வியாபாரம் செழிக்க கூடுதல் அளவில் பணிபுரிவீர்கள். எதிர்பார்த்ததை விட இலாபம் கூடும்.

**கன்னி:** பணியில் பொறுப்பு அதிகரிக்கும். தொழில், வியாபாரம் தாமத கதியில் இயங்கும். இலாபம் சுமாராக இருக்கும். சேமிப்பு பணம் திடீர் செலவால் கரையும். பிள்ளைகளால் உதவி உண்டு.

**துலாம்:** உங்கள் நற்பெயரை பாதுகாப்பது நல்லது. தொழில், வியாபாரத்தில் லாபம் சுமாராக இருக்கும்.. பணவிஷயத்தில் விழிப்புடன் இருக்கவும். சகோதர வழியில் உதவி கிடைக்கும்..

**விருச்சிகம்:** நண்பரிடம் குடும்பவிஷயம் பேசுவீர்கள். தொழில், வியாபாரம் வளர்ச்சி பெற அனுகூலம் அதிகரிக்கும். பணம் கொடுக்கல் வாங்கல் சீராக இருக்கும்.

**தனுசு:** குடும்பத்தினர்கள் உதவிகரமாக நடந்து கொள்வர். தொழில், வியாபாரம் செழித்து வளர புதிய உத்திகளை பயன்படுத்துவீர்கள். ஆதாயம் அதிகரிக்கும்.

**மகரம்:** குழப்பத்தால் பணி நிறைவேறுவதில் தாமதம் உண்டாகும். தொழில், வியாபாரத்தில் இலாபம் சராசரி அளவில் இருக்கும்..உறவினர் வகையில் திடீர் செலவு ஏற்படலாம்.

**கும்பம்:** சிலரது பேச்சு உங்களை சங்கடப்படுத்தும். தொழில், வியாபாரம் செழித்து வளர கூடுதல் உழைப்புத் தேவைப்படும்.

**மீனம்:** நிலுவைப் பணிகளை ஞாபகப்படுத்தி நிறைவேற்றுவீர்கள். தொழிலில் உற்பத்தி, விற்பனை அதிகரிக்கும். உபரி வருமானம் கிடைக்கும்.

04.09.2018



# இந்தியன்-2இல் நயன்தாரா

ஷங்கரின் இயக்கத்தில் 1996ஆம் ஆண்டு வெளியான 'இந்தியன்' படத்தின் இரண்டாம் பாகத்தைத் தயாரிக்கும் வேலைகள் தொடங்கி உள்ளன. இதில் கமலுக்கு ஜோடியாக நயன்தாரா நடிக்கவுள்ளார் என்று தகவல்கள் வெளியாகியுள்ளன.

இந்தியன்-2 முழு அரசியல் படமாக இருக்கும் என்று ஏற்கனவே ஷங்கர் கூறியுள்ளார். முதல் பாகத்தில் லஞ்சம் வாங்கும் அதிகாரிகளை எதிர்ப்பதாக கதை இருந்தது. இரண்டாம் பாகம் ஊழல் செய்யும் அரசியல்வாதிகளுக்கு எதிரான கதை என்கின்றனர்.

கமல் அரசியலில் ஆர்வம் காட்டுவதால், இதில் நடிக்கிற இருவேடங்களிலுமே கமல் ஊழலுக்கு எதிராகப் போராடுவார் என்றும் பேசப்படுகிறது.



சிந்திக்க...

# சிரிப்பு

நாம் போகிற இடங்களிலெல்லாம், செய்கிற காரியங்களிலெல்லாம் வெற்றி பெற வேண்டுமெனில், சிரித்த முகமாக, மனதை இலேசாக வைத்துக் கொள்ள, நாம் தயாராக இருக்க வேண்டும். வாழ்க்கையை வெற்றி கண்டவர்கள் எப்போதும் மாறாத புன்னகை, பொறுமை, சுறுசுறுப்பு மற்றும் நிதானம் என்றவாறாகத் தான் இருப்பர். வாழ்க்கையென்றால் ஏற்றங்களும், இறக்கங்களும்; இன்பமும், துன்பமும்; மகிழ்ச்சியும், வருத்தமும் இருக்கத்தான் செய்யும்.

உங்கள் பார்வையை மட்டும் கொஞ்சம் மாற்றிக் கொள்ளுங்கள். அன்றாடம் நாம் செய்யும் வேலைகள், எம்மைச் சுற்றி நடக்கும் விடயங்கள் என, சின்னச் சின்ன விடயங்களைக் காதலிக்க ஆரம்பியுங்கள். தானாகவே மனம் இலேசாகி, முகத்தில் புன்னகை தாராளமாகவே உதிக்கும்.சில சமயங்களில் உங்கள் புன்னகைக்குக் காரணம், உங்கள் மகிழ்ச்சியாக இருக்கலாம். ஆனால், பல சமயங்களில் உங்கள் மகிழ்ச்சிக்குக் காரணம், உங்கள் புன்னகையாக இருக்கலாம்.

மனிதன் சிரித்தால், மனித மனம் மாறும். மனிதன் மாறினால், அவனைச் சுற்றியுள்ள உலகமும் மாறும் என்ற அடிப்படை தான் இதற்கு காரணம்.

இது சாத்தியமே என்பதை அறிவியல் உண்மைகள் உறுதிப்படுத்துகின்றன. மன இறுக்கம் குறைய, நட்பை வளர்க்க, நெருக்கமாகப் பழக, இடைவெளியைக் குறைக்க, மனம் தெளிவு பெற, மன மகிழ்ச்சி உண்டாக துணை நிற்பது எம் சிரிப்புத் தான். சிரிக்கும் போது, மனதில் ஒருவித மகிழ்ச்சியான, கலகலப்பான உணர்ச்சி ஏற்படுகிறது. அப்போது, ஆரோக்கியமான வேதிப் பொருள்கள், எம் உடலில் உற்பத்தியாவதால், நோய் தீர்க்கும் மருந்தாகிறது சிரிப்பு. புரட்சி செய்ய புன்னகை போதும். மேலை நாடுகளில், மருத்துவர்களே நோயாளிகளுக்கு நகைச்சுவை இறுவெட்டுக்களைக் கொடுத்து மருத்துவமனையிலேயே பார்க்கச் சொல்வார்கள். இதனால், நல்ல முன்னேற்றம் காணப்படும் என்பது அவர்களின் கண்டுபிடிப்பு.

நோய் எதிர்ப்பு சக்தியை, உடலில் உற்பத்தி செய்யும் வெள்ளை அணுக்களை, சிரிப்பு முடுக்கி விடுகிறது. குழந்தைகள் ஒரு நாளைக்கு, 400 முறை சிரித்தால், நாம், 15 முறை தான் சிரிக்கிறோம். ஆகவே நாமும் எமது ஆயுளை அதிகரிக்க மனதை உற்சாகப்படுத்த அனைவரிடமும் சிரித்து வாழ வேண்டும்.



# சுடோக்கு

எண் விளையாட்டு

| | | | | | | | | |
|---|---|---|---|---|---|---|---|---|
| 2 | 9 | 8 | 7 | 4 | 1 | | | 5 |
| | 3 | | | | | 4 | 1 | |
| | | | | 3 | | | | |
| | | | 4 | | 3 | | | |
| | 1 | | | | 7 | 9 | | |
| | 6 | 3 | | 1 | 9 | | | |
| | 8 | 7 | 2 | | 4 | | | |
| 5 | | | 3 | 8 | 6 | | | |
| 3 | | | 1 | | | | 8 | |

| | | | | | | | | |
|---|---|---|---|---|---|---|---|---|
| 9 | 5 | 2 | 1 | 8 | 3 | 6 | 7 | 4 |
| 7 | 3 | 1 | 2 | 4 | 6 | 9 | 8 | 5 |
| 4 | 8 | 6 | 5 | 7 | 9 | 1 | 3 | 2 |
| 2 | 1 | 9 | 6 | 3 | 5 | 7 | 4 | 8 |
| 3 | 4 | 7 | 9 | 2 | 8 | 5 | 6 | 1 |
| 5 | 6 | 8 | 7 | 1 | 4 | 2 | 9 | 3 |
| 8 | 9 | 5 | 3 | 6 | 2 | 4 | 1 | 7 |
| 6 | 7 | 4 | 8 | 5 | 1 | 3 | 2 | 9 |
| 1 | 2 | 3 | 4 | 9 | 7 | 8 | 5 | 6 |










இவ்வுலகில் நல்லவர்கள் என்று யாருமேயில்லை என்று கவலைப்பட்டேன்....
சற்று முன்னர் கண்ணாடியைப் பார்த்தேன் அந்தக் கவலை நீங்கியது.....!!



amudu @amuduarattai · 3h

அம்மாவை விட, அம்மாவின் மொபைலையே, அதிகம் பிடிக்கிறது குழந்தைகளுக்கு இன்று.

1 7 14

# மகிழ்ச்சி வெளியிலிருந்து வருவதில்லை

ஓர் ஊரில் மிகப்பெரிய பணக்காரன் ஒருவன் இருந்தான். அவனிடம் இல்லாதது என்று எதுவுமே இல்லை. எல்லாமே இருந்தன. தங்கம், வெள்ளி, நவரத்தினங்கள், அழகிய வீடு, அன்பான மனைவி, நல்ல குழந்தைகள், சிறந்த நண்பர்கள் என்று எல்லா வசதிகளும் இருந்தன. ஆனாலும் அவன் சந்தோசமாக இல்லை.

அவனின் பணக்காரத் தன்மையைக் கண்ட சிலர் அவனிடம் நட்புக் கொண்டனர். தீய வழிகளில் ஈடுபடுத்தினர். மது,மங்கை, சூதாட்டம் போன்ற எல்லாவற்றுக்கும் அழைத்துச் சென்று அவன் மனதைச்சந்தோசப்படுத்த முயன்றார்கள். ஆனால் எதிலும் அவன் சந்தோசத்தை அடையவில்லை. மனம் நிம்மதி இழந்திருந்தது. ஒருசிலர் இடம் மாறுதல் நல்ல பயன்தரும் என்று சொல்லி அவனை வெளிநாடுகளுக்கு அழைத்துச் சென்று கண்ணுக்கினிய காட்சிகளைக் காட்டினர். ஆனால் எதிலும் அவன் மனம் சந்தோசம் அடையவில்லை. அந்த நேரத்தில் அவனுடைய ஊருக்கு ஒரு யோகி வந்தார். சந்நியாசிகள் நினைத்தால் மன அமைதி உண்டாக்கமுடியும் என்று யாரோ சொல்லக் கேள்விப்பட்டு தன் செல்வங்களை எல்லாம் ஒரு மூட்டையாகக் கட்டிக் கொண்டு யோகியின் முன்சென்று நின்றான்.

"சுவாமி இதோ நீங்கள் பார்க்கும் இந்த மூட்டையில் என்னுடைய சொத்துக்கள் எல்லாவற்றையும் வைத்திருக்கிறேன். இதைத் தங்களிடம் ஒப்படைக்கிறேன். அதற்கு மாறாக நீங்கள் தயவு செய்து எனக்கு மன அமைதியையும் சந்தோசத்தையும் தரவேண்டுகிறேன்'' என்று கூறினான்.



யோகி சிறிது நேரம் யோசித்துவிட்டு மூட்டையைப் பிரித்துப் பார்த்தார். அதற்குள் வைரம், வைடூரியம், பொன் என்று பலவகைத் திரவியங்கள் மின்னின. இவற்றைப் பார்த்த யோகி அந்த மூட்டையைக்கட்டி தன் தலையில் வைத்துக்கொண்டு ஓட ஆரம்பித்தார்.

பணக்காரன் செயல் இழந்தான். "என்ன இது... பணத்தையும் செல்வத்தையும் பார்த்தவுடன் அவற்றைத் தூக்கிக்கொண்டு ஓட ஆரம்பித்துவிட்டாரே. இவர் உண்மையிலேயே யோகியா? யோகிபோல வேடம் பூண்ட சந்நியாசியா? என்ன கொடுமை! நான் மகான் என்று எண்ணி ஒரு திருடனிடம் பணத்தையும் கொடுத்து விட்டேனே. ஐயோ! என் செல்வம் போகிறதே!'' என்று எண்ணினான். அடுத்த விநாடி யோகியைத் துரத்திக்கொண்டு ஓட ஆரம்பித்தான். யோகியின் ஓட்டமோ தேர்ந்த ஓட்டப்பந்தய வீரரின் ஓட்டத்தைப் போலிருந்தது.

ஒரு மணி நேரத்தின் பின் யோகி எங்கிருந்து ஓட்டத்தை ஆரம்பித்தாரே அதே இடத்துக்கு வந்து சேர்ந்தார். பணக்காரனும் அங்கே வந்து நின்றான். யோகி மூட்டையை அவன் முன் போட்டு பின் கூறினார் " நீ இப்போது பயந்துபோய் விட்டாய் இல்லையா? உன்னுடைய பணத்தையும் பொருளையும் நீயே வைத்துக் கொள்". பணக்காரன் இதை எதிர்பார்க்கவில்லை. தனக்கு வராது என்று எண்ணிய தன் பொருள்கள் தனக்கே திருப்பிக் கிடைத்தது கண்டு, பயந்தே தன் செல்வத்தைத் திருடன் தன்னிடம் ஒப்படைத்து விட்டான் என்று எண்ணியவுடன் அவன் மீது அவனுக்குக் கர்வம் பிறந்தது. அப்போது அந்த யோகி சொன்னார். "அன்பனே, நீ இங்கே வருவதற்கு முன்னால் உன்னிடம் இதே பொருள்கள்தான் இருந்தன. அப்போதெல்லாம் உன் மனதில் சந்தோசம் இல்லை. நான் இதை எடுத்துக்கொண்டு ஓடிச்சென்று, பின் உன்னிடம் ஒப்படைத்ததும் உன் பொருள்கள் தான், இருந்தாலும் உன் மனதில் ஏகப்பட்ட சந்தோசம் வந்து விட்டது.


ஒன்றை மட்டும் தெரிந்துகொள். சந்தோசத்தை எப்போதும் வெளியிலிருந்து வாங்க முடியாது. அது நம் மனதில்தான் இருக்கிறது என்பதை நீ புரிந்துகொள்ள வேண்டும். இப்போது யோகியின் அறிவுரை அவன் மனதில் நின்றது. தவறுக்கு மன்னிக்கும்படி வேண்டி விடை பெற்றான் பணக்காரன்.

**மகிழ்ச்சி வெளியிலிருந்து வருவதில்லை.**

# வானூர்திகள்



- வானூர்தி மனிதனின் மகத்தான படைப்பாகும்.
- பறைவையைக் கண்ட மனிதன் இறக்கையைக் கட்டிக்கொண்டு பறந்து பார்த்தான்
- பலூன்களைச் செய்து அதில் தொங்கிப் பறந்து பார்த்தான். விஞ்ஞானத்தின் விந்தையினால் வானூர்தியைக் காட்டினான்.
- றைட் சகோதரர்களின் பெருமுயற்சிதான் வானூர்தி உருவாகக் காரணமானது.
- இன்று நவீனரக விமானங்கள் வான வீதியில உலா வருகின்றன.
- பயண நேரத்தை வானூர்திகள் இலகுவாக்கிவிட்டன.
- ஒரு சில மணித்தியாலங்களில் நினைத்த இடத்தைச் சென்றடையலாம்.
- வானூர்தியில் பயணம் செய்வவது புல்லரிக்கும் நிகழ்வாகும்.
- காதுகளில் பஞ்சை வைத்துக் கொண்டால் இரைச்சல் கேட்காது.
- வானூர்திக்குள் இருந்து யன்னல் வழியாகப் பார்த்தால் அற்புதமாக இருக்கும்.
- வானத்தில் மேகக் கூட்டங்கள் ஊடாகப் பயணிப்போம்.
- மேகக் கட்டடங்கள் வானூர்தியைச் சூழ்ந்து காட்சி தரும்.
- நீலக் கடல் நமக்கு மிகக் கீழே தெரியும்.




# இலங்கையிலுள்ள முக்கிய குளங்களும் அவற்றைக் கட்டிய மன்னர்களும்



| குளம் | கட்டிய மன்னர்கள் |
|---|---|
| மின்னேரியாக்குளம் | மகாசேனன் |
| அபய வாவி | பண்டு காபயன் |
| ஜய வாவி | பண்டு காபயன் |
| காமினி வாவி | பண்டு காபயன் |
| கலா வாவி | தாது சேனன் |
| பராக்கிரம சமுத்திரம் | பராக்கிரமபாகு |
| திஸ்ஸ வாவி | தேவநம்பியதீசன் |
| எலகாரக் கால்வாய் | வசப மன்னன் |
| கந்தளாய் குளம் | தும் அக்போமன்னன் |



அன்ரனி பீற்றர்

# குடும்பம் ஒரு கோயில்

## ஒற்றுமை என்ற வாழ்வியல் அறத்தைப் பேணுவோம்



வாழ்க்கை இறை படைப்பியல்பில் மனிதங்கள் கொள்ளும் 'வாழ்க்கை' என்ற மகோன்னதம் அற்புதமானது. தனித்துவப் பேறுடையது. மகிழ்தலின் கோலாகலங்களை நீண்டு தந்திருப்பது. துன்பங்களை முன் செய்த பாவ புண்ணியப் பட்டியலின் படியான அளவிடை பெறுமானமாக அவ்வப்போது வெளிப்படுத்தி வாழ்வியல் நெறியை செம்மைப்படுத்துவது. அந்த வகையிலே வாழ்க்கையின் கூறான குடும்பங்கள் சிறப்புக்குரியவையாக விளங்கு கின்றன.

ஆம், சமூகப் பொதுமையுள் குடும்பங்களின் கட்டமைப்பு தனித்துவமாக நோக்கப்படுகிறது. கூட்டாக இணைந்து வாழ்தல் இங்கு சிறப்புரிமை நிலை பெறுகிறது. முகம் காணாத இருவர் கொண்ட மனமோகனங்கள் ஒருமிதமாய் இணைந்திட மண வாழ்வில் இணைந்துகொள்கின்றனர். குடும்பமாக இல்லற தர்மம் தனை செழிப்புற அரவணைத்திட மனம் கொள்கின்றனர்.

குழந்தைச் செல்வங்களை பேறாக்கி மகிழ்கின்றனர். அவர்கள் வழியேயான சந்ததி விருத்தயடைகிறது. அன்னை தந்தையாக பெற்றோர் என்ற உயர் குருத்துவ நிலையை கண்டடைகின்றனர். பிள்ளைகளை பேணிப் பாதுகாத்து, சீராட்டி, அறிவூட்டி சமூகப்பொதுமையுள் முந்தியிருப்பச் செய்கின்ற பணிகளை சிறப்பாக மேற்கொள்கின்றனர்.

### தாய்மையின் சிறப்பு

அவ்வகையிலே தாய்மையின் சிறப்பு இங்கு நோக்குதற்குரியது. உயிராக, உடலாக, உறவாக தாய் உயர்வான மகத்துவங்களைப் புரிகிறாள். உயிரின் இயங்குநிலை என்பது தாய்மையின்றி ஒருபோதும் அமையாது. தாய்மையின் மேன்மை அத்தகையது. நாம் உணர்ந்தும் புரிந்தும் செயல்வழி தெரிந்தும் கொண்டுள்ளோம். தன்னலம் கருதாத அற்புதப் பிறவி தாய். 'அடக்கம், அமைதி, அன்பு, பொறுமை' மட்டுமின்றி அறநெறியால் கூறப்பட்ட பெண்மைக்கான அத்துணை நற்குணங்களையும் கொண்டவள். கட்டிய மஞ்சள் கயிறுக்கு கட்டுப்பட்டு கணவனுக்காகவும், குடும்பத்திற்காகவும், குழந்தைகளுக்காகவும் தன்னலம் கருதாது குடும்ப நலம் பேணுபவள். சுமைதாங்கியாய் வாழ்ந்து குடும்பத்திற்குள் தன்னை தொலைத்துக்கொள்கிறாள். இதன் வழியே, 'தாயிற் சிறந்த கோவிலும் இல்லை. தந்தை சொல் மிக்க மந்திரமில்லை' என்ற முதுமொழி தாய்மையின் தனிச் சிறப்பான எழுந்தருளலை உலகெலாம் விளங்கச் செய்துள்ளமை அற்புதம்.

### பொறுப்புணர்வு

பொதுவாக தாய் தந்தையர் இருவருமே ஒருவருக்கொருவர் அன்பாகவும் பிரியமாகவும் இருக்க வேண்டும். எக்காரணம் கொண்டும் ஒருவரையொருவர் பிறரிடம் விட்டுக் கொடுக்கக் கூடாது. எந்த ஒரு விடயமாக இருந்தாலும் இருவருமே கலந்தாலோசித்தே முடிவெடுக்க வேண்டும். உடல் நலம் இல்லாத போது மிகுந்த கனிவுடன் உடனிருந்து இருவரும் ஒருவரையொருவர் கவனிக்க வேண்டும்.

ஆம், வாழ்வியல் நெறியில் ஊடல் இருக்க வேண்டும். ஊடலுக்கு பின்பு தான் ஒருவரையொருவர் புரிந்துணர்ந்து கொள்ளக் கூடிய சந்தர்ப்பம் ஏற்படும். உறவில் நெருக்கம் அதிகமாகும். தவறு செய்தது யார் என்கிற ஆராச்சியில் ஈடுபடாமல் தாமாகவே சென்று பேசி சமாதனமாகி விடவேண்டும். இருவருமே சமவுரிமை உள்ளவர்கள் என்கிற மனோபாவத்தை வளர்த்துக் கொண்டால் குடும்பத்தில் சந்தோஷம் தழைத்தோங்கி விடும்.

இங்கு, தம்பதிகள் சந்தோஷமாக வாழ்வது அவர்களுக்கு மட்டும் நன்மை பயப்பதல்ல. அவ்விருவரின் குடும்பத்தார் பிள்ளைகள் அனைவருக்குமே மகிழ்வைக் கொடுக்கும். ஒருவருக்கொருவர் அன்பு பாராட்டி சகிப்புத் தன்மையுடனும், பொறுமையுடனும் விட்டுக் கொடுத்து வாழ்வதை பார்க்கக் கூடிய பிள்ளைகள் இத்தகைய நற்பண்புகளை தங்கள் வாழ்விலும் கடைபிடித்து நன்மை அடைவார்கள். அமைதியான சூழ்நிலை நிலவக் கூடிய இல்லறத்தில், வாழ்வின் வசந்தங்கள் என்றென்றும் பூத்துக் குலுங்கும். எப்போதுமே நல்ல குடும்பங்கள் பரிணமிக்கும்.

### பண்பான குடும்பம்

"அன்பும் அறனும் உடையதாக விளங்குமானால் அந்த வாழ்க்கையின் பண்பும் பயனும் அதுவாகும்" என்பது வள்ளுவன் வாக்கு. ஆனாலும் 'சச்சரவு, அன்பின்மை, குரோதம், வன்மை, பொறாமை, கணவன் மீது வஞ்சம், மனைவி மீது இரக்கமின்மை, குழந்தைகளிடம் அன்பு செலுத்தாமை' போன்ற பல்வேறு காரணங்களினால் சில குடும்பங்கள் புயலின் நடுவே சிக்கிய சிறு படகின் நிலையில் தத்தளிக்கின்றன. குடும்பம் என்பது பெரும் காற்றிலும் அணையாத தீபமாக மிளிர வேண்டும்.

### மனம் உண்டானால் இடம் உண்டு

தாழ்வு மனப்பான்மை இன்றி ஆணும், பெண்ணும் சம அந்தஸ்து கொண்ட உயிரிகள்தான் என்ற எண்ணமே குடும்பத்தை நல்லதொரு முன்னேற்றப்பாதைக்கு எடுத்துச்செல்ல ஏதுவாக அமையும். 'இன்றைய வரவு என்ன?, செலவு என்ன?, சேமிப்பு என்ன?, பிள்ளைகளின் நலன்குறித்த கலந்துரையாடல், மனம்விட்டுப்பேசுதல்' போன்ற தனித்துவ செயல்வினைகளே குடும்பத்தில் ஏற்படும் குழப்பங்களுக்கு மிகப்பெரிய தீர்வாக அமையும். இருவரிடையேயோன புரிதல் இங்கு மிக அவசியமாகிறது. இதனையே, "புரிதல் இல்லாத வாழ்வு கொத்தும் பாம்போடு வாழ்வதற்கு சமமானது" என்கிறார் வள்ளுவர். வயதுக்கு வந்த பெண் மற்றும் ஆண் பிள்ளைகளிடம் உலக யதார்த்தத்தைப் பதிவு செய்ய வேண்டும். அதற்குரித்தான நேரத்தை கண்டிப்பாக ஒதுக்க வேண்டும். புராணக்கதைகள், நன்னெறி கதைகளை கூறும் தாத்தா, பாட்டிகள் பல வீடுகளில் இல்லை. அவர்கள் முதியோர் இல்லத்திற்கு வலுக்கட்டாயமாக தள்ளப்பட்டு விட்டனர். தனித்தனி தீவாய் நம்மைசுற்றி மட்டும் ஒரு கூட்டுப்புழுவாய் கூடு கட்டி வாழப்பழகியதை நாம் முற்றிலும் உடைத்தெறிய வேண்டும்.

### விட்டுக்கொடுத்து வாழப் பழகுவோம்

தற்போதுள்ள காலகட்டத்தில் குடும்ப ஒற்றுமை சீர்குலைந்து ஆணும், பெண்ணும் சண்டையிட்டு பொலிஸ் நிலையங்களுக்கும் நீதிமன்றங்களுக்கும் அலைகின்ற நிலை தோற்றம் பெற்றுள்ளது. ஒருவருக்கொருவர் அன்பிற்கு அடிமையாகி கட்டுண்டு இருக்க வேண்டுமே தவிர அதிகாரம் காட்டி வெட்டுண்டு கிடப்பது எந்த வகையில் நியாயம்?. குடும்பம் என்பது நல்லதொரு இரட்டை மாட்டுவண்டி போன்றது. அதில் கணவன், மனைவி ஒருங்கிணைத்து செல்ல வேண்டும். ஆளுக்கொரு திசையில் சென்றால் வண்டி இயக்கமுறாது. மனைவி அமைவதெல்லாம் இறைவன் கொடுத்த வரம் என்பார்கள். ஒரு குடும்பத்தின் பெண் நல்லவளாக அமைந்துவிட்டால் அந்தக் குடும்பம் அமைதியாய், அழகாய் அமையும். இதனை அக்குடும்பத் தலைவன் அதாவது கணவன் புரிந்துகொள்ள வேண்டும். ஒருவருக்கொருவர் அன்பினை பரிமாறி, குடும்ப நலனில் அக்கறை செலுத்தி, விட்டுக்கொடுத்து குடும்பம் அமைதிப் பூங்காவாக நறுமணம் தரும் நந்தவனமாக அமைந்திட பாடுபட வேண்டும்.

*"கூடி வாழ்ந்தால் கோடி நன்மை."*





## நல்லூர் கந்தன் 19ஆம் நாள் திருவிழா

### தலைமைகளில் மாற்றம் வேண்டும்

இறக்குமதிப் பொருட்களில் அவதானம் வேண்டும்
இந்த மண்ணுக்குப் புரியவில்லையே முருகா!
இறக்குமதித் தலைமைகளிலும் மாற்றம் வேண்டும்
இந்த மண்ணுக்குப் புரிந்தால் போதும்
உறக்கமதிலும் அரசியலே ஆட்சி புரிகிறது
உருப்படியாய் எதுவும் நடக்கவில்லையே?
ஊர் ஊராய் அலைந்து திரிந்த மக்களின்
உரிமைக்கு விமோசனம் இல்லையே முருகா!
சறுக்குமென்று மக்களுக்குப் புரிகிறது இனிச்
சரிவராதென்றும் மக்களுக்குத் தெரிகிறது
இறப்பு என்று ஒன்று வருவதற்கு முன்னதாக
இந்த மண்ணுக்கு விடிவு வராதா முருகா!
ஒறுத்து வாழ்ந்த மக்களுக்கு என்ன தேவை
ஒரு தொழிற்சாலை கூட இல்லை முருகா
ஒரு ரூபாவோடு நீயோ உலகையாள்கிறாய்
ஒரு மாகாணசபையால் சாதிக்க முடியவில்லையே.

கே.எஸ்.சிவஞானராஜா

# PEOPLE'S BANK

## தங்கநகை ஏலவிற்பனை அறிவித்தல்

மக்கள் வங்கியின் பின்வரும் கிளைகளிலும் சேவை நிலையங்களிலும் **31.07.2017** வரையும் அடகு வைத்து மீட்கப்படாத நகைகள் - **22.09.2018** (சனிக்கிழமை), **23.09.2018** (ஞாயிற்றுக் கிழமை) ஆகிய திகதிகளில் காலை **8.30** மணிக்கு மக்கள் வங்கி, யாழ். ஸ்ரான்லி வீதி, கிளையில் வைத்து பகிரங்க ஏலத்தில் விற்கப்படும்.

| கிளைகள் | சேவை நிலையம் | நகை மீளெடுப்பதற்கான இறுதி திகதி | ஏலவிற்பனை நடைபெறும் இடமும் திகதியும் |
|---|---|---|---|
| யாழ்.ஸ்ரான்லி வீதி | கொக்குவில் (நாவலர் வீதி) | 21.09.2018 | 22.09.2018 (சனிக்கிழமை) 23.09.2018 (ஞாயிற்றுக்கிழமை) யாழ். ஸ்ரான்லி வீதி, கிளை |
| | மானிப்பாய் | | |
| தெல்லிப்பழை | மல்லாகம் | | |
| | காங்கேசன்துறை | | |
| யாழ். பிரதான வீதி | உரும்பிராய் | | |
| ஊர்காவற்றுறை | - | | |
| நெல்லியடி | - | | |
| அச்சுவேலி | புத்தூர் | | |
| சங்கானை | பண்டத்தரிப்பு | | |
| சுன்னாகம் | கோப்பாய் | | |
| | அளவெட்டி | | |
| சாவகச்சேரி | கைதடி | | |
| வல்வெட்டித்துறை | உடுப்பிட்டி | | |
| யாழ். பல்கலைக்கழகம் | திருநெல்வேலி | | |
| | கல்வியங்காடு | | |
| யாழ். கன்னாதிட்டி | இணுவில் | | |
| பருத்தித்துறை | புலோலி | | |
| கொடிகாமம் | - | | |

அறிவித்தலின்றி திகதியை ஒத்திபோடுவதற்கும் ஏலம் விடப்படும் இடத்தினை மாற்றுவதற்கும் உரிமை வங்கிக்கு உள்ளது.

**பிராந்திய முகாமையாளர்,**
மக்கள் வங்கி,
பிராந்திய தலைமையகம்,
கன்னாதிட்டி வீதி,
யாழ்ப்பாணம்.

தொ.பே. : 021 222 2601
021 222 8602
தொலை நகல் : 021 222 2602
ஈமெயில் : jafrho@peoplesbank.lk

# IIS

## A/L 2018

பரீட்சைக்கு தோற்றிய மாணவர்களுக்கான விசேட சலுகைகள்

**2018 உயர்தரப் பரீட்சைக்கு தோற்றிய மாணவர்களே உங்கள் பரீட்சைப் பெறுபேறுகள் வரும் வரையான பொன்னான காலத்தை IIS உடன் இணைந்து பயனுள்ளதாக்கி கொள்ளுங்கள்**

IIS வழங்கும் கற்கை நெறிகள்

- CERTIFICATE IN MS OFFICE
- CERTIFICATE IN IT
- CERTIFICATE IN GRAPHICS DESIGN
- CERTIFICATE IN COMPUTER PROGRAMMING
- CERTIFICATE IN AUTO CAD
- DIPLOMA IN IT
- ADVANCE DIPLOMA IN COMPUTING
- CERTIFICATE IN BUSINESS MANAGEMENT
- CERTIFICATE IN HRM
- CERTIFICATE IN MARKETING MANAGEMENT

புதிய பிரிவுகள் ஆரம்பம்

**பிரிவு 1 : 01.09.2018 பிரிவு 111 :19.09.2018**
**பிரிவு 11 :05.09.2018 பிரிவு iV :23.09.2018**

பல நூறு மாணவர்கள்
பயணித்த இவ் வெற்றிப் பாதையில்
உங்கள் காலடியையும்
பதித்துக்கொள்ளுங்கள்

மேலதிக விபரங்களுக்கு
0777 57 0038

**IIS CITY CAMPUS**
No.200 SIVANPANNAI ROAD, JAFFNA.
TEL : 021 222 8060

Hotline 071 777 3444

iis.edu.lk

# 31 ஆம் நாள் அந்தியேட்டி சபிண்டீகரண அழைப்பு



கடந்த 07.08.2018 செவ்வாய்க்கிழமை சிவபதமடைந்த

## திருமதி நவமணி கதிரமலை



அவர்களின் அந்தியேட்டிக் கிரியைகள் எதிர்வரும் 05.09.2018 புதன்கிழமை கீரிமலை புனித தீர்த்தக் கரையிலும், வீட்டுக்கிருத்தியக் கிரியைகள் 07.09.2018 வெள்ளிக்கிழமை முற்பகல் 11 மணியளவில் அவரது மூத்த மகளின் இல்லமான கந்தரோடையிலும் நடைபெறவுள்ளதால் அத்தருணம் தாங்களும் தங்கள் குடும்ப சகிதம் வருகை தந்து அன்னாரின் ஆத்மசாந்திப் பிரார்த்தனையிலும் அதனைத் தொடர்ந்து நடைபெறும் மதியபோசன நிகழ்விலும் கலந்துகொள்ளுமாறு அன்புடன் அழைக்கின்றோம்.

**குடும்பத்தினர்.**
**இல.24, டாக்டர் சுப்பிரமணியம் வீதி,**
**கந்தரோடை, சுன்னாகம்.**

# Solar Easy Payment

வங்கிகளினூடாக இலகு வாய்ப்பு!

## Zero Your Electricity Bill

மின் கட்டணமா?
கவலை வேண்டாம்.
செலவை ஏற்படுத்திய மின்சாரம்
வருமானத்தை பெற்றுத்தரும்.



MICRO PC SYSTEMS 22 YEARS EXCELLENCY

3kW SYSTEM

470,000/=
Annual Interest
Rate 6%
(5 Years)
328-360 Units

BOC PEOPLE'S BANK COMMERCIAL BANK Sampath Bank NSB DFCC Vardhana Bank

25 YEARS WARRANTY

CEB SEA LECO Lanka Electricity Company (Pvt) Ltd Approved

Jaffna ;021 2225893 / 0777425973 / 0773963280 / 0773039536 / 0777425974

218, Hospital Road, Jaffna.
Tel : 021 2225893
E-mail: jaffna@micropcsystems.com

66B, 2nd Cross Street, Vavuniya.
Tel : 024 2221069
E-mail: vavuniya@micropcsystems.com

உதயன்
விளம்பர தொடர்புகளுக்கு 021 493 1111
advt@uthayan.com
உதயன்

## மரண அறிவித்தல்

### கனகசிங்கம் தயாசீலன் (தயா)

**(முன்னாள் நேரக் கணிப்பாளர் - தனியார் போக்குவரத்துச் சேவை)**



எழுதுமட்டுவாழைப் பிறப்பிடமாகவும், மீசாலை கிழக்கை வதிவிடமாகவும் கொண்ட கனகசிங்கம் தயாசீலன் (தயா) 31.08.2018 வெள்ளிக்கிழமை இறைபதமடைந்தார்.

அன்னார் கனகசிங்கம் - மகேஸ்வரி தம்பதிகளின் அன்பு மகனும், ரேணுகாவின் அன்புக் கணவரும், கிருசாளினி, கிரிசாந்தன் ஆகியோரின் பாசமிகு தந்தையுமாவார்.

அன்னாரின் இறுதிக்கிரியைகள் நாளை (04.09.2018) செவ்வாய்க்கிழமை முற்பகல் 10 மணியளவில் அவரது இல்லத்தில் நடைபெற்று பூதவுடல் தகனக்கிரியைக்காக சாவகச்சேரி கண்ணாடிப்பிட்டி இந்து மயானத்துக்கு எடுத்துச் செல்லப்படும்.


இந்த அறிவித்தலை உற்றார், உறவினர், நண்பர்கள் அனைவரும் ஏற்றுக்கொள்ளவும்.

**மீசாலை கிழக்கு,**
**மீசாலை.**
(IN/7670)(11,17)
**தகவல்**
**குடும்பத்தினர்.**

**077 618 4709**

## மரண அறிவித்தல்

### செல்லப்பா பாலசுந்தரம்



அன்னை மடியில் 02.05.1947 இறைவன் அடியில் 31.08.2018

அளவெட்டியைப் பிறப்பிடமாகவும் வீமன்காமம் தெல்லிப்பழையை வசிப்பிடமாகவும் கொண்ட செல்லப்பா பாலசுந்தரம் கடந்த (31.08.2018) வெள்ளிக்கிழமை இறைபதம் அடைந்தார்.

அன்னார் காலஞ்சென்றவர்களான செல்லப்பா - செல்லமுத்து தம்பதிகளின் அன்பு மகனும் காலஞ்சென்றவர்களான சுப்பிரமணியம் - பூரணம் தம்பதிகளின் அன்பு மருமகனும் தயாநிதியின் அன்புக் கணவரும் ஸ்ரீகௌரி (கனடா), பிறேமகௌரி (வருமான பரிசோதகர் மாநகர சபை), ஞானவேல் (வங்கி உத்தியோகத்தர் - இலங்கை வங்கி, சுன்னாகம்), காலஞ்சென்ற தேவப்பிரியா ஆகியோரின் பாசமிகு தந்தையும் பரிமளம், அற்புதம்மா ஆகியோரின் அன்புச் சகோதரரும் காலஞ்சென்ற பொன்னுத்துரை மற்றும் சரவணமுத்து, பத்மநாதன், மகாலிங்கம், சரஸ்வதி ஆகியோரின் அன்பு மைத்துனரும் பாலகுமார், பாபுஜி ஆகியோரின் பாசமிகு மாமனாரும் சின்மயியின் அன்புப் பேரனும் ஆவார்.

அன்னாரின் இறுதிக்கிரியைகள் இன்று (03.09.2018) திங்கட்கிழமை முற்பகல் 10.00 மணியளவில் அவரது இல்லத்தில் நடைபெற்று பூதவுடல் தகனக்கிரியைக்காக தெல்லிப்பழை கொத்தியாலடி பொது இந்து மயானத்திற்கு எடுத்துச் செல்லப்படும். இந்த அறிவித்தலை உற்றார், உறவினர், நண்பர்கள் அனைவரும் ஏற்றுக் கொள்ளவும்.

**சீரடி இல்லம்,**
**வீமன்காமம், தெல்லிப்பழை.**
(CS 18398//17)
**தகவல்: குடும்பத்தினர்.**
**077 717 4217**

## வலிகாமம் வடக்கு பிரதேசசபை - காங்கேசன்துறை
## காங்கேசன்துறை உப அலுவலகம்
## ஆதன உரிமை மாற்ற அறிவித்தல்

**விண்ணப்பதாரர்:**

**பொன்னுத்துரை ஜெபரஞ்சன், பொன்னுத்துரை ஜெபராஜன்**

வலிகாமம் வடக்கு பிரதேசசபை காங்கேசன்துறை உப அலுவலகத் திற்குட்பட்ட பிரதான வீதி, காங்கேசன்துறை என்னும் முகவரியில் அமைந்துள்ள தெல்லிப்பழை கோவிற்பற்று மாவிட்டபுரம் இறை "நிறளையிட்டி" உத்தரவு பெற்ற நில அளவையாளர் திரு.P.புஸ்பராஜா அவர்களால் 08.06.2018 ஆம் திகதி அளந்து வரையப்பட்ட 6341 ஆம் இலக்க படத்தில் காட்டிய 5 ஆம், 6 ஆம் துண்டுகளின் பிரகாரம் நிலபர 8 குளி 14.25 என்ற ஆதனத்தில் பொன்னுத்துரை ஜெபரஞ்சன், பொன்னுத்துரை ஜெபராஜன் ஆகியோர் கட்டட அனுமதி கோரி விண்ணப்பித்துள்ளார்கள். எனினும் நாட்டின் அசாதாரண சூழ்நிலை காரணமாக பதிவேடுகள் அழிவடைந்துள்ளமையால் இவர்களின் உரிமையை உறுதிப்படுத்த முடியாதுள்ளது.

குறித்த ஆதனம் இவர்களுடைய பெற்றோர் அருளம்பலம் பொன்னுத்துரை பெண் மில்ரெட் தயாளபூபதி என்பவர்களது பெயரிலிருந்து (இவர்களின் பெயரிலான மேற்குறித்த அறுதிசாதனம் நாட்டிலேற்பட்ட அசாதாரண சூழ்நிலையினால் ஏற்பட்ட இடம்பெயர்வினால் தொலைந் துவிட்டது) இவர்கள் இருவரும் மரணசாதனம் எதுவும் எழுதாமல் இறக்க அவரது பிள்ளைகளை பிதா மாதாவழி முதுசமாக வந்தடைந்த தென கூறப்படுகிறது. அவர்களின் திருமணத்தின் போது சீதனமளிக்கப்பட்ட பெண்பிள்ளைகளான ஜெகநாதன் பெண் இன்பமணி, யோகரத்தினம் பெண் இன்பநளினி தவிர்த்து மற்றும் திருமணமாகாமல் இறந்த சகோதரரான பொன்னுத்துரை ஜெபநேசனும் தவிர்த்து ஜெபரஞ்சன், ஜெபராஜன் என்போர் 3030/27.06.2018 ஆம் இலக்க பிரகடனமும் உறுதிப்படுத்தலும் உறுதி மூலம் தங்களது பெயரிற்கு வெளிப்படுத்தியுள்ளனர்.

**ஆதன விவரம்**

வடமாகாணம் யாழ்ப்பாணம் மாவட்டம் வலிகாமம் வடக்குப் பகுதி தெல்லிப்பழை கோவிற்பற்று மாவிட்டபுரம் இறை உள்ளூராட்சி அதிகாரசபை வலிகாமம் வடக்கு பிரதேசசபை பிரதேச செயலாளர் பிரிவு வலிகாமம் வடக்கு கிராமசேவகர் பிரிவு J/233 "நிறையிட்டி" நிலப் பரப்பு 268/3 இதில் சொரியல் பாகம் 2/6 இற்கு ஏனைய பங்காளருடன் மனமொத்து இணங்கி நிந்தமாக ஆட்சி செய்து வருவதன் பிரகாரமும் 2018.06.08 ஆந் திகதி உத்தரவு பெற்ற நில அளவையாளர் திரு.P.புஸ்பராஜா அவர்களால் அளந்து வரையப்பட்ட 6341 ஆம் இலக்க படத்தில் காட்டிய 5 ஆம், 6 ஆம் இலக்கத் துண்டுகளின் பிரகாரம் நிலபர 8 குளி 14.25 குறித்த நிலப்பரப்பு எட்டு குளி பதினான்கு தசம் இரண்டு ஐந்துக்கும் எல்லைகள்.

**கிழக்கு - கே.கே.எஸ். வீதி,**
**வடக்கு - குறித்த படத்தில் காட்டிய 1 ஆம், 2 ஆம், 3 ஆம், 4 ஆம் இலக்க துண்டுகள்**
**மேற்கு - ஜோன் கணேசனின் ஆதனம்**
**தெற்கு - 12 அடி காலப்பாதை நிலம்**

மேற்குறித்த ஆதனத்தில் பொன்னுத்துரை ஜெபரஞ்சன், பொன்னுத்துரை ஜெபராஜன் என்போரது பெயரிற்கு கட்டட அனுமதி வழங்குவது தொடர்பாக ஏதேனும் ஆட்சேபனை தெரிவிப்பவர்கள் இன்றிலிருந்து 30 நாள்களுக்குள் சட்டபூர்வமான ஆவணங்களோடு எழுத்து மூலமாகவோ அல்லது நேரடியாகவோ வெளிநாட்டில் வசிப்பவர்களாக இருந்தால் இங்குள்ள உறவினர்களூடாகவோ ஆட்சேபனையை தெரிவிக்குமாறும் யாரும் ஆட்சேபனையை தெரிவிக்காத சந்தர்ப்பத்தில் விண்ணப்பதாரர்களின் பெயரிற்கு கட்டட அனுமதி வழங்க நடவடிக்கை எடுக்கப்படும் என்பதையும் இதனால் வரக்கூடிய எப்பொறுப்பிற்கும் வலிகாமம் வடக்கு பிரதேசசபை பொறுப்பாளி அல்ல என்பதையும் தெரிவித்துக்கொள்கிறேன்.

**சோமசுந்தரம் சுகிர்தன்**
**தவிசாளர்,**
**வலிவடக்கு பிரதேசசபை**
**காங்கேசன்துறை.**
(Cs.19460) (13.17)

## பெறுகை அறிவித்தல்
## தனியார் பாதுகாப்புசேவை
## வலிகாமம் கிழக்கு பிரதேசசபை, புத்தூர்


**கேள்விப்பத்திரம் வழங்கும் திகதி : 2018.09.03- 2018.09.12 ந.ப 12.00 மணிவரை**
**கேள்விப்பத்திரம் ஏற்றுக்கொள்ளப்படும் திகதி : 2018.09.13 பி.ப 2.00 மணிவரை**
**கேள்வி திறக்கும் திகதி : 2018.09.13 பி.ப 2.30 மணி**

1. வலிகாமம் கிழக்குபிரதேசசபையின் உள்ளூராட்சிமன்றபெறுகைகள் குழுத் தலைவரால் இலங்கை பாதுகாப்பு அமைச்சில் பதிவுசெய்த தகுதிவாய்ந்த ஒப்பந்தகாரர்களிடமிருந்து அரக்கு முத்திரையிடப்பட்ட கேள்விகள் கீழ்க்குறிப்பிடப்பட்ட அட்டவணையில் விவரிக்கப்பட்ட சேவைகளுக்காகக் கேள்விகோரப்படுகின்றன.
2. கேள்விப்பத்திரங்கள் கீழ்க் குறிப்பிடப்படும் மீளளிக்க முடியாத படிவக் கட்டணம் ரூபா 2,000.00 உம், மீளளிக்கக் கூடிய கேள்வி வைப்புப்பணம் ரூபா 10,000.00 உம் பணமாகச் செலுத்துவதன் பேரில் வழங்கப்படும்.
3. ஆர்வமுள்ள கேள்விதாரர்கள் கேள்விப்பத்திரங்களை இரு பிரதிகளில் தயாரித்து தவிசாளர், வலிகாமம் கிழக்கு பிரதேசசபை, புத்தூர் என்ற முகவரிக்கு அரக்கு முத்திரையிட்டு தபாலுறையின் இடதுபக்கமேல் மூலையில் கேள்வியின் பெயரும், மூலப்படிவம் கொண்ட தபாலுறையில் மூலப்பிரதி எனவும் இணைப்படிவத்தில் இணைப் பிரதி எனவும் எழுதப்பட்டு இணைப்பிரதியை " பிராந்திய உள்ளூராட்சி உதவி ஆணையாளர், பிராந்திய உள்ளூராட்சி உதவி ஆணையாளர் அலுவலகம், சிவன் பண்ணைவீதி, யாழ்ப்பாணம்" எனும் முகவரிக்கும் பதிவுத் தபால் மூலம் அனுப்புதல் வேண்டும். (பதிவுத்தபால் முடிவுத் திகதிக்கு முன்னர் கிடைக்கப்பெறவேண்டும்) அல்லது அதற்கென அலுவலகத்தில் வைக்கப்பட்டுள்ள கேள்விப்பெட்டியில் உரிய நேரத்திற்கு முன் இடப்படல் வேண்டும்.
4. கேள்வி திறக்கப்படும் போது கேள்வியாளரோ அவரது பிரதிநிதியோ சமூகமளிக்க முடியும்.
5. இக்கேள்வி அறிவித்தல் தொடர்பாக வலிகாமம் கிழக்கு பிரதேசசபை பெறுகைக் குழுவால் எடுக்கப்படும் முடிவு இறுதியானதாகும்.
6. மேலதிக விவரங்களை அலுவலக கடமை நேரத்தில் பெற்றுக் கொள்ளலாம்.

| இல | பாதுகாப்புச் சேவை தேவைப்படும் இடம் | தேவைப்படும் பாதுகாப்பு உத்தியோகத்தர் எண்ணிக்கை | | சேவை தேவைப் படும் காலம் |
|---|---|---|---|---|
| | | இரவு | பகல் | |
| 1 | வலிகாமம் கிழக்கு பிரதேசசபை தலைமை அலுவலகம், புத்தூர் | 01 | 01 | 2018.10.01 – 2019.12.31 |
| 2 | திண்மக் கழிவகற்றல் முகாமைத்துவநிலையம், கைதடிநீர்வேலி இணைப்புவீதி,நீர்வேலி | 01 | 01 | 2018.10.01 – 2019.12.31 |
| | மொத்தம் | 02 | 02 | |

**தலைவர்**
**உள்ளூராட்சி பெறுகைக்குழு,**
**வலிகாமம் கிழக்கு பிரதேசசபை, புத்தூர்.**
**2018.09.03**
(C/7656) (11,17)


# காசா என்கிற போர்க்களம்











இஸ்ரேல் பலஸ்தீன எல்லைப் பகுதியில் அமைந்துள்ளது காசா. இந்தப் பகுதியில்தான் பலஸ்தீனத்தின் விடுதலையை வலியுறுத்திப் போராடி வரும் ஹமாஸ் ஆயுதக் குழு ஆதிக்கம் செலுத்துகிறது. ஹமாஸின் கோட்டையென்பதால் பலஸ்தீனத்துக்கு எதிராக இஸ்ரேல் மேற்கொள்ளும் நகர்வுகளுக்கு எதிரான ஆர்ப்பாட்டங்களும், கலவரங்களும் சட்டென இடம் பெறும் இடமாக காசா இருக்கிறது. மேற்குக் கரை, கிழக்கு ஜெருசலேம் என்பனவும் இஸ்ரேல் பலஸ்தீன எல்லைப் பகுதிகளாக இருந்தபோதிலும் போராட்டம் என்று வந்தால் பலஸ்தீனர்களின் முதல் தெரிவு காசாதான். இந்தக் காசா கடந்த சில மாதங்களாக இன்னும் சொல்லப்போனால் இந்த வருடம் முழுவதுமே போர்க் களமாகத்தான் காட்சி தருகிறது. பலஸ்தீனத்திடம் இருந்து இஸ்ரேல் ஆக்கிரமித்து வைத்திருந்த ஜெருசலேமை கடந்த வருடத்தின் இறுதிப் பகுதியில் இஸ்ரேலின் தலைநகராக அங்கீகரித்திருந்தார் ட்ரம்ப். அப்போது ஆரம்பித்த போராட்டம் ஒருநாள் இடைவெளி கூட இல்லாமல் இன்றுவரை அங்கு தொடர்ந்துகொண்டுதான் உள்ளது.

பலஸ்தீனத்துக்கு இதுவரை வழங்கி வந்த உதவிகளையும், உதவித் தொகையையும் அமெரிக்கா முழுவதுமாக நிறுத்திவிட்ட நிலையில் காசாவில் இடம்பெற்றுவந்த போராட்டம் தற்போது மேலும் உக்கிரமடைந்துள்ளது. பன்னாட்டு ஊடகமான ரொயிட்டர்ஸ் இந்த ஒளிப்படங்களை வெளியிட்டது.

## வாடிக்கையாளர் சேவை உதவியாளர் (பெண்) தேவை


எமது நிறுவனத்தின் வாடிக்கையாளர் சேவை அழைப்புக்களை முகாமை செய்வதற்கு ஆள் தேவை. சம்பளம் நேரில் தீர்மானிக்கப்படும். ஆர்வமுடையோர் 03.09.2018 திங்கட்கிழமை நேரில் வரவும்.

**வீனஸ்** என்ரபிறைசஸ்
**இல. 110, மானிப்பாய் வீதி, யாழ்ப்பாணம்.**
**077 844 8300**


## மரண அறிவித்தல்

# அவுறாம்பிள்ளை வின்சஸ்லோஸ்

(ஓய்வு பெற்ற நீதிமன்ற எழுதுநர்)



பெரியபுலம், நாரந்தனையைப் பிறப்பிடமாகவும் அச்சுவேலி மற்றும் மருதானை ஆகிய இடங்களில் வசித்தவரும் தற்போது கொழும்புத்துறைவீதி, பாண்டியன்தாழ்வில் வசித்தவருமான அவுறாம்பிள்ளை வின்சஸ்லோஸ் நேற்று (02.09.2018) ஞாயிற்றுக்கிழமை காலமாகி விட்டார்.

அன்னார் காலஞ்சென்றவர்களான அவுறாம்பிள்ளை - ஞானம்மா தம்பதிகளின் பாசமிகு மகனும் காலஞ்சென்றவர்களான அன்னப்பிரகாசம் - இரத்தினம் தம்பதிகளின் மருமகனும் காலஞ்சென்ற பிலோமினாவின் அன்புக் கணவரும் காலஞ்சென்றவர்களான மரியாம்பிள்ளை, பேனடேற், ஜோர்ஜ், பொன்கலன் மற்றும் லின்ரா, காலஞ்சென்ற சந்திரா மற்றும் சரோ, மரியதாஸ் (பொறியியலாளர் - ஆஸ்திரேலியா), ஸ்ரனிஸ்லோஸ் (வைத்தியகலாநிதி - லண்டன்) ஆகியோரின் பாசமிகு சகோதரனும் காலஞ்சென்றவர்களான மரியம்மா, அந்தோனிப்பிள்ளை, தங்கமணி, மார்கிரட் மற்றும் சேவியர், ராசநாயகம், ஆன், லலிதா காலஞ்சென்றவர்களான பீலிக்ஸ் ரட்ணராணி, பொலின், அருட்சகோதரி அன்ரனி ஜோசப், அஞ்சலினா, கிறிஸ்ரினா, மனோரஞ்சிதம், றெஜினா ஆகியோரின் மைத்துனரும் ஆவார்.

அன்னாரின் பூதவுடல் இன்று (03.09.2018) திங்கட்கிழமை பி.ப. 2.30 மணிக்கு புனித அன்னாள் ஆலயத்தில் திருப்பலி ஒப்புக்கொடுக்கப்பட்டு நாரந்தனை சேமக் காலைக்கு எடுத்துச்செல்லப்படும். இந்த அறிவித்தலை உற்றார், உறவினர், நண்பர்கள் அனைவரும் ஏற்றுக் கொள்ளவும்.

**077 446 8200, 021 222 8623** (CS 18402/15/17) **தகவல்: சகோதரர்கள்**

## மரண அறிவித்தல்

| தோற்றம் | மறைவு |
|---|---|
| 22 . 03 . 1957 | 02 . 09 . 2018 |



# திருமதி பவளகாந்தி செல்வராசா

யாழ்ப்பாணத்தைப் பிறப்பிடமாகவும் மல்லாவியை தற்காலிக வசிப்பிடமாகவும் கோண்டாவில் கிழக்கை நிரந்தர வசிப்பிடமாகவும் கொண்ட திருமதி பவளகாந்தி செல்வராசா (ராணி) நேற்று (02.09.2018) கோண்டாவிலில் காலமானார்.

அன்னார் காலஞ்சென்ற செல்வநாயகம் - தங்கமுத்து தம்பதிகளின் அன்பு மகளும் காலஞ்சென்ற செல்லத்துரை - நாகேஸ்வரி தம்பதிகளின் அன்பு மருமகளும் செல்வராசாவின் (சந்தை திருநெல்வேலி) அன்பு மனைவியும் காலஞ்சென்ற குலேந்திரன், நகுலேந்திரன், கலாதேவி, வசந்தகுமாரி மற்றும் சுரேந்திரன், ஜெயந்திரன் ரூபகாந்தி ஆகியோரின் அன்புச் சகோதரியும் ரமேஷ் (RDHS/J வாகன ஓட்டுனர்), பிரகாஷ் (சந்தை திருநெல்வேலி), பிரதீப் (சுவிஸ்), பிரதீஸ் (சுவிஸ்), சுமித்தா, நளினா (இந்தியா) ஆகியோரின் அன்புத் தாயாரும் சதீசன் (சபிநயன் வேக் ஷொப், உரும்பிராய்), அச்சுதன் (இந்தியா), கிருஸ்ண சாந்தி, நிறோஜா, சிறீயா, விஜிதா ஆகியோரின் அன்பு மாமியாரும் தாரணா, பிரகதி, சாதுர்யன், ப்ரணிதா, சைந்தவி, சாய்சரன், தஸ்வினி, சபிநயன் ஆகியோரின் அன்புப் பேர்த்தியும் ஆவார்.

அன்னாரின் இறுதிக்கிரியைகள் இன்று (03.09.2018) திங்கட் கிழமை பி.ப. ஒரு மணியளவில் அவரது இல்லத்தில் நடைபெற்று பூதவுடல் தகனக்கிரியைக்காக கட்டையாலடி இந்து மயானத்திற்கு எடுத்துச்செல்லப் படும். இந்த அறிவித்தலை உற்றார், உறவினர், நண்பர்கள் அனைவரும் ஏற்றுக்கொள்ளவும்.

**இராமகிருஸ்ணா வீதி,**
**கோண்டாவில் கிழக்கு.**

**தகவல்: குடும்பத்தினர்.**
**077 233 8321, 077 540 8208**


1985ம் ஆண்டிலிருந்து இன்று வரையானதொரு
தனித்துவமிக்க பயிற்சி நிலையம்

யாழ் **கலாலயா** பயிற்சியகம்

இலங்கையின் மூன்றாம் நிலைக் கல்வி மற்றும் தொழிற்கல்வி ஆணையத்தால் அங்கீகரிக்கப்பட்டது.



**விக்ரோறியா வீதி, யாழ்ப்பாணம்.** (யாழ். போதனா வைத்தியசாலை பின் புற வீதி)

**A/L பெறுபேறுகளை எதிர்பார்த்திருக்கும் மாணவியர்,**
**வெளிநாட்டுக்குச் செல்லவிருக்கும் மங்கையர்,**
**சொந்தமாக தொழில் புரிய விரும்பும் நங்கையர் மற்றும் ஆர்வமுள்ள**
**பெண்களுக்கான 3 மாத பயன்மிகு பயிற்சிகள் ஆரம்பமாகின்றன!**

- FACIALS *(முக அழகுக்கலை)* Pedicure, Manicure, Nail Art, கண் புருவம் சீராக்குதல் (Eye Brow Threading), தேவையற்ற முடிகளைஅகற்றுதல் (Waxing)
- *கூந்தல் வடிவமைப்புகளும் முடி சீராக்குதலும்* 40 வகையான கொண்டைகள் போடுதல், முடி அயன் செய்தல், முடி சுருட்டுதல், Hair Colouring, முடி வெட்டுதல், Hair Perming.
- BRIDAL DRESSINGS *(மணப்பெண் அலங்காரங்கள் )* இந்து, கிறிஸ்தவ இஸ்லாம் மணப் பெண் அலங்காரமும் Modern, கூர்க்காஸ், சிங்கப்பூர் குஜராத்தி, மடிசார், சிங்கள முறையிலான சேலை அணியும் முறைகள். முறைகளும் பயிற்று விக்கப்படும்.
- *கேக் ஐசிங்* - றோயல், Parchment, Frosting, Fondant, Whipping Cream Icing, மாச்சீனி மலர்கள். (Sugar Flowers).
- *உணவு தயாரித்தல்* - உணவு வகைகள், 6 வகையான Cakes, Cup Cake மற்றும் பீஸா, சிற்றுண்டிகள் குளிர்பானங் கள், ஐஸ் கிறீம், புடிங் தயாரித்தல்.

இம்முறை A/L பரீட்சைச் தோற்றிய மாணவிகளுக்கு
மேற்படி பயிற்சிகளின் கட்டணத்தில் விஷேட கழிவு வழங்கப்படும்.

**பயிற்சிகளின் முடிவில் சான்றிதழ் வழங்கப்படும்.**

- *பிளவ்ஸ், சாறி பிளவ்ஸ், சுரிதார்,* மற்றும் ஆடைகள் தைக்கும் சான்றிதழ் அற்ற கிழமை நாள் தையல் பயிற்சிகள்.

**பயிற்சிகள் யாவும் பலவருட அனுபவமிக்க எமது ஆசிரியைகளினால்**
**சிறந்த முறையில் பயிற்றுவிக்கப்படும்!**

**கிழமை நாள் பிரிவுகள் ஆரம்பம் - 14.09.2018 வெள்ளிக்கிழமை**
**சனி, ஞாயிறு பிரிவுகள் ஆரம்பம் - 16-09-2018 ஞாயிற்றுக்கிழமை**
**நேரம் 09.30மணி**

மேலும் விபரங்களை நேரில் அறிந்து கொள்ளலாம். -இயக்குநர்-


## மரண அறிவித்தல்



# மரியதாஸ் நாகலிங்கம் மரியதிரேஸ்

**(அங்கத்தவர் - சீயோன் தேவாலயம்)**

மலேசியாவைப் பிறப்பிடமாகவும் சுண்டுக்குளி யாழ்ப்பாணத்தை வசிப்பிடமாகவும் கொண்ட மரியதாஸ் நாகலிங்கம் மரியதிரேஸ் 31.08.2018 வெள்ளிக்கிழமை கர்த்தருக்குள் நித்திரை அடைந்துவிட்டார்.

அன்னார் காலஞ்சென்றவர்களான றப்பியேல், பிரகாச குமாரத்தி தம்பதிகளின் அன்பு புதல்வியும், காலஞ்சென்றவர்களான சோமு - தங்கம்மா தம்பதிகளின் அன்பு மருமகளும், காலஞ்சென்ற மரியதாஸ் நாகலிங்கத்தின் அன்பு மனைவியும், காலஞ்சென்ற பெனடிற்றின் அன்புச் சகோதரியும், மரியகோகிலா (ஜேர்மனி), காலஞ்சென்ற பிரான்சிஸ் (றஞ்சன்), மேரிறோசலின் (றஞ்சனி - ஆசிரியை யாழ். இந்து மகளிர் கல்லூரி ), காலஞ்சென்ற மரியலீலா (றஜனி) ஆகியோரின் அன்புத் தாயும், பிலிப்யோசப் டெலிக் (ஜேர்மனி), ஜெபராஜா (இலங்கை அப்போஸ்தல திருச்சபை) ஆகியோரின் அன்பு மாமியும்,திருமதி சிப்போறா - திவாதரன் (சுவிஸ்), அனிஸ் (ஜேர்மனி), அனுஜா (ஜேர்மனி),மேஷாக் (யாழ். பல்கலைக் கழக கல்லூரி), பிறிஸ்சில்லா (கொழும்பு மகளிர் கல்லூரி - ஆசிரியை), ஜொய்ஸ் (ஜேர்மனி) ஆகியோரின் அன்புப் பேர்த்தியும், பெனடிற் பிலோமினாவின் மைத்துனியும், ஜோய், ஆன், ஜீன், எரிக் ஆகியோரின் அன்பு மாமியும் ஆவார்.

அன்னாரின் நல்லடக்க ஆராதனை இன்று (03.09.2018) திங்கட் கிழமை அவரது இல்லத்தில் பிற்பகல் 2 மணியளவில் நடைபெற்று பூதவுடல் மணியந்தோட்டத்தில் அமைந்துள்ள அப்போஸ்தல திருச்சபையின் சேமக்காலையில் நல்லடக்கம் செய்யப்படும்.

இந்த அறிவித்தலை உற்றார், உறவினர், நண்பர்கள் அனைவரும் ஏற்றுக்கொள்ளவும்.

**26/3, சோமசுந்தரம் அவனியு,**
**சுண்டுக்குளி,**
**யாழ்ப்பாணம்.**

**தகவல்**
**போதகர் ஜெபராஜா**
**(அப்போஸ்தல திருச்சபை)**

**077 468 3477, 077 843 5143**

கோடிபதி சனிதா (KOTIPATHI SHANIDA)
சீட்டிழுப்பு வாரம்: 336
வர்ணம் : பச்சை
சீட்டிழுப்பு திகதி: 2018.09.02
அடுத்த செவ்வாய்க்கிழமைக்கான ஜக்பொட்
ரூ. 92,961,348/-
T 12 34 45 57

SUPER BALL
சீட்டிழுப்பு வாரம் 850
சீட்டிழுப்பு திகதி 2018.09.01 சனிக்கிழமை
C 06 38 55 67
அடுத்த சுப்பர் ஜக்பொட்
ரூ. 50,973,196/-

அத கோடிபதி
சீட்டிழுப்பு வாரம்: 361
வர்ணம் : இளநீலம்
சீட்டிழுப்பு திகதி: 2018.09.02
இன்றைய ஜக்பொட் பரிசு
ரூ. 65,783,715/-
வெற்றி இலக்கங்கள்
11 24 56 75 N
தொ.பே: 011 4062002 / 0114062062 Web: www.dlb.lk
அழைப்பு: 0114 824 824, 0112 333 778

ராசி அதிர்ஷ்டம்
திகதி 02.09.2018
வெற்றி வாரம் 2358
வர்ணம் ஊதா
கும்பம்
வெற்றி இலக்கங்கள் 02 21 33 47
செவ்வாய்க் கிழமை வெற்றிப் பொதி ரூ. 8, 367, 340/=
2018.09.04ம் திகதி செவ்வாய்க் கிழமை நீல நிற டிக்கட்டுக்களாகும்
வெற்றி பெற்ற சீட்டுக்கள் 6 மாதங்களுக்கு செல்லுபடியாகும்
SMS: DLB<space>LOT<space>LW என டைப் செய்து 1919 இற்கு அனுப்பவும். Web: www.dlb.lk

## மரண அறிவித்தல்கள்

## திருமதி சுதர்சினி பாஸ்கரன்



தோற்றம் 22.09.1978 மறைவு 02.09.2018

புத்தூர் கிழக்கைப் பிறப்பிடமாகவும் வசிப்பிடமாகவும் கொண்ட திருமதி சுதர்சினி பாஸ்கரன் நேற்று (02.09.2018) ஞாயிற்றுக்கிழமை காலமானார்.

அன்னார் கந்தசாமி - மாணிக்கம் தம்பதிகளின் அன்பு மகளும் கணபதிப்பிள்ளை - புவனேஸ்வரி தம்பதிகளின் அன்பு மருமகளும் பாஸ்கரனின் பாசமிகு மனைவியும் வேதிகா, அன்சிகா ஆகியோரின் அன்புத் தாயாரும் அமிர்தகௌரி, ஜெயகௌரி, சிவதர்சினி, சுதாகரன் ஆகியோரின் அன்புச்சகோதரியும் ஆவார்.

அன்னாரின் இறுதிக்கிரியைகள் புத்தூர் கிழக்கில் உள்ள அவரது இல்லத்தில் நடைபெற்று பூதவுடல் தகனக்கிரியைகளுக்காக இன்று (03.09.2018) திங்கட்கிழமை முற்பகல் 11.00 மணியளவில் புத்தூர் அந்திரானை இந்து மயானத்திற்கு எடுத்துச் செல்லப்படும். இந்த அறிவித்தலை உற்றார், உறவினர், நண்பர்கள் அனைவரும் ஏற்றுக்கொள்ளவும்.

**குமாரசாமி வீதி,**
**புத்தூர் கிழக்கு, புத்தூர்.**

தகவல்: குடும்பத்தினர்.
**0772247816**

## கந்தையா திருநாவுக்கரசு

(முன்னாள், கோண்டாவில் ப.தெ.வ. கூட்டுறவுசங்கத்தலைவர்)



தோற்றம் 19.01.1937 மறைவு 02.09.2018

தாவடியைப் பிறப்பிடமாகவும் சுதுமலை தெற்கை வசிப்பிடமாகவும் கொண்ட கந்தையா திருநாவுக்கரசு நேற்று (02.09.2018) ஞாயிற்றுக் கிழமை காலமானார்.

அன்னார் காலஞ்சென்ற இராசபூபதியின் அன்புக்கணவரும் நாகேஸ்வரன் (ரஞ்சன்), சறோ, சாந்தினி காலஞ்சென்ற சண்முகஇரத்தினம் மற்றும் மகேஸ்வரன் (ஜெயா), சசிகரன் ஆகியோரின் அன்புத்தந்தையும் ஆவார்.

அன்னாரின் இறுதிக்கிரியைகள் இன்று (03.09.2018) திங்கட் கிழமை நண்பகல் 12 மணியளவில் அவரது இல்லத்தில் நடைபெற்று பூதவுடல் தகனக்கிரியைக்காக தாவடி இந்து மயானத்துக்கு எடுத்துச்செல்லப்படும். இந்த அறிவித்தலை உற்றார், உறவினர், நண்பர்கள் அனைவரும் ஏற்றுக்கொள்ளவும்.

தகவல் :
**குடும்பத்தினர்.**



## திருமதி மகேஸ்வரி காங்கேசு

நீர்வேலி தெற்கைப் பிறப்பிடமாகவும், நீர்வேலி மேற்கை வசிப்பிடமாகவும் கொண்ட திருமதி மகேஸ்வரி காங்கேசு 01.09.2018 சனிக்கிழமை காலமானார்.

அன்னாரின் இறுதிக்கிரியைகள் இன்று (03.09.2018) திங்கட்கிழமை முற்பகல் 9 மணியளவில் அவரது இல்லத்தில் நடைபெற்று பூதவுடல் தகனக்கிரியைக்காக நீர்வேலி சீயாக்காடு இந்துமயானத்துக்கு எடுத்துச் செல்லப்படும். இந்த அறிவித்தலை உற்றார், உறவினர், நண்பர்கள் அனைவரும் ஏற்றுக்கொள்ளவும்.

**நீர்வேலி மேற்கு,**
**நீர்வேலி.**

(CS/19521)(11,17)

**தகவல்**
**குடும்பத்தினர்.**

## மரண அறிவித்தல்

## கனகரெத்தினம் கதிர்காமநாதன் (தேவு)

*(முன்னாள் ஊழியர் - காங்கேசன்துறை சிமெந்து கூட்டுத்தாபனம்)*



பிறப்பு 21.01.1955 இறப்பு 01.09.2018

பூநகரி செட்டியகுறிச்சியைப் பிறப்பிடமாகவும், சேச்லேன், திருநெல்வேலி கிழக்கு, கல்வியங்காட்டை வசிப்பிடமாகவும் கொண்ட கனகரெத்தினம் கதிர்காமநாதன் 01.09.2018 சனிக்கிழமை இறைவனடி சேர்ந்துவிட்டார்.

அன்னார் காலஞ்சென்றவர்களான கனகரெத்தினம் - சரஸ்வதி தம்பதிகளின் கனிஷ்ட புத்திரனும், காலஞ்சென்றவர்களான செல்லையா - முத்தம்மா தம்பதிகளின் அன்பு மருமகனும், இந்திராணியின் அன்புக் கணவரும், சஞ்சீவன் (மாவட்டச் செயலகம், முல்லைத்தீவு), சாருஜா, டிசாந்தன் (பொலிஸ் உத்தியோகத்தர்), சங்கீர்த்தன் (மென்பொருள் வடிவமைப்பாளர்) ஆகியோரின் பாசமிகு தந்தையும், சிவசுதன், சயனிதா ஆகியோரின் அன்பு மாமனாரும், காலஞ்சென்ற பாக்கியம் மற்றும் துரைராசா, பத்மநாதன், பத்மாவதி ஆகியோரின் சகோதரரும், காலஞ்சென்ற கனகசபாபதி மற்றும் கமலாதேவி, இராசலட்சுமி, ரவீந்திரன் ஆகியோரின் மைத்துனரும், தருணிகாவின் அன்பு பேரனுமாவார்.

அன்னாரின் இறுதிக்கிரியைகள் இன்று (03.09.2018) திங்கட்கிழமை அவரது இல்லத்தில் நடைபெற்று பூதவுடல் தகனக்கிரியைக்காக முற்பகல் 10 மணியளவில் செம்மணி இந்து மயானத்துக்கு எடுத்துச் செல்லப்படும்.

இந்த அறிவித்தலை உற்றார், உறவினர், நண்பர்கள் அனைவரும் ஏற்றுக்கொள்ளவும்.

**தேவாலய வீதி,**
**திருநெல்வேலி கிழக்கு, யாழ்ப்பாணம்.**

**தகவல்**
**குடும்பத்தினர்.**

(CS/19522)(11,17)
**077 748 2107, 077 071 9241**

## மரண அறிவித்தல்கள்

மலர்வு 05 . 03 . 1958



உதிர்வு 01 . 09 . 2018

## முருகையா ஆனந்தரட்ணராஜா (ஆனந்)

*(யாழ் மண்ணின் தலைசிறந்த பல்துறைசார் தொழில்நுட்பவியலாளரும், கராத்தே ஆசிரியரும், கலைஞாயிறு விருது பெற்ற இசைக்கலைஞரும், ஆனந் இசைக்குழுவின் உரிமையாளரும்)*

திருகோணமலை, கன்னியாவைப் பிறப்பிடமாகவும், ஆலங்குழாய் சண்டிலிப்பாயை வசிப்பிடமாகவும் கொண்ட முருகையா ஆனந்தரட்ணராஜா கடந்த (01.09.2018) சனிக்கிழமை காலமானார்.

அன்னார் காலஞ்சென்ற முருகையா மற்றும் அந்தோணியம்மா தம்பதியரின் அன்புமகனும் கமலறஞ்சினியின் (கலா) அன்புக்கணவரும் ராஜ்குமார் (ராஜ் மாஸ்டர் - எலக்ரோனிக் என்ஜினியர், RMTS எஞ்சினியரிங்), ஜீவானந்தி ஆகியோரின் அன்புத்தந்தையும் அச்சுதன் (சிற்றி காட்வெயார் எழுதுவினைஞர்), அங்கவி ஆகியோரின் அன்பு மாமனும் சாரங்காராஜ் (சென் யோன்ஸ் கல்லூரி), கஸ்தூரி (யா/ வேம்படி உயர்தரப்பாடசாலை), பிரியங்கராஜ் (ஏஞ்சல் சர்வதேசப் பாடசாலை), மதுஜா (மானிப்பாய் மகளிர் கலலூரி), கோபினா (மானிப்பாய் மகளிர் கல்லூரி), குஜானந் (யாழ். இந்துக் கல்லூரி) ஆகியோரின் அன்புப்பேரனும் சாந்தன், நிருஜன், ராஜா, பிரணவன், ஜோதி, சாந்தி ஆகியோரின் சிறியதந்தையும் கோகுலன், பிரகாஸ்கண்ணா (ஜொனி) ஆகியோரின் மாமனும் ராஜா, சாந்தி, சுதா, றஜா ஆகியோரின் அன்புச்சகோதரரும் ஆவார்.


அன்னாரின இறுதிக்கிரியைகள் இன்று (03.09.2018) திங்கட்கிழமை மு.ப. 11 மணியளவில் அவரது இல்லத்தில் நடைபெற்று பூதவுடல் தகனக்கிரியைக்காக கொட்டுப்பனை இந்து மயானத்துக்கு எடுத்துச்செல்லப்படும். இந்த அறிவித்தலை உற்றார், உறவினர், நண்பர்கள் அனைவரும் ஏற்றுக்கொள்ளவும்.

**ஆலங்குழாய் சண்டிலிப்பாய்**

**தகவல் :**

**077 286 6644, 077 600 8447**

# இது புதுசு



**பெண்களுக்கான கைப் பைகள் சில சந்தைக்கு அறிமுகமாகியுள்ளன. இவை ஆயிரத்து 700 ரூபாவுக்கு விற்பனை செய்யப்படுகின்றன.**



## வெற்றிலை ஒரு மருத்துவ மூலிகை

வெற்றிலை பசியைத் தூண்டக் கூடியது. வயிற்றுக் கோளாறு நீக்க, அஜீரணத்தை போக்க வெற்றிலையைப் பயன்படுத்தலாம். பொதுவாக இருமல் சளி, ஆஸ்துமா, மூச்சுக்குழல் ஒவ்வாமை, வாத நோய், நுரையீரல் மற்றும் அல்சர் போன்ற நோய்களைப் போக்கக்கூடிய மருத்துவ குணங்கள் கொண்டது வெற்றிலை. வெற்றிலையுடன் பாக்கைச் சேர்த்து சாப்பிட்டு வந்தால் பல்வேறுபட்ட நோய்கள் நீங்கும். வயிற்றுப்புண், வாய்ப்புண், வாயில் துர்வாடை பிரச்சினை உள்ளவர்கள், மாலையில் வெற்றிலையை மென்றால் இந்த பிரச்சினைகள் குணமாகிவிடும்.

# சருமநிறம் அழகு பெற



பெண்களுக்கான அழகு பொருள்களைப் பொறுத்தவரை அதிகமாக விற்பனையாவது. சரும நிறத்தை சிகப்பாக்கும் முக பூச்சுகள்தான். இப்போது பெண்களோடு போட்டிபோட்டுக்கொண்டு ஆண்களும் சரும நிறத்தை மாற்ற இவ்வகையான பூச்சுக்களை உபயோகிப்பதில் அதிக ஆர்வம் காட்டுகின்றனர்.

**அழகுக்கான சில குறிப்புகள்....**

சுத்தமான சந்தனத்தை பாதாம் எண்ணெய்யில் குழைத்து முகத்தில் பூசி, இந்த கலவை காய்ந்ததும் முகத்தைக் கழுவலாம் .

தக்காளியை நன்றாகப் பிசைந்து அதனோடு 4 - 5 துளிகள் எலுமிச்சைச் சாறு கலந்து முகம், கழுத்து பகுதி, கைகளில் பூசிக்கொள்ளலாம்.

முகத்தை கழுவியபிறகு சிறிதளவு பாலை உள்ளங்கையில் எடுத்து முகத்தில் பூசவும். இவ்வாறு தொடர்ந்து 2 - 3 வாரங்கள் வரை செய்துவந்தால் உங்கள் சருமம் பொலிவடைந்திருப்பது கண்கூடாகத் தெரியும்.

சிறிதளவு இளநீரை முகம், கழுத்து பகுதி, கைகளில் பூசிவந்தால் சரும நிறம் மாறும்.

சீரகம் மற்றும் முள்ளங்கியை ஆகியவற்றை தனித்தனியே தண்ணீரில் கொதிக்க வைத்து, அந்த தண்ணீரில் முகத்தை கழுவினால் மாசுகள் அகற்றப்பட்டு முகம் பிரகாசமாகத் தோன்றும்.

புதினா மற்றும் எலுமிச்சை சாறுகளை கலந்து முகத்தில் தடவலாம்

முட்டையின் வெள்ளை கருவை வாரம் இருமுறை முகத்தில் பூசிவந்தால் சரும நிறம் சிகப்பாக மாறுவதோடு மிருதுவாகவும் மாறும்.

அன்னாசிப் பழத்தின் சாறு, தர்பூசிணி மற்றும் பப்பாளி பழ சாறுகளும் சரும நிறத்தை மேம்படுத்துவதில் முக்கிய பங்கு வகிக்கின்றன

## துரோகிகள்...

அரசின் ஊடாகப் பொருளாதாரவிருத்தியைப் பெறுவதை தடை செய்திருக்கக் கூடாது. துரோகிகள் என்று அவர்களைஅடையாளப் படுத்தியிருக்கக் கூடாது. இவ்வாறு வடக்கு மாகாண முதலமைச்சர்சி.வி.விக்னேஸ்வரன் தெரிவித்துள்ளார்.

வடக்கு மாகாண முதலமைச்சர் சி.வி.விக்னேஸ்வரனால் அனுப்பப்பட்டுள்ள கேள்வி, பதில் ஊடக அறிக்கையிலேயே மேற்கண்டவாறு கூறப்பட்டுள்ளது.

அதில் தெரிவிக்கப்பட்டுள்ளதாவது:

**கேள்வி** - நீங்கள் சம்பந்தன் அவர்களுக்கு எழுதிய கடிதத்தில் கோரப்பட்டதற்கு மாறாகத் தமிழ்த் தேசியக் கூட்டமைப்பு, சிவசக்தி ஆனந்தன் தவிர்ந்த, நாடாளுமன்ற உறுப்பினர்கள் அனைவரும் அரச தலைவர் செயலணிக் கூட்டத்தில் கலந்துள்ளார்களே. அது பற்றி உங்கள் கருத்தென்ன?

**பதில்** - எனக்கு சந்தோசம்தான்.

**கேள்வி** - அது எப்படி?

**பதில்** - எனக்கு மட்டுந் தரப்பட்ட ஒரு அரசியல் மற்றும் பொருளாதாரவிருத்தி சம்பந்தமான சலுகையை நான் நாடாளுமன்ற உறுப்பினர்களுக்குத் தாரை வார்த்துக் கொடுத்து விட்டேன் என்று தெரிகின்றது.

இதன் போது எமது அரசியல் கருத்து வேறுபாடுகள் அம்பலப்படுத்தப்பட்டுள்ளன. எதனைக் கூறச் சிரமப்பட்டேனோ அதனை இந்த நிகழ்வு தெட்டத் தெளிவாக்கி விட்டது.

முன்னர் அரசு தருவதை ஏற்று எங்கள் இடங்களை நாங்கள் அபிவிருத்தி செய்ய வேண்டும் என்று சில தமிழ்க் கட்சித் தலைவர்கள் கூறியபோது அதனை எதிர்த்தவர்கள் எமது கட்சியினர்தான். அவர்களைத் துரோகிகள் என்று அழைத்தவர்க்ளும் அவர்கள் தான். அந்தத் 'துரோகி'களுடன் தான் இப்போது எமது கட்சியினர் உள்ளூராட்சி சபைகள் பலவற்றில் கூட்டு வைத்துள்ளனர். பொருளாதாரவிருத்தியே எமக்குத் தற்போது வேண்டும் என்ற கருத்திருந்திருந்தால் நாங்கள் மற்றவர்கள் அரசின் ஊடாகப் பொருளாதார விருத்தியைப் பெறுவதைத்தடை செய்திருக்கக் கூடாது. துரோகிகள் என்றுஅவர்களை அடையாளப்படுத்தியிருக்கக் கூடாது.

**அரசியல் நோக்கம்**

மாகாணசபை கலைய இரண்டு மாதங்கள் உண்டு. நாடாளுமன்றம் கலைய 2 ஆண்டுகள் உண்டு. இந்த நிலையில் செயலணியை நியமித்துச் செயலாற்ற முன்வந்திருப்பது அரசியல் காரணங்களுக்காக என்று தெரிகிறது. அதேபோல் அதில் சேர்ந்து செயலாற்ற எம்மவர்கள் முன்வந்திருப்பதும் அரசியல் காரணங்களுக்காகத்தான் என்று தெரிகிறது. என்னைப் பொறுத்தவரையில் கட்சி அரசியல் ஒரு பொருட்டல்ல. எவ்வளவு வேகமாக ஒரு அரசியல் தீர்வைப் பெற்றுத் தரமுடியும் என்பதே எனது கரிசனை. நாங்கள் யாவரும் ஒன்றிணைந்து இராணுவத்தினருடன் சேர்ந்து தெற்கத்தையப் பெரும்பான்மையினரின் செயலணி ஒரு அரசியல் செயல்பாடே என்று கூறி எமக்கு அரசியல் தீர்வே தற்போது முக்கிய மென்றகருத்தை முன்வைத்தி ருந்தால் தமிழ் மக்களின் அரசியல் பலமற்ற நிலையும் தமிழ் மக்களின் உரித்துக்களை வழங்க அரசு பின்னிற்கும் பாங்கும் வெளிக் கொண்டு வரப்பட்டிருப்பன. உலகநாடுகளில் இதை எடுத்துக்காட்டியிருக்கலாம். தற்போது தம்மைத் தாழ்த்தி என்னை ஏற்றி விட்டிருக்கின்றார்கள் எனது கட்சியினர்.

**கொள்கைவேறுபாடு வெளிப்பட்டுள்ளது**

கொள்கை ரீதியான வேறுபாடுகள் வெளிக் கொண்டு வரப்பட்டுள்ளன. உடனே அரசியல் தீர்வு அவசியம் என்று கூறிய எனது வாசகம் சம்பந்தன் அவர்கள் இந்த ஆண்டு முடிவுக்கு முன்னர் அரசியல்தீர்வு என்று கூறியதன் பிரதிபலிப்பேயாகும். இப்போது அரசியல் தீர்வும் கிடைக்கப்போவதில்லை. பொருளாதாரவிருத்தியும் எம்மவர் கைவசம் இருக்கப் போவதுமில்லை. செயலணியின் 46 பேரே காய்களை நகர்த்துவார்கள்.

ஆனால் மைத்திரிக்கு எழுதிய கடிதத்தில் நீங்கள் உங்கள் ஒரு தலைப்பட்சமான பொருளாதார விருத்திகளை உங்களுக்கு வேண்டுமென்றால் செய்து கொண்டு போங்கள். ஆனால் என்னை அதற்குள் உள்நுழைக்காதீர்கள் என்றே கூறியிருந்தேன். பொருளாதாரப் பயன்களைக் காட்டி எமது அரசியல் தீர்வைத் தாமதப்படுத்துவதே அரசின் எண்ணம். அத்துடன் பொருளாதார ரீதியாக நாங்கள் வடக்குக் கிழக்கைக் கவனித்து வருகின்றோம் என்று ஜெனிவாவில் அரசு கூற இந்தச் செயலணியைப் பாவித்து வருகின்றது என்பதை எமது நாடாளுமன்ற அங்கத்தவர்கள் உணராதிருப்பது விந்தையாக உள்ளது.

**பொய்யுரைப்பு**

முதற்கூட்டத்திலேயே மைத்திரிபால முழுப் பூசணிக்காயைச் சோற்றில் புதைக்கப் பார்த்தார். அதனால்த்தான் அன்றே விவரங்கள் எடுத்து சிங்களக் குடியேற்றம் உண்மையில் நடந்துள்ளதென்பதை அனுமதிப் பத்திர மொன்றைப் பிரசுரித்ததால் தெட்டத் தெளிவாக எடுத்துக்காட்டினேன்.

தமிழ்த் தேசியக் கூட்டமைப்பு நாடாளுமன்ற உறுப்பினர்கள் என்னை உதாசீனம் செய்திருப்பினும் காணிகள் சம்பந்தமான சம்பந்தனின் கூற்றை மைத்திரிக்கு மெய்ப்பிக்கவே இந்த உடன் நடவடிக்கையை எடுத்தேன்.

நான் செயலணியில் பங்குபற்றினாலும் இரண்டு அல்லது மூன்று கூட்டங்களுக்கு மேல் பங்குபற்ற முடியாது. ஆகவே அரசியல் ரீதியாக எமது கட்சிக்குள்ளேயே எமது சிந்தனைகள் எவ்வாறு அமைகின்றன என்று கணிக்க இந்த விடயம் அனுசரணையாக அமைந்துள்ளது. அந்த அளவில் எனக்கு மகிழ்ச்சியே என்றுள்ளது. (5)

## தீர்வுக்குப்...

தொடர்பான கலந்துரையாடல் நடைபெற்றது. அதில் தென்மராட்சிப் பிரதேச ஒருங்கிணைப்புக் குழுவின் தலைவரான நாடாளுமன்ற உறுப்பினர் எம்.ஏ.சுமந்திரன் கலந்து கொண்டார். அங்கு கருத்துத் தெரிவித்தபோதே மேற்கண்டவாறு கூறினார்.

அவர் மேலும் தெரிவித்ததாவது.

வடகிழக்கு மாகாணங்கள் இணைந்திருந்த போது நடந்த மாகாண சபைத் தேர்தலிலும், வடக்கு. கிழக்கு மாகாணங்கள் பிரிந்த பின்னர் நடந்த கிழக்கு மாகாண சபைத் தேர்தலிலும் நாம் போட்டியிடவில்லை. போர் முடிந்த பின்னர் வடக்கு மாகாண சபை மற்றும் கிழக்கு மாகாண சபை தேர்தல்களில் பங்கு பற்றினோம்.

அரசு சில நடவடிக்கைகளை வரவு - செலவுத் திட்டத்துக்கு உட்பட்டு முன்னெடுக்கின்றது. அவற்றின் அடிப்படையில் 2018ஆம் ஆண்டிலும், 2019ஆம் ஆண்டிலும் வடக்கு, கிழக்கு மாகாணங்களில் அபிவிருத்திகள் மேற்கொள்ளப்படவுள்ளன.

யாழ்ப்பாண மாவட்டத்தைப் பெறுத்தவரையில் 7 நாடாளுமன்ற உறுப்பினர்கள் உள்ளனர். அவர்களில் 5 பேர் தமிழ்த் தேசியக் கூட்டமைப்பைச் சேர்ந்தவர்கள். அரசு எமது முன்மொழிவுகளைச் சமர்ப்பிக்குமாறு கோரியுள்ளது.

வடக்கு, கிழக்கு செயலணியில் நாம் பங்கு கொள்கின்றோம். அதன் ஊடாக அவசரமான, அத்தியாவசியமான விடயங்களான நில ஆக்கிரமிப்பு, நில விடுவிப்பு, காணாமல் ஆக்கப்பட்டோர் பிரச்சினை, கைதிகள் விடுவிப்பு என்பன பற்றிய முன்னெடுப்புக்களை மேற்கொள்ள முடியும் - என்றார். (ற.9.159)

## எண்ணை...

செய்வதற்கு பி.ஜீ.பி பயணியர் என்ற கப்பல் இலங்கைத் துறைமுகத்தை வந்தடைந்துள்ளது.

இது தொர்டர்பில் அமைச்சர் அர்ஜீன ரணதுங்க தெரிவித்ததாவது.

கடந்த காலத்தில் இந்த ஆய்வுப் பணிகள் மந்த கதியிலேயே இடம்பெற்றது. தற்போது நாம் இந்த ஆய்வுப் பணிகளை துரிதப்படுத்தவும் புதிய எண்ணெய் வளங்களை கண்டறியவும் புதிய தரவுகளை சேகரிக்கவும் உள்ளோம். இந்த ஆய்வுப்பணிகளை மேற்கொள்வதற்கான தீர்மானத்தை கடந்த ஆண்டு மே மாதம் தீர்மானித்தோம். எம்மால் இந்த ஒப்பந்தத்தை குறுகிய காலப்பகுதிக்குள் மேற்கொள்ள முடிந்தது. அதன் பயனாக பி.ஜீ.பி பயணியர் என்ற எண்ணெய் வள ஆய்வுக் கப்பல் வந்துள்ளது. எமக்கு இந்த ஆய்வுக் கப்பல் இருபரிமாண அளவில் ஆய்வுத் தரவுகளை 18 மாதங்களுக்குள் கேசரித்து தரமுடியும் - என்றார். (ற)


### காணி விற்பனைக்கு

இயக்கச்சி சந்திக்கு அருகாமையில் உள்ள 5 ஏக்கர் காணி விற்பனைக்குண்டு.

**T.P: 076 9433 212**

### வாடகைக்கு

ஸ்ரான்லி வீதிக்கு அருகிலும் ஆரியகுளம் சந்திக்கு முன்பாகவுள்ள ஒழுங்கை (சதொசாவிற்கு எதிர்ப்புறம்)
வண்ணை சிவன் கோயிலுக்கு முன்புறம் கன்னாதிட்டி வீதியில் அமைந்துள்ள கடைகள் குத்தகைக்கு கொடுக்கப்படும்.

**தொடர்பு - 077 9909 235**

### தெல்லிப்பழை கூட்டுறவு வைத்தியசாலை சங்கம் பொதுக்கூட்ட அழைப்பு

சங்கத்தின் பொதுக்கூட்டம் எதிர்வரும் **23.09.2018 ஞாயிற்றுக் கிழமை முற்பகல் 10 மணிக்கு** நடத்த இயக்குநர் சபை தீர்மானித்துள்ளது. மேற்படி கூட்டத்தில் சமர்ப்பிக்கப்பட வேண்டிய பிரேரணைகள் இருப்பின் 09.09.2018 ஆம் திகதிக்கு முன்னர் கிடைக்கக் கூடியவாறு அனுப்பி வைக்குமாறு சகல பொதுச்சபை உறுப்பினர்களையும் கேட்டுக்கொள்கின்றோம்.

**தலைவர், செயலாளர்.**

### வேலைவாய்ப்பு

மேற்படி வைத்தியசாலையில் பின்வரும் பதவிகளுக்கு ஆள்சேர்ப்பு செய்யவுள்ளமையால் ஆர்வமுள்ளவர்கள் விண்ணப்பிக்கும்படி கேட்டுக் கொள்கின்றோம்.

1. **நிர்வாக உத்தியோகத்தர்** - ஆண் (ஓய்வுபெற்ற நிர்வாக உத்தியோகத்தர். முகாமைத்துவ உதவியாளர்)
2. **தாதி உத்தியோகத்தர்** - (ஓய்வுபெற்ற தாதி உத்தியோகத்தர் - ஆண்.பெண்)
3. **எழுதுவினைஞர்**
4. **தாதிய உதவியாளர்**
5. **நோயாளர் பராமரிப்பாளர்**
6. **முதியோர் பராமரிப்பாளர்**
7. **காவலாளி**

மேற்படி பதவிகளுக்கு விண்ணப்பிக்க விரும்புவோர் **14.09.2018** இற்கு முன்னர் தமது விண்ணப்பங்களை தபால்மூலம் அனுப்பிவைக்கவும்.

**076 771 1417, 021 224 3722**
**தலைவர், கூட்டுறவு வைத்தியசாலை சங்கம், தெல்லிப்பழை**
**03.09.2018**

### மரண அறிவித்தல்

**திருமதி ஜெயமதி சந்திரகுமார் (அருள்ஜெயா)**



பலாலி தெற்கு வசாவிளானைப் பிறப்பிடமாகவும். புதிய செம்மணி வீதி. கல்வியங்காட்டை வசிப்பிடமாகவும் கொண்ட திருமதி ஜெயமதி சந்திரகுமார் (அருள்ஜெயா) நேற்று (02.09.2018) ஞாயிற்றுக்கிழமை அகாலமரணமானார்.

அன்னார் கந்தசாமி சின்னமணி தம்பதியரின் அன்புமகளும் துரை சரஸ்வதி தம்பதியரின் அன்புமருமகளும் சந்திரகுமாரின் (அருள்) அன்பு மனைவியும் ஜெனனி, ஹர்சனா, சனுஜா. ஜினோஜா ஆகியோரின் அன்புத் தாயும் கோமதி. வித்தி (பிரான்ஸ்), வளந்தி. விமல். ராதா ஆகியோரின் சகோதரியும் மகேந்திரன், நந்தினி (பிரான்ஸ்). குமார், நாதன், சிவகுமார். ராஜினி ஆகியோரின் மைத்துனியும் ஆவார்.

அன்னாரின் இறுதிக்கிரியைகள் இன்று (03.09.2018) திங்கட்கிழமை நண்பகல் 12 மணியளவில் அவரது இல்லத்தில் நடைபெற்று பூதவுடல் தகனக்கிரியைக்காக செம்மணி இந்து மயானத்துக்கு எடுத்துச்செல்லப்படும். இந்த அறிவித்தலை உற்றார், உறவினர், நண்பர்கள் அனைவரும் ஏற்றுக்கொள்ளவும்.

தகவல் :
குடும்பத்தினர்

கொழும்பு

# பாதுகாப்புக் கருத்தரங்கை புறக்கணித்த பொன்சேகா

## ராணுவத் தளபதியுடனான மனக்கசப்பு காரணமா?

கொழும்பு, செப்.3

இராணுவம் நடத்திய கொழும்பு பாதுகாப்புக் கருத்தரங்கை, அமைச்சரும், முன்னாள் இராணுவத் தளபதியுமான பீல்ட் மார்சல் சரத் பொன்சேகா புறக்கணித்தார் என்று செய்திகள் வெளியாகியுள்ளன.

இராணுவத்தின் எட்டாவது கொழும்பு பாதுகாப்புக் கருத்தரங்கு கடந்த மாதம், 30ஆம், 31ஆம் திகதிகளில், பண்டாரநாயக்க மாநாட்டு மண்டபத்தில் நடைபெற்றது.

இந்தக் கருத்தரங்கின் ஆரம்ப நிகழ்வில் தலைமை அமைச்சர் மற்றும் பாதுகாப்பு உயர் அதிகாரிகள் கலந்து கொண்டனர்.

முன்னாள் இராணுவத் தளபதியும், பீல்ட் மார்சல் பட்டத்தைப் பெற்ற ஒரே ஒருவருமான சரத் பொன்சேகா இந்தக் கருத்தரங்கில் பங்கேற்கவில்லை. அவருக்கு அழைப்பு அனுப்பப்பட்டது என்று ஏற்பாட்டாளர்கள் தெரிவித்துள்ளனர். அவர் நிகழ்வில் பங்கேற்காதமைக்கான காரணம் அறிவிக்கப்படவில்லை.

இராணுவத் தளபதி லெப்.ஜெனரல் மகேஸ் சேனநாயக்கவுடனான மனக்கசப்புகளால் தான், அவர் இந்தக் கருத்தரங்கைப் புறக்கணித்திருப்பதாகக் கூறப்படுகிறது. (5)

## கிடைத்தது...

வழங்கியிருந்தார். இதனூடாக அந்த நிறுவனம் இரண்டு ஆண்டுகளில் 293 கோடி ரூபா வருமானம் ஈட்டியுள்ளதுடன், வடக்கு மாகாணசபைக்கு இரண்டரைக் கோடி மாத்திரமே வழங்கப்பட்டுள்ளது. இதனால் பெரும் நிதியிழப்பு ஏற்பட்டுள்ளதாக கணக்காய்வாளர் தலைமை அதிபதியின் அறிக்கையில் கூறப்பட்டுள்ளது. இந்த விடயம் மாகாணப் பொதுக் கணக்குகள் குழுவினால், மாகாணசபையில் கடந்த 30ஆம் திகதி சமர்பிக்கப்பட்டிருந்தது.

இவ்வாறானதொரு நிலையில், வடக்கு மாகாண முதலமைச்சரால் தயாரித்து அனுப்பப்படும் கேள்வி, பதில் ஊடக அறிக்கையில் தெரிவிக்கப்பட்டுள்ளதாவது,

கேள்வி - பளைக் காற்றாலை விடயம் சம்பந்தமான உங்கள் அலட்சியத்தால் வடக்கு மாகாண சபைக்குப் பெரும் நிதியிழப்பு என்று கூறப்பட்டுள்ளது. இதுசரியா?

பதில் - முற்றிலுந் தவறானது. கொழும்பு அரசின் முதலீட்டுச் சபைக்குச் சொந்தமான திட்டந்தான் இந்தக் காற்றாலைத் திட்டம். நாம் பதவிக்கு வரமுன்னரே உரிய அனுமதிகளைப் பெற்றே அவர்கள் தமது திட்டத்தைச் செயல்படுத்தினார்கள். எம்முடன் உடன்பாடு வைத்துக் கொண்டது சி.எஸ்.ஆர். என்றவகையில். சமூகப் பயன்பாட்டுக்காக ஒரு நிறுவனந்தன் விருப்பார்ந்தவாறு கொடுக்க முன்வரும் தொகையே சி.எஸ்.ஆர். என்ற கொடை. அதை அவர்கள் தரலாம் தராமல் விடலாம். அதில் நிதியிழப்பு எவ்வாறு ஏற்படக் கூடும்? எம்மால் உடன்பட்ட இருபது மில்லியனும் எமக்குக் கொடையாளியால் தரப்படும் தன்னிச்சையான நிதியே. அந்தத் தொகையைக் அதிகரிக்கவேண்டுமானால் நாம் ஒரு வேண்டுகோள் விடுக்கலாம். அவர்கள் அதைப் பரிசீலித்துத் தமது கருத்தைத் தெரியப்படுத்தலாம். இது பேரம் பேசவேண்டியதொகையல்ல. விருப்புடன் எமக்கு வழங்கப்படும் கொடை.

இதனால் எமக்கு நிதிகிடைத்ததே ஒளிய நிதியிழப்பு ஏதும் ஏற்படவில்லை. அரசியலுக்காக ஆர்ப்பரிக்கப்படும் அவச் சொற்களே இவை. அத்துடன் நாம் பதவியேற்ற காலத்து விடயங்கள் இத்தனை ஆண்டுகளின் பின் தற்போது எழுப்பப்படுகின்றன என்றால் அதன் அர்த்தம் என்ன? அலட்டிக்கொள்ளாதீர்கள். அப்படித்தான் அவர்கள்!

**அமைச்சரவை**

கேள்வி - அவைத் தலைவர் சீ.வீ.கே.சிவஞானம் வடமாகாண அமைச்சர்கள் சம்பந்தமாக எழுந்திருக்கும் சட்டப்பிரச்சினையை ஒரு நிமிடத்தில் தீர்க்க முடியும் என்று கூறியுள்ளாரே. அதுஎப்படி?

**பதில்** - அவைத்தலைவர் என்ன கருத்தில் அவ்வாறு சொன்னாரோ தெரியாது. ஆனால் அவர் கூறுவதுபோல் ஒரு நிமிடத்தில் இந்தச் சிக்கலைத் தீர்க்கலாம். ஆளுநர் சென்றவருடம் ஓகஸ்ட் மாதத்தில் நான் டெனீஸ்வரனைப் பதவி நீக்கம் செய்த விடயத்தை அப்பொழுதிருந்து நடைமுறைக்கு வரும் விதத்தில் அரசிதழில் பிரசுரிக்க இந்தச் சிக்கல் தீரும். உரியவாறு கையெழுத்திட்டு கடிதம் அனுப்பினால் அது சிக்கலைத் தீர்க்கும். கையெழுத்திட ஒரு நிமிடம் தேவையில்லை.

பலர் தற்போதிருக்கும் ஐந்து அமைச்சர்களில் ஒருவரை நீக்குமாறு நான் பரிந்துரைக்க வேண்டும் என்றும் அவர் இடத்தில் டெனீஸ்வரன் வரவேண்டும் என்றும் எதிர்பார்க்கின்றார்கள். அது நடைமுறைச் சாத்தியம் அற்றது. காரணம் ஒரு அமைச்சரைப் பதவி இறக்கும் அதிகாரம் முதலமைச்சருக்கு இல்லை என்று தெளிவாக மேன்முறையீட்டு நீதிமன்றம் கூறியுள்ளது. ஆகவே நான் எந்த ஒருபதவி இறக்கமும் செய்யமுடியாது. ஏற்கனவே பரிந்துரை செய்தாகி விட்டது. அதை வலுப்படுத்த ஆளுநர்தான் நடவடிக்கை எடுக்கவேண்டும். ஆனால் அவர் தான் தோன்றித்தனமாக ஒரு அமைச்சரை நீக்கி டெனீஸ்வரனை உள் ஏற்றால் குறித்த அமைச்சர் நீதிமன்றம் செல்வார். தான் உரியவாறு ஆளுநரால் நியமிக்கப்பட்டவர் என்ற ரீதியில் ஆளுநர் தம்மை நீக்கமுடியாது என்று வாதாடுவார். மேலும் முதலமைச்சரின் பரிந்துரை இன்றி தம்மை அவர் பதவி நீக்கம் செய்யமுடியாது என்று வாதாடுவார்.

ஆகவே இதற்கு ஒரே வழி 2017ஆம் ஆண்டு ஓகஸ்ட் மாதம் முதலமைச்சர் பதவி நீக்கம் செய்த டெனீஸ்வரனின் பதவி நீக்கம் பற்றி அப்பொழுதிருந்து வலுவேற்கும் விதத்தில் அரசிதழில் பிரசுரிப்பதுதான். ஆனால் அதனை ஆளுநர் செய்கின்றார் இல்லை. டெனீஸ்வரன் தம் சார்பில் மேன்முறையீட்டு நீதிமன்றத்தில் தீர்மானமொன்றைப் பெற்றவுடன் அவருக்கு தொலைபேசி மூலம் உடனே பாராட்டுக்களைத் தெரிவித்தவர் ஆளுநரே. ஏதோ காரணத்துக்கு மேற் கூறப்பட்டவாறு பிரசுரிக்க அவர் தயங்குகின்றார். தயங்காது அரசிதழ் பிரசுரிப்பதற்கு உடனே நடவடிக்கை எடுத்தால் ஒரு நிமிடம் போகாது குறித்த கையெழுத்து வைக்க! - என்றுள்ளது. (5)

## திருமணம்...

வடக்கு மாகாணசபையின் கூட்டம் கடந்த 30ஆம் திகதி இடம்பெற்றது. முதலமைச்சர் சி.வி.விக்னேஸ்வரன் கூட்டத்தில் பங்கேற்கவில்லை. தவிர்க்க முடியாத வேறு ஒரு 'முக்கிய நிகழ்வு' இருப்பதாக அவைத் தலைவருக்கு அறிவித்திருந்தார். அன்றைய தினம் செல்வச்சந்நிதி ஆலயத்தில், முதலமைச்சர் அமைச்சில் பணியாற்றும் பணியாளர் ஒருவரின் திருமண நிகழ்வு இடம்பெற்றது. வடக்கு முதலமைச்சர் அதில் பங்கேற்று மணமக்களை ஆசீர்வதித்திருந்தார்.

இவ்வாறானதொரு நிலையில், வடக்கு மாகாண முதலமைச்சர் சி.வி.விக்னேஸ்வரனால் எழுதி அனுப்பப்படும் கேள்வி, பதில் அறிக்கையில்,

கேள்வி - ஓகஸ்ட் 30ஆம் திகதிய மாகாண சபைக் கூட்டத்தில் கலந்து கொள்ளாது உங்கள் அமைச்சில் பதவி வகிக்கும் ஒரு அலுவலரின் திருமணத்துக்குச் சென்றீர்கள் என்பதைக் குற்றமாகக் காட்டசிலர் முனைந்துள்ளார்கள். உங்கள் கருத்து?

பதில் - திருமணம் என்பது வாழ்க்கையில் அதுவும் தமிழர்கள் மத்தியில் பொதுவாக ஒரு முறையே வரும். மாகாணசபைக் கூட்டம் ஒரு மாதத்துக்கு இரு முறைவரும். இதை உணராதவர்கள் குற்றம் சாட்டுகின்றார்கள் போலும்- என்றுள்ளது. (5)

## கோதுமை...

நிறுவனம் 5 ரூபாவால் அதிகரித்துள்ளது.

விலை அதிகரிப்புக்கு நுகர்வோர் அபிவிருத்தி அதிகார சபையினால் நுகர்வோர் உரிமைகள் பாதுகாப்புக்கான தேசிய இயக்கத்திடம் அனுமதி பெறப்படவில்லை என்று நுகர்வோர் உரிமைகள் பாதுகாப்புக்கான தேசிய இயக்கம் குற்றம் சாட்டியுள்ளது.

விலை அதிகரிப்புக்கு தாம் எதிர்ப்பு தெரிவிப்பதாகவும், இதில் மாற்றத்தினை ஏற்படுத்தாவிட்டால் நுகர்வோர் அபிவிருத்தி அதிகார சபைத் தலைவருக்கு எதிராக சட்ட நடவடிக்கை எடுக்கப்படும் எனவும் அந்த இயக்கம் வெளியிட்டுள்ள ஊடக அறிக்கையில் தெரிவித்துள்ளது. (5)

## பணிப்...

டத்தில் வடக்கு மாகாணத்தைச் சேர்ந்தவர்கள் பங்கேற்கமாட்டார்கள் என்று நேற்று இரவு அறிவிக்கப்பட்டுள்ளது.

ருகுணு இ.போ.ச. பேருந்து ஊழியர்கள் அறிவித்துள்ள பணிப்புறக்கணிப்புப் போராட்டத்தில் தற்போது 11 சாலை ஊழியர்கள் இணைந்துள்ளனர் என்றும், தமது கோரிக்கைகளுக்கு உரிய தீர்வு வழங்கப்படாவிட்டால் ஏனைய சாலை ஊழியர்களையும் இணைத்துப் போராட்டம் முன்னெடுக்கப்படும் என்றும் சிறிலங்கா சுதந்திர தேசிய போக்குவரத்துச் சேவை ஊழியர் சங்கத்தின் செயலர் பந்துல ரத்னாயக்க தெரிவித்துள்ளார்.

அரச சேவையாளர்களுக்கு வழங்கப்படும் 10 ஆயிரம் ரூபா மேலதிக கொடுப்பனவை, அடிப்படை வேதனத்தில் இணைத்துக் கொள்ளல் உள்ளிட்ட கோரிக்கைகள் சிலவற்றை முன்வைத்தே இந்தப் பணிப்புறக்கணிப்பு மேற்கொள்ளப்படுகிறது என்று தெரிவிக்கப்பட்டது.

தெற்கில் இ.போ.ச. ஊழியர்கள் பணிப்புறக்கணிப்பில் ஈடுபடுவதற்குத் தீர்மானித்துள்ள போதும், வடக்கு இ.போ.ச. ஊழியர்கள் அதில் பங்கேற்பதில்லை என்று நேற்று இரவு தீர்மானித்துள்ளனர். கொழும்பில் இது தொடர்பில் இன்று இடம்பெறும் சந்திப்பில் எடுக்கப்படும் முடிவைப் பொறுத்தே தமது அடுத்தகட்ட நகர்வு அமையும் என்றும் வடக்குப் பணியாளர்கள் தெரிவித்துள்ளனர். (ந.5.8)

## எதிர்வரும்...

கக்கட்டடம்என்பனவும்விடுவிக்கப்படவுள்ளன. அவற்றை மீளக் கையளிப்பது தொடர்பாக யாழ்ப்பாணம் மாவட்டக் கட்டளைத் தளபதி உறுதிப்படுத்தியுள்ளார். எம்மிடம் கையளிக்கப்பட்டதும் உரியவர்களிடம் கையளிக்கப்படும் - என்றார். (ற-105,26)

## கொக்காவிலில்...

மோசமாகவுள்ளதாகவும் அவர் கொழும்பு தேசிய மருத்துவமனைக்கு மாற்றப்பட்டுள்ளதாகவும் தெரிவிக்கப்படுகின்றது.

வீதியோரம் நிறுத்தப்பட்டிருந்த பாரவூர்தியுடன் மூடுந்து (ஹைஏஸ் வாகனம்) மோதியதாலேயே விபத்து ஏற்பட்டது என்று தெரிவிக்கப்படுகின்றது. விபத்தில் காயமடைந்தவர்கள் யாழ்ப்பாணம், சுன்னாகம் பகுதியைச் சேர்ந்தவர்கள்.

யாழ்ப்பாணத்திலிருந்து நுவரெலியாவுக்குச் சுற்றுலா சென்றவர்கள், யாழ்ப்பாணத்துக்கு திரும்பி வரும்போதே இந்த விபத்து இடம்பெற்றுள்ளது. காயமடைந்தவர்கள் கிளிநொச்சி மருத்துவமனையில் சேர்க்கப்பட்டனர். பிரசாத் என்ற இளைஞன் மேலதிக சிகிச்சைக்காக யாழ்ப்பாணம் போதனா மருத்துவமனைக்கு உடனடியாக மாற்றப்பட்டார். பின்னர் அவர் கொழும்பு தேசிய மருத்துவமனைக்கு மாற்றப்பட்டுள்ளார். (5.6)

## டில்லியில்...

உறுப்பினர்களின் குழு, சபாநாயகர் கரு ஜெயசூரிய தலைமையில் புதுடில்லிக்குப் பயணம் மேற்கொள்ளவுள்ளது.

இந்தக் குழுவில் எதிர்க்கட்சித் தலைவர் இரா.சம்பந்தன், சபை முதல்வர் அமைச்சர் லக்ஸ்மன் கிரியெல்ல, அமைச்சர் நிமல் சிறிபால டி சில்வா, கூட்டு எதிரணியின் தலைவர் நாடாளுமன்ற உறுப்பினர் தினேஸ் குணவர்த்தன, அகில இலங்கை மக்கள் காங்கிரஸ் தலைவர் அமைச்சர் ரிசாத் பதியுதீன், சிறிலங்கா முஸ்லிம் காங்கிரஸ் தலைவர் ரவூப் ஹக்கீம், மக்கள் விடுதலை முன்னணியின் நாடாளுமன்ற உறுப்பினர் விஜித ஹேரத், தமிழ் முற்போக்கு கூட்டணியின் தலைவர் மனோ கணேசன், ஈ.பி.டி.பி. செயலர் நாயகம் டக்ளஸ் தேவானந்தா ஆகியோர் இடம்பெறவுள்ளனர்.

இந்தியத் தலைவர்களுடன் இந்தக் குழு நடத்தவுள்ள பேச்சின்போது, பல்வேறு துறைகளின் ஒத்துழைப்புகளை வலுப்படுத்துவது குறித்து கலந்துரையாடவுள்ளது. புதிய அரசமைப்பு தொடர்பாகவும் இந்திய தரப்புக்கு விளக்கமளிக்கப்படவுள்ளது.

அதேவேளை, பா.ஜ.க. நாடாளுமன்ற உறுப்பினர் சுப்ரமணியன் சுவாமியின் அழைப்பின் பேரில் முன்னாள் அரச தலைவர் மகிந்த ராஜபக்ச புதுடில்லியில் எதிர்வரும் 12ஆம் திகதி நடைபெறும் கருத்தரங்கில் உரையாற்றவுள்ளார். அவர் எதிர்வரும் 11ஆம் திகதி புதுடில்லி செல்லவுள்ளார். அங்கு 3 நாள்கள் தங்கியிருப்பார். மகிந்த ராஜபக்ச புதுடில்லியில் தங்கியிருக்கும் தருணத்திலேயே பல கட்சி நாடாளுமன்றக் குழுவும் அங்கு அதிகார பூர்வ பயணத்தை மேற்கொள்ளவுள்ளது. (ற)

## வடக்கு...

அமைச்சரவை அனும்தி பெறப்படாமல், முதலமைச்சரின் தழுவல் அனுமதியுடன் மாத்திரம் சில விடயங்களை அதிகாரிகள் நகர்த்தியிருந்தாலும், மேற்குறித்த 27 விடயங்களுக்கும் அமைச்சரவையின் அனுமதி கிடைக்கப் பெற்றால் மாத்திரமே அதனைச் செயற்படுத்தலாம் என்பதால் அவை தேக்கமடைந்துள்ளன.

வடக்கு மாகாண அமைச்சர் பதவியிலிருந்து நீக்கப்பட்ட பா.டெனீஸ்வரன் மேன்முறையீட்டு நீதிமன்றில் வழக்குத் தாக்கல் செய்திருந்தார். ஜூன் மாதம் 29ஆம் திகதி இடைக்கால கட்டளை வழங்கப்பட்டது. டெனீஸ்வரன் அமைச்சராகத் தொடர்கின்றார் என்றும், அவர் அமைச்சராகத் தொடர்வதால் அமைச்சரவையில் 6 அமைச்சர்கள் தற்போது உள்ளார்கள் எனவும் அரசமைப்புக்கு அமைவாக அதனைச் சீர் செய்யுமாறும் கட்டளையில் கூறப்பட்டிருந்தது.

அமைச்சர்களின் பெயர்களைப் பரிந்துரைக்குமாறு முதலமைச்சர் சி.வி.விக்னேஸ்வரனிடம், வடக்கு மாகாண ஆளுநர் கோரியிருந்தார். முதலமைச்சர் இதுவரையில் அந்தப் பரிந்துரையை வழங்கவில்லை. இந்த விடயம் இழுபறி நிலையில் உள்ளது. இதற்கிடையில் தனது அனுமதியின்றி அமைச்சரவையைக் கூட்டக் கூடாது என்று அமைச்சரவையின் செயலரான, வடக்கு மாகாண தலைமைச் செயலர் அ.பத்திநாதனுக்கு வடக்கு மாகாண ஆளுநர் பணிப்புரை விடுத்திருந்தார்.

கடந்த ஜூன் மாதம் 6 ஆம் திகதியே அமைச்சரவை இறுதியாகக் கூட்டப்பட்டது. கடந்த மூன்று மாதங்களாக அமைச்சரவை கூட்டப்பட வில்லை.

வடக்கு மாகாண அபிவிருத்தித் திட்டங்கள், மாகாணசபை உறுப்பினர்களின் ஒதுக்கீடுகள் உள்ளிட்ட சில விடயங்கள் அமைச்சர் சபையின் அனுமதி பெறப்பட வேண்டும் என்ற போதும், முதலமைச்சரின் தழுவல் அனுமதியுடன் அவை நகர்த்தப்படுகின்றன.

வடக்கு மாகாண அமைச்சரவையின் அனுமதி பெற்றே ஆகவேண்டிய 27 விடயங்கள் தேக்கமடைந்துள்ளன. இதில் கல்வி அமைச்சின் 6 விடயங்களும், சுகாதார அமைச்சின் 5 விடயங்களும், விவசாய அமைச்சின் 6 விடயங்களும் உள்ளடங்கியுள்ளன.

நியமனங்கள், பதவி நீடிப்பு, ஒப்பந்தங்கள் உள்ளிட்ட மிக முக்கியமான விடயங்களே அமைச்சர் சபையின் அனுமதிக்காக காத்திருக்கின்றன. (5,105)

## தேசிய...

கூட்டத்துக்கு நிதிக் குழுவின் தலைவர் நாடாளுமன்ற உறுப்பினர் எம்.ஏ.சுமந்திரன் தலைமை வகித்தார். இந்தக் கூட்டத்தில் பங்கேற்று கருத்துத் தெரிவிக்கையிலேயே, இளையோர் மேற்படி குற்றச்சாட்டை முன்வைத்தார்கள்.

வரவு 1 செலவுத் திட்டத்தில் அரசால் விவசாயத் துறைக்கு ஒதுக்கப்படும் நிதி போதாது. அதனை அதிகரிக்க வேண்டும். முதியோர் களுக்கு வழங்கப்படும் கொடுப்பனவும் அதிகரிக்கப்பட வேண்டும். இந்தப் பிரச்சினை நீண்ட காலம் தொடர்வதாக அவர்கள் தெரிவித்துள்ளனர்.

சுயதொழில் மேற்கொள்ளும் பெண்கள், தமக்கான சந்தை வாய்ப்பு இல்லை என்று தெரிவித்துள்ளனர். அரசு அதனை அமைத்துத் தர வேண்டும் என்று கோரியுள்ளனர். மேலும் பல விடயங்கள் இந்தக் கூட்டத்தில் ஆராயப்பட்டுள்ளது. சுமார் மூன்று மணித்தியாலங்கள் இந்தக் கலந்துரையாடல் இடம்பெற்றுள்ளது. (5)


## கிங்ஸ்ரார் வென்றது

யாழ்ப்பாணம், செப். 3
சங்கானைசுப்பர்லீக்கால்பந்தாட்டத் தொடரில் நேற்றுமுன்தினம் இடம்பெற்ற ஆட்டத்தில் கிங் ஸ்ரார் அணிவெற்றிபெற்றது.
துணைவி சென் ஸ்ரார் விளையாட்டுக் கழக மைதானத்தில் நேற்று முன்தினம்பிற்பகல்3.30 மணிக்குஇடம்பெற்றஆட்டத்தில்வோரியர்அணியை எதிர்த்து கிங் ஸ்ரார் அணி மோதியது. 1:0 என்ற கோல் கணக்கில் கிங் ஸ்ரார் அணி வெற்றிபெற்றது. (ம-23)

## இன்றைய மோதல்கள்

யாழ்ப்பாணம், செப். 3
**கால்பந்தாட்டம்**
கொலின்ஸ் விளையாட்டுக்கழகம் யாழ்ப்பாணம் மாவட்ட ரீதியாக நடத்தும் கால்பந்தாட்டத் தொடரின் ஆட்டங்கள் கொலின்ஸ் விளையாட்டுக் கழக மைதானத்ததில் இடம்பெற்று வருகின்றன. இந்தத் தொடரில் இன்று திங்கட்கிழமை பிற்பகல் 3.30 மணிக்கு இடம்பெறும் ஆட்டத்தில் திக்கம் விளையாட்டுக் கழக அணியை எதிர்த்து சென். சேவியர் விளையாட்டுக் கழக அணி மோதவுள்ளது. மாலை 4.30 மணிக்கு இடம்பெறும் ஆட்டத்தில் இளவாலை யங்ஹென்றிஸ் விளையாட்டுக் கழக அணியை எதிர்த்து கருணாகரன் விளையாட்டுக் கழக அணி மோதவுள்ளது.

**தாச்சித் தொடர்**
கைதடி தென் கிழக்கு விநாயகர் சனசமூக நிலையத்தின் 71ஆவது ஆண்டு நிறைவை முன்னிட்டு விநாயகர் விளையாட்டுக் கழகம் தென்மராட்சி ரீதியாக நடத்தத் திட்டமிட்ட தாச்சி தொடரின் ஆட்டங்கள் விநாயகர் விளையாட்டுக் கழக மைதானத்தில் இடம்பெற்று வருகின்றன. இந்தத் தொடரில் இன்று இரவு 7.30 மணிக்கு இடம்பெறும் ஆட்டத்தில் மின்னொளி விளையாட்டுக் கழக பி அணியை எதிர்த்து பாரதி விளையாட்டுக் கழக அணி மோதவுள்ளது. (ம-23)



# றைட்ரோன் கழகத்தை வென்றது ஜொனியன்ஸ்

யாழ்ப்பாணம், செப். 3
ஏபி விளையாட்டுக் கழகம் நடத்தும் துடுப்பாட்டத் தொடரில் நேற்றுமுன்தினம் இடம்பெற்ற ஆட்டத்தில் ஜொனியன்ஸ் அணி வெற்றிபெற்றது.
யாழ்ப்பாணம் மத்திய கல்லூரி மைதானத்தில் இடம்பெற்ற இந்த ஆட்டத்தில் றைட்ரோன் விளையாட்டுக் கழக அணியை எதிர்த்து ஜொனியன்ஸ் விளையாட்டுக் கழக அணி மோதியது.
முதலில் துடுப்பெடுத்தாடிய ஜொனியன்ஸ் விளையாட்டுக் கழக அணி 20 பந்துப் பரிமாற்றங்கள் நிறைவில் 7 இலக்குகளை இழந்து 144 ஓட்டங்களைப் பெற்றது. அதிகபட்சமாக அன்புயன் 33 ஓட்டங்களையும், கௌமியன் 23 ஓட்டங்களையும் கபிலராஜ் 26 ஓட்டங்களையும் பெற்றனர். பந்துவீச்சில் டெஸ்மன் 4 இலக்குகளை வீழ்த்தினார்.
145 ஓட்டங்களைப்பெற்றால்வெற்றியென்ற இலக்குடன் பதிலுக்குத் துடுப்பெடுத்தாடிய றைட்ரோன் விளையாட்டுக்கழக அணி 20 பந்துப்பரிமாற்றங்கள் நிறைவில் 7 இலக்குகளை இழந்து 117 ஓட்டங்களைப் பெற்று வெற்றிபெற்றது. அதிகபட்சமாக விஸ்வா 50 ஓட்டங்களையும், உதயசாந் 11 ஓட்டங்களையும் பெற்றனர்.
பந்துவீச்சில் யதுசன் 3 இலக்குகளையும், லவேந்திரா 2 இலக்குகளையும் வீழ்த்தினர். (ம-23)

## ஜெயரூபனின் சதத்தினால் கே.சி.சி.சி. அரையிறுதியில்



யாழ்ப்பாணம், செப். 3
ஜொலிஸ்ரார்விளையாட்டுக்கழகம்நடத்தும் யாழ்ப்பாண மாவட்ட கிரிக்கெட் சங்கத்தில் பதிவு செய்யப்பட்ட கழகங்களுக்கு இடையிலானதொடரில்கே.சி.சி.சி. அணிஅரையிறுதிக்குத் தகுதி பெற்றது.
யாழ்ப்பாணம்இந்துகல்லூரிமைதானத்தில் நேற்றுமுன்தினம்நடைபெற்றகாலிறுதியாட்டத்தில் கே.சி.சி.சி. அணியை எதிர்த்து யூனியன்ஸ் அணி மோதியது. முதலில் துடுப்பெடுத்தாடிய யூனியன்ஸ் அணி 29.3 பந்துப்பரிமாற்றங்களில்சகல இலக்குகளையும்இழந்து164 ஓட்டங்களைபெற்றது. அதிகபட்சமாக தயாளன் 30, மோர்கன்ராஜ் 25, துசியாந் 19, சியாந்தன் 18 ஓட்டங்களைப் பெற்றனர். பந்துவீச்சில் கே.சி.சி.சி அணியின் சார்பில் நிமலதாஸ் 3, சத்தியன் 2, சாம்பவன் 2 இலக்குகளையும் கைப்பற்றினர்.
பதிலுக்குத் துடுப்பெடுத்தாடிய கே.சி.சி.சி அணி 17.5 பந்துப்பரிமாற்றங்களில் 3 இலக்குகளை மாத்திரம் இழந்து 165 ஓட்டங்களைப்பெற்று 8 இலக்குகளால்வெற்றிபெற்று அரையிறுதியாட்டத்துக்குத் தகுதி பெற்றது. அவ்வணிசார்பில்ஜெயரூபன்101, ஜனுதாஸ் 32 ஓட்டங்களைஅதிகபட்சமாகப்பெற்றனர். பந்துவீச்சில்யூனியன்ஸ்அணியின்சார்பில் சியாந்தன், தயாளன், தர்சன் ஆகியோர்தலா ஓர் இலக்கைக்கைப்பற்றினர். (ம-422)

## சமநிலை

யாழ்ப்பாணம், செப். 3
சங்கானைசுப்பர்லீக்கால்பந்தாட்டத்தொடரில் நேற்றுமுன்தினம்இடம்பெற்றஆட்டமொன்று சமநிலையில் முடிவடைந்தது.
துணைவி சென் ஸ்ரார் விளையாட்டுக் கழக மைதானத்தில்மாலை5மணிக்குஇடம்பெற்ற ஆட்டத்தில் அராலி லையன்ட்ஸ் அணியை எதிர்த்து வட்டு ஈகிள் அணி மோதியது.
இரண்டு அணியினரும் தலா ஒரு கோலைப் பதிவுசெய்ததைஅடுத்துஆட்டம்சமநிலைகண்டது. (ம-23)

## மின்னொளி அசத்தல்

யாழ்ப்பாணம், செப். 3
கைதடி தென் கிழக்கு விநாயகர் சனசமூக நிலையத்தின் 71ஆவது ஆண்டு நிறைவை முன்னிட்டு விநாயகர் விளையாட்டுக் கழகம் நடத்தும் தாச்சித் தொடரில் நேற்றுமுன்தினம் இடம்பெற்ற ஆட்டத்தில் மின்னொளி விளையாட்டுக்கழக அணி வெற்றிபெற்றது.
விநாயகர்விளையாட்டுக்கழகமைதானத்தில் நேற்றுமுன்தினம்இடம்பெற்றஏபிரிவினருக்கானஆட்டத்தில்மின்னொளிவிளையாட்டுக் கழக அணியை எதிர்த்து கைதடி மத்தி குமரநகர் விளையாட்டுக் கழக அணி மோதியது.
10:4 என்ற புள்ளிகளின் அடிப்படையில் மின்னொளி விளையாட்டுக் கழக அணி வெற்றி பெற்றது. (ம-23)



# மெசியா கிண்ணம் வென்றது

யாழ்ப்பாணம், செப். 3
கிராஞ்சி செந்தமிழ் விளையாட்டுக் கழகம் அழைக்கப்பட்ட கால்பந்தாட்டக் கழகங்களுக்கு இடையில்நடத்திய விலகல் முறையிலான கால்பந்தாட்டத் தொடரில் மெசியா விளையாட்டுக் கழக அணி சம்பியனானது.
கிராஞ்சி செந்தாரகை விளையாட்டுக் கழக மைதானத்தில் இடம்பெற்ற இந்த இறுதியாட்டத்தில் மெசியா விளையாட்டுக் கழக அணியை எதிர்த்து இரணைமாதாநகர் சென். மேரிஸ் விளையாட்டுக்கழக அணி மோதியது.
ஆட்டத்தின் முதல் நிமிடத்திலேயே மெசியா அணியின் முதலாவது கோலைப் பதிவுசெய்தர் சஜீவன். அவர் 18ஆவது நிமிடத்தில் மெசியா அணியின்இரண்டாவதுகோலையும்பதிவுசெய்தார். முதல் பாதியின் முடிவில் 2:0 என்ற கோல் கணக்கில்முன்னிலைவகித்ததுமெசியாஅணி. இரண்டாம்பாதியின்16ஆவதுநிமிடத்தில்சென். மேரிஸின்முதலாவது கோலைப்பதிவுசெய்தார் சதீஸ்குமார்.
பதிலுக்குஆட்டத்தின்20,23ஆவதுநிமிடங்களில் மெசியாவின்சார்பாகசஜீவன்மேலும்இருகோல்களைப்பதிவுசெய்தார். முடிவில்4:1என்றகோல் கணக்கில் வெற்றிபெற்று கிண்ணம் வென்றது மெசியா. (ம-23)

## வெற்றிபெற்றது மகா விஸ்ணு


யாழ்ப்பாணம், செப். 3
கைதடி தென்கிழக்கு விநாயகர் சனசமூக நிலையத்தின் 71ஆவது ஆண்டு நிறைவை முன்னிட்டு விநாயகர் விளையாட்டுக் கழகம் தென்மராட்சி ரீதியாக நடத்தும் தாச்சித் தொடரில்; நேற்றுமுன்தினம் இடம்பெற்ற ஆட்டத்தில் மகா விஸ்ணு விளையாட்டுக் கழக அணி வெற்றி பெற்றது.
விநாயகர் விளையாட்டுக் கழக மைதானத்தில் நேற்றுமுன்தினம் இடம்பெற்ற ஏ பிரிவி னருக்கான ஆட்டத்தில் மகாவிஸ்ணு விளையாட்டுக் கழக அணியை எதிர்த்து கைதடி ஸ்ரார் விளையாட்டுக் கழக அணி மோதியது. 13:3 என்ற புள்ளிகளின் அடிப்படையில் மகாவிஸ்ணு விளையாட்டுக் கழக அணி வெற்றி பெற்றது. (ம-23)


## துர்க்கா வெற்றி!

யாழ்ப்பாணம், செப். 3
கைதடி தென்கிழக்கு விநாயகர் சனசமூக நிலையத்தின் 71ஆவது ஆண்டு நிறைவை முன்னிட்டு விநாயகர் விளையாட்டுக் கழகம் நடத்தும் தாச்சித் தொடரில் நேற்றுமுன்தினம் இடம்பெற்ற ஆட்டத்தில் துர்க்கா விளையாட்டுக் கழக அணி வெற்றிபெற்றது.
விநாயகர் விளையாட்டுக் கழக மைதானத்தில் நேற்றுமுன்தினம் இடம்பெற்ற பி பிரிவின ருக்கான ஆட்டத்தில் துர்க்கா விளையாட்டுக் கழக அணியை எதிர்த்து கைதடி ஐக்கிய விளையாட்டுக் கழக அணி மோதியது. 12:2 என்ற புள்ளிகளின் அடிப்படையில் துர்க்கா விளையாட்டுக் கழக அணி வெற்றிபெற்றது. (ம-23)

## ஜோகோவிக் நேர்செற் வெற்றி

அமெரிக்கப் பகிரங்கத் தொடரின் ஐந்தாவது சுற்றில் நேர்செற் கணக்கில் வெற்றிபெற்றார் சேர்பியாவைச் சேர்ந்த வீரர் ஜோகோவிக்.
ஜோகோவிக்கை எதிர்த்து ரஷ்ய வீரர் ஹசட் மோதினார். ஐந்து செற்களைக் கொண்டதாக ஆட்டம் அமைந்தது. 6:2, 6:3, 6:3 என்ற புள்ளிகளின் அடிப்படையில் எதிர்ப்பு இல்லாமல் வெற்றிபெற்று முன்னேற்றம் கண்டார் ஜோகோவிக். (ம)





# மொயின் அலியிடம் இந்திய அணி சரண்

## தொடரையும் பறிகொடுத்தது

இங்கிலாந்துக்கு எதிரான நான்காவது டெஸ்ட் ஆட்டத்தில் 60 ஓட்டங்களால் தோல்வியடைந்தது இந்திய அணி. இதையடுத்து இங்கிலாந்து அணி கிண்ணம் வெல்வதை உறுதி செய்தது. ஐந்து ஆட்டங்களைக் கொண்ட தொடரில் இங்கிலாந்து அணி 2:1 என்ற அடிப்படையில் முன்னிலையில் இருந்ததால் தொடரில் சமநிலையைப் பேணுவதற்கு இந்த ஆட்டத்தில் வெற்றி பெற வேண்டும் என்ற இக்கட்டான நிலை இந்தியாவுக்கு இருந்தது.
நாணயச் சுழற்சியில் வெற்றிபெற்று முதலில் துடுப்பெடுத்தாடி இங்கிலாந்து அணி 246 ஓட்டங்களுக்குச் சகல இலக்குகளையும் இழந்தது. கரன் அதிகபட்சமாக 78 ஓட்டங்களையும், மொயின் அலி 40 ஓட்டங்களையும், ஸ்ரோக்ஸ் 23 ஓட்டங்களையும் பெற்றனர். பந்துவீச்சில் பும்ரா 3 இலக்குகளையும், இசாந் சர்மா, சமி, அஸ்வின் மூவரும் தலா 2 இலக்குகளையும், பாண்டியா ஓர் இலக்கையும் கைப்பற்றினர்.
பதிலுக்குக் களமிறங்கிய இந்திய அணி சகல இலக்குகளையும் இழந்து 273 ஓட்டங்களைப் பெற்றது. அதிகபட்சமாக புஜாரா ஆட்டமிழக்காமல் 132 ஓட்டங்களைப் பெற்றார். அணித் தலைவர் கோக்லி 46 ஓட்டங்களையும், தவான் 23 ஓட்டங்களையும் பெற்றனர். பந்துவீச்சில் மொயின் அலி 5 இலக்குகளையும், புரோட் 3 இலக்குகளையும், கரன், ஸ்ரோக்ஸ் இருவரும் தலா ஓர் இலக்கையும் கைப்பற்றினர்.
இரண்டாவது இன்னிங்ஸை ஆம்பித்த இங்கிலாந்து அணி 271 ஓட்டங்களில் சகல இலக்குகளையும் இழந்தது. பட்லர் 69 ஓட்டங்களையும், ரூட் 48 ஓட்டங்களையும், கரன் 46 ஓட்டங்களையும் பெற்றனர். பந்துவீச்சில் சமி 4 இலக்குகளையும், இசாந் சர்மா 2 இலக்குகளையும், அஸ்வின், பும்ரா இருவரும் தலா ஓர் இலக்கையும் கைப்பற்றினர்.
245 ஓட்டங்களை இலக்காகக் கொண்டு களமிறங்கிய இந்திய அணி ஆரம்பத்தில் 22-3 என்று தடுமாற்றம் கண்டது. மத்திய வரிசையில் அணித் தலைவர் கோக்லி, உபதலைவர் ரகானே இணைந்து இணைப்பாட்டமாக 100 ஓட்டங்களைப் பகிர்ந்து அணியை வலுப்படுத்தினர். அணி 123 ஓட்டங்களைப் பெற்றிருந்த நிலையில் மொயின் அலியின் பந்துவீச்சில் ஆட்டமிழந்தார் கோக்லி. ஆட்டத்தின் திருப்புமுனையும் இதுவே. மொயின் அலியின் பந்துவீச்சு திடீர் எழுச்சி பெற்றதும் கோக்லியின் சரிவை அடுத்தே. அதன்பின்னர் மொயின் அலியிடம் இந்திய வீரர்கள் ஒவ்வொருவராகச் சிக்கினர் கள். பாண்டியா ஓட்டமெதையும் பெறவில்லை. ரகானே, பண்ட், சமி என்று வரிசையாக மொயினிடம் வீழ்ந்தனர். முடிவில் 184 ஓட்டங்களில் சகல இலக்குகளையும் இழந்து 60 ஓட்டங்களால் தோல்வியடைந்தது இந்திய அணி. (ம)

## நிசிகோரி மிரட்டல்!

அமெரிக்கப் பகிரங்கத் தொடரில் ஆண்கள் ஒற்றையர் பிரிவில் காலிறுதிக்கு முன்னைய சுற்றுக்குத் தகுதி பெற்றார் ஜப்பான் வீரர் நிசிகோரி.
நியூயோர்க் நகரில் இந்த ஆட்டங்கள் இடம்பெற்று வருகின்றன. பன்னாட்டுத் தரப்படுத்தலில் 21ஆம் நிலையில் உள்ளவரும் ஜப்பானைச் சேர்ந்த வீரருமான நிசிகோரியை எதிர்த்து பன்னாட்டுத் தரப்படுத்தலில் 13ஆம் நிலையில் உள்ளவரும் ஆர்ஜென்ரீன வீரருமான ஸ்வேட்மன் மோதினார். ஐந்து செற்களைக் கொண்டதாக ஆட்டம் அமைந்தது. முதலிரு செற்களையும் 6:4, 6:4 என்ற புள்ளிகளின் அடிப்படையில் கைப்பற்றினார் நிசிகோரி. மூன்றாவது செற்றை 7:5 என்ற புள்ளிகளின் அடிப்படையில் கைப்பற்றி நிசிகோரியின் நேர்செற் வெற்றிவாய்ப்பை இல்லாமல் செய்தார் ஸ்வேட்மன். நான்காவது செற் 6:1 என்ற புள்ளிகளின் அடிப்படையில் நிசிகோரியின் வசமானதை அடுத்து அவர் 3:1 என்ற செற் கணக்கில் வெற்றிபெற்று காலிறுதிக்கு முன்னைய சுற்றுக்குத் தகுதி பெற்றார். (ம)



## காலிறுதிக்கு முன்னைய சுற்றில் பெடரர்



பன்னாட்டு அந்தஸ்து பெற்ற பகிரங்கத் தொடர்களில் ஒன்றான அமெரிக்கப் பகிரங்கத் தொடரில் ஆண்கள் ஒற்றையர் பிரிவில் காலிறுதிக்கு முன்னைய சுற்றுக்குத் தகுதி பெற்றார் சுவிட்சர்லாந்து வீரர் றோயர் பெடரர். பன்னாட்டுத் தரப்பதடுத்தலில் இரண்டாவது இடத்தில் உள்ளவரான பெடரரை எதிர்த்து ஆஸ்திரேலிய வீரர் நிக் கிர்ஜியோஸ் மோதினார். ஐந்து செற்களைக் கொண்டதாக ஆட்டம் அமைந்தது. முதலிரு செற்களையும் 6:4, 6:1 என்ற புள்ளிகளின் அடிப்படையில் மிகமிக இலகுவாகக் கைப்பற்றினார் பெடரர்.
மூன்றாவது செற்றிலும் பெடரர் வெற்றி பெற்றால் கிர்ஜியோஸ் வெளியேற வேண்டும் என்ற நிலை. இதனால் மூன்றாவது செற்றில் கிர்ஜியோஸ் கடும் போராட்டத்தை வெளிப்படுத்தினார். எனினும் மூன்றாது செற்றை 7:5 என்ற புள்ளிகளின் அடிப்படையில் கைப்பற்றினார் பெடரர். முடிவில் அவர் 3:0 என்ற நேர்செற் கணக்கில் வெற்றிபெற்று காலிறுதிக்கு முன்னைய சுற்றுக்குத் தகுதி பெற்றார். காலிறுதிக்குத் தகுதிபெறும் ஆட்டத்தில் ஆஸ்திரேலிய வீரர் மில்மனை பெடரர் எதிர்கொள்கிறார். (ம)

# சிறந்த வீரராக லூகா மோட்ரிச்



ஐரோப்பியக் கால்பந்தாட்டச் சம்மேளனத்தின் இந்த ஆண்டுக்கான சிறந்த வீரராக ரியல்மட்ரிட்கழகத்துக்காகவிளையாடிவரும் லூகா மோட்ரிச் தெரிவானார்.

ஐரோப்பிய கால்பந்தாட்ட சம்மேளனம் ஆண்டு தோறும் சிறந்த வீரர் விருதை வழங்கி வருகிறது. இந்த வருடத்துக்கான சிறந்த வீரர் விருதுக்கான மூன்று வீரர்கள் கொண்ட பட்டியலில் ரியல் மட்ரிட் கழகத்தைச் சேர்ந்த லூக்கா மோட்ரிச், ஜுவென்டாஸ் கழகத்தைச் சேர்ந்த ரொனால்டோ, லிவர்பூல் கழகத்தைச் சேர்ந்த சாலா ஆகியோர் இடம்பெற்றிருந்தனர். ரொனால்டோ இந்த விருதை ஏற்கனவே கைப்பற்றியுள்ளார். அத்துடன் கடந்த பருவகாலத்தில் சிறந்த பெறுபேற்றையும் வெளிப்படுத்தியிருந்தார். இதனால் இந்த விருதை அவர் வெல்வதற்கு வாய்ப்புக்கள் உள்ளன என்று கருதப்பட்டது. எனினும், ரொனால்டோ, சாலா ஆகியோரைப் பின்தள்ளி விருதைத் தனதாக்கினார் ரியல் மட்ரிட் கழகத்துக்காக விளையாடிவரும் மோட்ரிச்.

மோட்ரிச் குரோசிய தேசிய கால்பந்தாட்ட அணியின் தலைவராகவும் உள்ளார். ரஷ்யாவில் அண்மையில் நடைபெற்ற கால்பந்தாட்ட உலகக் கிண்ணத் தொடரில் குரோசிய அணி இறுதியாட்டம் வரைக்கும் முன்னேறியிருந்தது. இதில் மோட்ரிச்சின் பங்களிப்பு மிக மிக அதிகம். (ம)


CLERK தேவை
யாழ். நகரில் இயங்கும் கல்வி நிறுவனம் ஒன்றிற்கு அலுவலக உதவியாளர் (பெண்) தேவை. தொடர்புகளுக்கு - 077 4598 440






ALLIANCE FRANCAISE DE JAFFNA
பிரெஞ்சு மொழியை பிரெஞ்சு முறையில் கற்றுக்கொள்ளுங்கள்
af பிரெஞ்சு மொழி
- பிரெஞ்சு கற்பதற்கு வடமாகாணத்தில் FRENCH EMBASSY கீழ் இயங்கும் சர்வதேச நிறுவனம் ALLIANCE FRANCAISE மட்டுமே.
- அங்கீகரிக்கப்பட்ட CERTIFICATES & INTERNATIONAL DIPLOMAS (DELF, DALF)
- யாரும் படிக்கலாம்.

www.ambafrancelk.org
021 222 8093 61, கச்சேரி-நல்லூர் வீதி, யாழ்ப்பாணம்.

New Science World
Navalar Road Junction, Brown Road, Jaffna.
2019 A/L
DAY CLASSES
2018 August பரீட்சைக்கு தோற்றியவர்களுக்குரியது

Physics
திரு. R. குகன்
திரு. R. குமரன் } 11.30 am - 1.30 pm.

Chemistry
திரு. டயஸ்
திரு. K.T. சிவகுமார் } 9.30 am - 11.30 am.

Biology
திரு. N.T. கஜேந்திரன் - 7.30 am - 9.30 am

Com. Maths
திரு. S. கிருஷ்ணா - 7.30 am - 9.30 am
(யாழ். முன்னாள் பிரபல ஆசிரியர்)
திரு. S.S. செந்தில்ராஜ் - செவ், புதன், வெள்ளி 4.30 pm - 6.00pm
திரு. T. சஞ்ஜீவன் - சனி, ஞாயிறு
English medium 10.00 am - 12.00

ஆரம்பம் : 05.09.2018 புதன் காலை 7.30
தொடர்புகளுக்கு: 077 336 4055/ 021 221 6690
www.newscience world.net

SPOKEN ENGLISH
WITH DIPLOMA CERTIFICATE
இம்முறை A/L எழுதியோர், பல்கலை புதுமுக மாணவர்கள் இளைஞர், யுவதிகள் மற்றும் தொழில்புரிவோருக்கான
சனி, ஞாயிறு பிரிவுகள் ஆரம்பம் 15.08.2018 சனி
1. காலை 08.00-10.00 3. பி.பகல் 01.00-03.00
2. காலை 10.00-12.00 4. மாலை 03.00-05.00
அடிப்படை ஆங்கில அறிவற்றவர்களுக்கும் கதைத்தலுக்கு தேவையான முழுமையான ஆங்கிலம் கற்பிக்கப்படும்
வாரநாள் பிரிவுகள் ஆரம்பம் : 10.08.2018
திங்கள், புதன் 3 மாத பயிற்சி
பிரிவு1: 08-10 பிரிவு2: 10-12 பிரிவு3: 03-05
10.08.2018 வரைமட்டுமே முன்பதிவுகள் செய்யமுடியும்
SAAMSON
279, வெலிங்டன் சந்தி, பெருமாள் கோயிலடி, யாழ்நகர்
021 320 3313, 077 621 4567

NEW SCIENCE HALL
KANNATHIDDY ROAD JAFFNA
2019 A/L DAY CLASSES
2018 AUGUST பரீட்சைக்குத் தோற்றியவர்களுக்குரியது.
திங்கள் தொடக்கம் வெள்ளி

| | |
|---|---|
| COM.MATHS 7.00 | திரு.P. செந்தில்நாதன் திரு. S. சிவகரன் |
| BIOLOGY 7.00 - 9.30 | வழமையான ஆசிரியருடன் திரு.T.கெங்காதரன் |
| CHEMISTRY 9.30 - 11.30 | திரு.K.சிவத்திரன் |
| PHYSICS 11.30 - 1.30 | திரு.G.பிரபா திரு. S. சோதிலிங்கம் |
| AGRICULTURE | திரு.M.றோய் |

ஆரம்பம் :- 05.09.2018 புதன் காலை 7.00 தொடர்பு :- 077 791 7611
https://Facebook.com / new science hall jaffna.

வெளிநாடுகளுக்கான துரித தபால்கள், பொதிகள் சேவை
- அதி விரைவு, பாதுகாப்பு, நம்பகத்தன்மை
- கடலுணவு, இறைச்சி, எண்ணெய் வகை, மருந்துப் பொருள்கள், பழ வகைகள், பால் மா வகைகள் என்பவற்றையும் அனுப்பி கொள்ள முடியும்.
- நியாயமான கட்டணத்தில் நிறைந்த சேவை.

20 வருடகால அசைக்க முடியாத நம்பிக்கையை வென்ற நாம்
அருள் குளோபல் எக்ஸ்பிறஸ்
1, பிறவுண் வீதி, நாவலர் சந்தி, யாழ்ப்பாணம்.
021 222 6113


இப்பத்திரிகை, நியூ உதயன் பப்ளிக்கேசன் (பிறைவேற்) லிமிட்ரெட் நிறுவனத்தினரால் யாழ்ப்பாணம் கஸ்தூரியார் வீதியில் 361 ஆம் இலக்கத்தில் உள்ள அவர்களது பணிமனையில் 03.09.2018 இல் அச்சிட்டு வெளியிடப்பெற்றது.